
# யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை

## பருத்தித்துறை

# பொன்விழா மலர்




## 1959 - 2009

# யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை

பருத்தித்துறை

# பொன்விழா மலர்

# 1959 - 2009

## தூரநோக்கு- Vision

மாறிவரும் உலகிற்கேற்ப தம்மை தயார்படுத்திக் கொள்ளக் கூடிய மாணவர் சமூகம்.

## பணிக்கூற்று- Mission

எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய வினைத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்க, பொருத்தமான ஆசிரியர் வாண்மையை விருத்தி செய்வதுடன், கலை, கலாச்சாரத்தின் மூலம் சமூகத்தையும் உள்வாங்குதல்.

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்கவே
நீடூழி வாழ்கவே
வளரும் கலைகள் அருளும்
கலைமகள் அரசி வாழ்கவே

வாழ்க.............

புலோலி கிழக்கில் அரசினர் தீந் தமிழ்
கலவன் பாடசாலை பூஞ்சோலை
புனித மெய்ஞ்ஞான கீதப்
பேரிசை முழங்கிட

வாழ்க...........

வெந்தணல் வீழ்ந்த பொன்னது போலவே
செந்தமிழோடு ஆங்கிலம் கணிதம்
உவந்திட நா கிடும்
உயர் மிகு சாலை

வாழ்க..............

பண்ணும் நீயே பரதமும் நீயே
பாடவைத்தனன் பயன் தருபவள் நீயே
எண்ணிடவே சிறார்
துள்ளிடும் சாலையாம்

வாழ்க..............

நற்றமிழ் வாசம் புவியெங்கும் ஓங்கும்
நானில மெங்கும் புகழ்மணம் வீசும்
நற்றவ வானிலும்
நனி சிறந்த சாலையாம்

வாழ்க..................

தானங்கள் யாவினும் மேன்மையாம் கல்வி
தானத்துக்கோர் நிகர் ஏதடி பாரில்
சான்று நிறைந்த கலைப்
பொக்கிசம் எம் சாலை


வாழ்க....................

# கல்லூரியின் அதிபர்




திரு.கந்தசாமி நித்தியானந்தன் - S.L.T.S. - I, B.Sc[BAd.] Hons., Dip. in Ed., MEd.

# எமது பாடசாலையின் ஸ்தாபகர்கள்




அமரர் க.பசுபதி




அமரர் M.C.சுப்பிரமணியம்


# எமது பாடசாலையின் அதிபர்கள் வரிசை....




திரு.பி.ஜே.அமரலி
(01.09.1958 - 26.07.1959)



திரு.V.வேலுப்பிள்ளை
(01.01.1960 - 30.06.1960)




திரு.K.தங்கராசா
(27.07.1959 - 31.05.1961)




திரு.V.செல்லையா
(01.02.1961 - 21.10.1968)



திரு.V.வைரமுத்து
(22.10.1968 - 01.01.1972)



திரு.ச.திருப்பதி
(02.01.1972 - 04.06.1974)



திரு.ச.சின்னரத்தினம்
(05.06.1974 - 08.01.1978)



திரு.சி.கணேசமூர்த்தி
(09.01.1978 - 19.10.1992)



திரு.ஆ.மகேசு
(20.10.1992 - 10.04.2001)



திரு.மு.செல்வராசா
(11.04.2001 - 04.07.2006)




திரு.க.நித்தியானந்தன்
2007.07.05 இலிருந்து

## எமது ஆசிரியர்கள் வரிசையில்...........

1968 ம் ஆண்டிலிருந்து இன்று வரை இப்பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருப்போர் விபரம்

| | | |
|---|---|---|
| 01 | திரு.K.செல்லையா | 1968 |
| 02 | திரு.K.கதிரவேலு | 1968 |
| 03 | திரு.K.இரகுநாதன் | 1968 |
| 04 | திரு.S.செல்லையா | 1968 |
| 05 | திரு.V.சின்னத்தம்பி | 1968 |
| 06 | திருமதி.L.இராஜசிங்கம் | 1968 |
| 07 | செல்வி.S.சிவபாக்கியம் | 1968 |
| 08 | திரு.V.பரராஜசிங்கம் | 1968 |
| 09 | திரு.S.சின்னத்துரை | 1972 |
| 10 | செல்வி.R.வேலன் | 1973 |
| 11 | திரு.K.தர்மலிங்கம் | 1974 |
| 12 | திரு.M.நமசிவாயம் | 1975 |
| 13 | திரு.P.கனகசபை | 1978 |
| 14 | திருமதி.J.சிவபாதம் | 1986 |
| 15 | திரு.P.ஸ்ரீகுமரபரன் | 1990 |
| 16 | செல்வி.R.கலைச்செல்வி | 1990 |
| 17 | திருமதி.J.கமலா | 1992 |
| 18 | திருமதி.S.ஸ்ரீசெகரட்சகமூர்த்தி | 1992 |
| 19 | செல்வி.P.இராசகுமாரி | 1993 |
| 20 | திரு.T.கணேஸ்வரன் | 1995 |
| 21 | செல்வி.T.வதனி | 1996 |
| 22 | செல்வி.V.சௌதாமினிதேவி | 1997 |
| 23 | செல்வி.S.ஜெனீபா | 1998 |
| 24 | திருமதி.M.D.அரியரஞ்சன் | 1999 |
| 25 | திரு.S.சிவறங்கன் | 2000 |
| 26 | திரு.S.கணேசலிங்கம் | 2000 |
| 27 | திரு.S.துரைராசா | 2001 |
| 28 | செல்வி.S.குமாரிஅனுஷா | 2001 |
| 29 | திருமதி.U.பாலஸ்கந்தராசா | 2001 |
| 30 | திருமதி.T.சுபேந்திரன் | 2002 |
| 31 | திருமதி.R.J.யோகநாதன் | 2003 |
| 32 | செல்வி.P.சந்தனா | 2008 |
| 33 | திரு.S.சிவதாசன் | 2009 |
| 34 | திருமதி.J.பிரேமினா | 2009 |

## பாடசாலையின் குருளைச் சாரணர் அணி – 2008



# ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றியாளர்கள்




த.இந்துஜா - 164




க.நிரோஜன் - 151




ச.கிருஜா - 142




செ.கேபினி - 123




ஜெ.சிந்துஜன் - 137




ஆ.விதுசன் - 133




த.வேணுஜா - 137




ஜோ.லூயிஸ்செபஸ்ரின்-146



ஆ.மதுசன் - 145



து.சுவர்ணராஜ் - 141




பி.ஸ்ரெபான் - 140



சா.சாருஜன் - 145



ச.நிதர்சனா - 122



கு.தனுஷன் - 118


நிகழ்வுகள் சிலவற்றின் நிழல்கள்



முன்னைய அதிபரின் பிரியாவிடை



பரிசளிப்பு விழா – 2007



இல்ல விளையாட்டுப் போட்டி – 2008



இல்ல விளையாட்டுப் போட்டி – 2009

## பொன்விழாக் குழு

1. தலைவர்:- திரு.க.நித்தியானந்தன்
2. செயலாளர்:- திரு.பொ.றெஜினோல்ட்
3. பொருளாளர்:- திரு.சி.துரைராசா

4. திரு.நா.சின்னையா
5. திரு.V.சங்கரப்பிள்ளை
6. திரு.S.செல்வச்சந்திரன்
7. திருமதி.J.மன்மதராசா
8. திருமதி.P.குலேந்திரன்
9. செல்வன்.A.மிதுனன்
10. செல்வன்.S.கபிலன்
11. செல்வன்.R.சுசில்ராஜ்
12. செல்வன்.J.சிந்துஜன்
13. செல்வி.T.துஷ்யந்தினி
14. செல்வி.A.சுபைதா
15. செல்வி.K.காமினி

## மலராக்கக் குழுவினர்.

1. திரு.க.நித்தியானந்தன்
2. திரு.சி.துரைராசா
3. திரு.வே.உதயமோகன்
4. திருமதி.மே.டொ.அரியரஞ்சன்
5. திருமதி.ரு.ஜெ.யோகநாதன்
6. திருமதி.உ.பாலஸ்கந்தராசா
7. செல்வி.தி.துஷ்யந்தினி
8. செல்வன்.ஜெ.கீர்த்தனன்.


## பொன்விழாக் குழுவினர்



## மலராக்கக் குழுவினர்



## இதழாசிரியரிடமிருந்து.....



தனது வரலாற்றை அறியாத சமுதாயம் நினைவாற்றலை இழந்துவிட்ட மனிதனுக்கு சமமானது எனலாம். அவ்வாறே கல்விச் சாதனைகளின் வரலாற்றை ஆதாரமாகக் கொண்ட கடந்த கால வரலாற்றுச் சாதனைகள் எமது இன்றைய மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்தவகையில் புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் கடந்த ஐம்பது வருடகால கல்விச் சாதனைகள் வரலாறு மற்றும் இன்னோரன்ன பல்வேறு ஆக்கங்களையும் பொன்விழா இதழாகிய "பொன்விழா மலர்" அறிவு வேட்கை கொண்ட உங்களுக்கு ஓர் அரிய விருந்தாக அமைந்து உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

வாழ்க்கை என்னும் ஓடத்தில் பயணம் செய்யும் மனிதனின் வளர்ச்சி என்னும் பருவம், பள்ளி என்னும் கடலில் தான் ஆரம்பமாகின்றது. ஒரு மனிதனை முழு மனிதனாக்குவது கல்வி. கேள்வியைத் தொடர்ந்து வரும் அறிவு. அதனால் தான் அகிலத்தில் அணையா விளக்கு கல்விச் செல்வம் என்று சான்றோரால் வர்ணிக்கப்படுகின்றது. இத்தகைய கல்வியை மனமகிழ்ச்சியுடன் யாவருக்கும் அள்ளி வழங்கி இன்பம் காண்பவர் ஆசிரியர். இவர்கள் எல்லோருக்கும் நடுவில் நாயகனாக மிளிர்பவர் அதிபர். அத்தகைய அதிபர்களின் தலைமையில் இப்பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் பார் போற்றப் பாரினிலே வேரூன்றி நிற்பவர்கள் ஒன்றாகப் பழகிப் பிரிந்து தான் தன்பம் என்று பண்புடனே தண்மணம் பரப்பி நிற்கின்றது இம்மலர்.

இம்மலரானது கல்லூரி கீதம் முதல் மதகுருமாரின் ஆசிச்செய்திகளையும் அன்பர்கள் ஆதரவாளர்களின் வாழ்த்துச் செய்திகளையும், அறிவுசார் ஆசான்களின் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆய்வுக்கட்டுரைகளையும், "வைத்தியர் கலாநிதி Dr.P.அசோகனின்" பயன்மிகு துறைசார் கட்டுரைகளையும் , பாடசாலை ஆசிரியர்களின் பரிந்துரைப்பு ஆக்கங்களையும், தோள்கொடுத்து துணை நிற்கும் பழைய மாணவர்களின் அறிவியல்சார் ஆக்கங்களையும், பாசத்தின் விளக்காக எம்மில் ஒளிபரப்பும் மாணவமணிகளின் ஆக்கங்களையும் தம்சிரம் மேல் தாங்கிக்கொண்டு தண்ணளியுடன் ஒளிவீசும் பொன்மலர் தான் புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் பொன்விழா மலர் (இதழ்) என்பதைக் கூறுவதில் பெருமையடைகின்றேன். "இது வருங்கால சந்ததியினரின் அறிவியல் சார்ந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும் பொன்மணி"

இவ்விதழ் ஊடாக எமது பாடசாலையின் செயல்திறன் மிக்க சிறப்புக்கள் யாவும் திக்கெட்டும் புகழ் பரப்பட்டும். இங்கு கல்வி பயின்று வரும் சிறார்கள் பாரினிலே சிறக்கட்டும். அதிபர், ஆசிரியர்கள், கல்வி வளர்ச்சிக்கு அறிவூட்டும் ஏணிப்படிகளாகட்டும். பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள், அனைவரும் பாடசாலை வளர்ச்சியில் தாங்கி நிற்கும் தூண்களாகட்டும்.


இம்மலரானது உள்ளே நான்கு இயல்களாக வகைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன ஆய்வுக்கட்டுரைகள், ஆசிரியர் ஆக்கங்கள், பழைய மாணவர்களின் அறிவியல் ஆக்கங்கள், பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் என்பனவாகும்.

இந்நூல் புத்தழகுடனும் புதுப்பொலிவுடனும் எல்லோரது மனதையும் கவரும் வகையில் அமையவும் எதுவித இடர்பாடுகளும் இன்றி வெளிவரவும் உறுதுணை புரிந்த உத்திராவத்தை ஞானவைரவப் பெருமான் அருளும், ஸ்ரீமனோன்மணி (முதலி) அம்பாள் அருட்கடாட்சமும், என்றென்றும் எமது கலைக்கோயிலாம் புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையைக் காக்கட்டும். அத்துடன் எக்காலமும் சீரிளமையுடனும் பேருவகையுடனும் நின்று நிலைத்து வாழவேண்டும் என்று சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி இறைவனை வேண்டி இப்பொன்மலரை உங்கள் கரங்களில் ஒப்படைக்கின்றேன்.

பொன்விழாக்காணும் இப்பாடசாலை வைரவிழாக் காணுமுன் பார்போற்றப் பலகலைகள் சிறந்தோங்கிக் கலைக்கோயில் செழிக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

இதழாசிரியர்
திரு.சி.துரைராசா

## ஆசியுரை




அன்ன பூரணா சதாபூரணா
சங்கரப்பிரிய பிராண வல்லிபே
ஞானவைரக்கிய தேகீம் சர்வசக்தி சமர்விதம்

எங்கும் நிறைஇறையருட் சக்தி துணைக் கொண்டு புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இன்று புதுப்பொலிவுடன் "பொன்விழா" (50 வது ஆண்டு) நிறைவை ஒட்டிய விழாவும் மலர்வெளியீடும் நல்ல வண்ணம் அமைய நாம் வணங்கும் நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளியம்மன், வடபத்திரகாளியம்மன், ஸ்ரீவீரமாகாளியம்மன்,உத்திராவத்தை ஞானவைரவப் பெருமான் அருள் சுரந்து நிறைந்த ஆசிவழங்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துவதோடு, கல்லூரி முதல்வர் உயர்திரு கந்தசாமி-நித்தியானந்தன், பொறுப்பாசிரியர் திருவாளர் சின்னையா- துரைராசா அவர்களும் மற்றும் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை மேம்பாட்டுக்கழக சபை உறுப்பினர்கள், மாணவச் செல்வங்கள், எல்லோர்க்கும் இறையருள் நல்க வேண்டுமென்று மீண்டும் ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ.தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள்
அதிபர்
யா/குடத்தனை அ.த.க. பாடசாலை.

## ஆசிச்செய்தி



பணி.J.X.பேணாட்றெக்னோ

பங்குத்தந்தை

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தனது 50 வது நிறைவைக் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். "நிறைவு" என்பது ஒரு செயலை நிறைவேற்றிய பின் ஏற்படும் ஆத்மதிருப்தி. கடந்த 50 வருடங்கள் கல்வி ஊட்டி, பலரை உருவாக்கி அதில் ஆத்ம திருப்தி கண்ட கடந்த கால அதிபர்கள்,ஆசிரியர்கள், இக்கால அதிபர் திரு.க.நித்தியானந்தன், ஆசிரியர்கள், மாணவர்களோடு சேர்ந்து நாமும் மகிழ்கின்றோம். தொடர்ந்தும் இப்பாடசாலை பலரை உருவாக்க வேண்டும். முக்கியமாக சட்டம், ஒழுங்கிற்கு கட்டுப்படும் மாணவ சமதாயத்தை உருவாக்கி எம்மண்ணிற்கு பெருமை சேர்க்க நான் ஆசித்து நிற்கின்றேன்.



# வாழ்த்துரை

வ.செல்வராசா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். கிராமப்புற மக்களின் எண்ணறிவையும், எழுத்தறிவையும் விருத்தி செய்வதன் மூலமே தேசிய மட்டத்தில் எழுத்தறிவு வீதத்தை அதிகரிக்க முடியும். இவ்வுயரிய இலக்கை அடையும் வகையில் அரசாங்கத்தால் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தகைய பாடசாலைகளிலொன்றாக புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையை அடையாளம் காணலாம்.

இப்பாடசாலை கடந்த ஐம்பது ஆண்டுகளாக புலோலி கிழக்குப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு எழுத்தறிவையும், எண்ணறிவையும் வழங்குவதில் முனைப்புடன் செயற்பட்டுள்ளது. இக்கிராமத்தில் வாழும் ஏழை மக்களின் அறிவுக்கண்ணைத் திறக்க இப்பாடசாலை ஆற்றிய பணி பாராட்டிற்குரியது. இத்தகைய செயற்பாட்டுக்காகப் பாடுபட்டு உழைத்த அதிபர்கள், ஆசிரியர்களைப் பொன்விழா ஆண்டில் நினைவு கூர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் கல்விப்பணி தொடர வாழ்த்துகிறேன்.

## வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



செ. உதயகுமார்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
(நிர்வாகம்)
வடமராட்சி வலயம்.

வடமராட்சிப் பகுதி என்றவுடன் நினைவுக்கு வருவது "பருத்தித்துறை" ஆகும். அங்குள்ள கிராமங்களில் ஒன்று புலோலி. அவ்வூரின் கண் அமைந்துள்ள சைவப் பாடசாலையான யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை சைவமும் தமிழும் தளைத்து ஓங்க உலகிற்கு நன் மாணாக்கர்களை உருவாக்கித் தரும் பாடசாலை ஆகும்.

குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டிருக்கின்ற போதிலும் தான் சார்ந்த பிரதேசத்தினது மாணவர்களது கல்விக்கு இப் பாடசாலை ஆற்றிவரும் பணி பாராட்டுக்குரியதாகும். இப் பாடசாலை தன் ஒளிமயமான பொன்விழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில் பல்துறைகளிலும் சாதனைகள் படைத்து நற்பிரஜைகளை உருவாக்கி பல்லாண்டு காலம் நீடித்து நிலைத்து வளர்ச்சி காணவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



திரு.பா.இரகுநாதன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறை

சைவமும், தமிழும் தழைத்தோங்க புலோலி கிழக்கு கிராமத்தில் அமரர்.க.பசுபதி அவர்களும், அவர் தம் நண்பர்களுமாக இணைந்து புலோலி கிழக்குப் பாடசாலையை ஆரம்பித்தார்கள். ஏனைய கிராமங்களில் மெதடிஸ்த மிஷன்களும், அமெரிக்க மிஷன்களும், போட்டியிட்டு தமது மதத்தைப் பரப்பும் நோக்குடன் பாடசாலைகளை ஆரம்பித்தார்கள்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனும் மூத்தோர் வாக்கிற்கிணங்க பாடசாலை இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற கருத்தும் கவனிக்க வேண்டியதாகும். இக்கிராம மக்களின் பிள்ளைகளின் கல்வியை நோக்காகக் கொண்டு சைவத்தையும், தமிழ் மொழியையும், கலாச்சாரத்தையும், விழுமியங்களையும், பாரம்பரியங்களையும், காப்பாற்றும் பொருட்டு 1959 ம் ஆண்டு புலோலி கிழக்குப் பாடசாலை அமரர்.க.பசுபதி அவர்களும், அவர் தம் தோழர்களுமாக ஆரம்பித்தனர்.


உத்திராவத்தை ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் பெரிய நிலப்பரப்பு அக்கிராம மக்களினால் அன்பளிப்பு செய்யப்பட்டது. இப்பாடசாலை மாணவர்களின் கல்வியின் அத்திவாரமான ஆரம்பக் கல்வியை கடந்த 50 வருடங்களாக சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. உயர்கல்விக்கு அடித்தளமாக மிளிர்கின்றது. மத, ஜாதி, பேதமின்றி அயற்கிராம மக்களும் கல்வி கற்பது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சி தற்போது அதிகரித்து வருவதை காணக் கூடியதாக உள்ளது. இப்பாடசாலை பொன்விழா கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை ஆரம்ப பாடசாலையாக இருந்தாலும் இங்கு கல்வி கற்ற பழைய மாணவர்களினதும், பாடசாலைச் சமூகத்தினராலும் பொன்விழா மலர் வெளியிடுவது வரவேற்கத்தக்கதாகும்.

இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைவதோடு, இக்கல்விச்சாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று சமூகத்திற்கு பணியாற்ற வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

# நல்வாழ்த்துரை





மு.செல்வராசா
முன்னாள் அதிபர்

வடமராட்சி புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தனது ஐம்பதாவது ஆண்டுச் சேவையை நிறைவேற்றுகிறது. அதன் பொருட்டு மலர் ஒன்றையும் வெளியிடுகிறது. இந்நிகழ்வுகள் நமக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. காலவெள்ளத்தில் 50 ஆண்டு ஒரு சிறு திவலையாகும். ஆனால் ஒரு தாபனத்தை பொறுத்த வரையில் 50 ஆண்டுச் சேவை போற்றுதற்குரியதாகும்.

'கல்வி மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே நடைபெறும் உரையாடல்' டூயின் ஒரு கருத்து இது. எங்கள் சமுதாயத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம் கொடுத்து பாடசாலைக் கல்வியை தளராது வளர்த்த பெருமை இப்பள்ளிக்கு உண்டு. இப்பாடசாலை தனது சமூகம் பலசிக்கல்களுக்கு உள்ளாகிய போது அயராது செயற்பட்டுள்ளது. தாபிதமாகி 50 ஆண்டு காலமாக பல துறைசார் செம்மை மைந்தர்கள் அநேகரைப் புறந்தந்து அறிவொளிபரப்பி நிற்கின்றமை பெருமைக்குரியதே.

மாணவர் அடையவேண்டிய எல்லைக்கு அவர்களை இட்டுச்செல்லும் பொறுப்பு பள்ளிப்பாடவிதானத்திற்கு உரியது இது பிளேத்தோவின் கூற்று. தனியே நூற்கல்வியோடு நிற்காது மாணவர் ஒவ்வொருவரின் கவர்ச்சி, ஈடுபாடுஆற்றல் அறிந்து அவற்றை வளர்ப்பதே முக்கியமானது. கல்வித்துறையிலும் சரி, விளையாட்டுத்துறையிலும் சரி, இப்பாடசாலை ஏனையவற்றுடன் சரிநிகராக நிற்கின்றது. சில நிகழ்ச்சிகளில் முதல் நிலைக்கும் வந்துள்ளது. பண்பான அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் இங்கு உண்டு. இவை இதன் நற்சொத்தாகும். நாம் பெருமைப்படக்கூடியதாகும்.

இக்கலைக்கோயில் பன்னெடுங்காலம் எமது சமுதாயத்திற்கு கல்வித்தொண்டாற்றி அரும்பெரும் சாதனைகளை படைக்க வேண்டும் என்று எல்லாம்வல்ல ஆண்டவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் குதூகலமடைகின்றேன்.

# நல்வாழ்த்துரை



**ஆ.மகேசு**
(அதிபர் தரம் I)
(S.L.P.S. Grade I)

யா/புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தனது ஐம்பதாவது அகவையை பூர்த்தி செய்துள்ளதோடு, பொன்விழா மலர் ஒன்றையும் வெளியிட உள்ளது. ஒரு தாபனத்தை பொறுத்த வரையில் 50 ஆண்டு காலச்சேவை போற்றுதற்குரியதாகும்.இக்காலப்பகுதியில் இப்பாடசாலை ஆற்றி வந்துள்ள பணிகள் அளப்பரியன.இதற்கு இவ்வித்தியாலயத்தில் அமைந்துள்ள வளங்களே தக்க சான்றாகும்.


கல்வி "மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே நடைபெறும் உரையாடல்" எனக் கல்விச் சிந்தனையாளர் ஜோன்டூயி கூறியுள்ளார்.மாணவர்கள் அடையவேண்டிய எல்லைக்கு அவர்களை இட்டுச் செல்லும் பொறுப்பு பாடவிதானத்திற்கும், அங்கே பணியிலிருக்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் உரியது. கடந்த ஐம்பது ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம், ஆகியோரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவையினால் தான் இன்று இப்பாடசாலை பொன்விழா கொண்டாட காரணமாக அமைந்துள்ளது என்பதை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த வகையில் அடியொற்றி வந்த இப்போதைய அதிபர் திரு.க.நித்தியானந்தன் அவர்களும்,ஆசிரிய குழாமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழையமாணவர் சங்கமும்,நலன் விரும்பிகளும், ஒன்றிணைந்து எடுக்கும் பொன்விழாவினால் இக்கலைக்கோவில் பெருமை கொள்கின்றது.

அந்த வகையில் வெளிவரவுள்ள பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைவதோடு, எல்லாம்வல்ல இறையருள் எல்லோருக்கும் கிட்ட இறைவனைப்பிரார்த்தித்து அமைகின்றேன்.

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

# நல்வாழ்த்துரை



திரு.சி.கணேசமூர்த்தி
முன்னாள் அதிபர்
1973-1992


புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 50வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தையொட்டி வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரிதும் மகிழ்வடைகின்றேன். இக்கல்விக் கூடம் கல்வியொடு அன்பையும் நல்லொழுக்கம் பண்பையும் அஞ்சாமையும் உடைய மாணவர்களை உருவாக்கி வருவதை நான் அறிவேன்.

இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பலரும் பெரிய பதவிகளில் செயலாற்றி வருவதை அறியும் போது பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

கல்வி என்பதில் கல் என்றும் வி என்றும் இரு விடியல்கள் இருக்கின்றன. கல் என்றால் கற்றுக்கொள் என்று அர்த்தம். வி வெற்றி தருவதைக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் வெறும் கல்வி மட்டும் இருந்தால் போதாது. அடுத்த வகுப்பிற்கு நாம் செல்வது போல் நம்முடைய வயது ஏறிக்கொண்டே போவது போல் பணிவும் பக்தியும் நற்பண்புகளும் வளர்ந்து கொண்டே போக வேண்டும்.

தொடர்ந்து மேலும் மேலும் நல்ல மாணவர்களை உருவாக்கி வருங்கால சமுதாயமெல்லாம் நல்ல சமுதாயமாக உருவாகுவதற்கு இப் பாடசாலை சிறப்பாக விளங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

# Greetings



**N.Chinniyah**
**Retd.Accountant.**
**Uthirawathai,**
**Puloly North East,**
**Point Pedro.**

*It is with great pleasure that I send my greetings to the principal, staff and students of J/Puloly East G.T.M. School, point pedro for releasing a magazine to commemorate the Golden jubilee celebration of the school. It is often said that the central aim of any educational policy is to make sure that the right things are taught to the right pupils by the right teachers in the right school. The problem of how and when and by whom and to whom is one which depends upon the greater number of variables.*

*Your school stands a true examples to these expectations one cannot but wonder how a small school with limited resources could venture to bring out a magazine of this nature. My sincere thanks to the principal in particular and the staff and pupils in general for their dedication and commitments in releasing this magazine.*

*A Chinese proverb goes thus:- "He who thinks in weeks plants grass, he who thinks In years plants trees and he who thinks in centuries educates men."*

*Your school thinks in centuries.*

## கல்லூரியின் ஆசிரியர் குழாம் – 2009



இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) : திரு.சி.துரைராசா, திரு.க.நித்தியானந்தன் (அதிபர்), திரு.சோ.சிவதாசன்

நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) : திருமதி.உ.பாலஸ்கந்தராசா, திருமதி.M.D.அரியரஞ்சன், திருமதி.R.J.யோகநாதன், செல்வி.தி.துஷ்யந்தினி, செல்வி.V.கௌசல்யா, திருமதி.பி.ஜெகன்

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் – 2009



இருப்பவர்கள் (இட.வல.) : திருமதி.R.J.யோகநாதன், திருமதி.உ.பாலஸ்கந்தராசா, திரு.க.நித்தியானந்தன் (அதிபர்), திரு.சி.துரைராசா, திரு.பெ.ரெஜினோல்ட்.

நிற்பவர்கள் (இட.வல.) : திருமதி.S.நிர்மலா, திருமதி.S.சித்திரா, திருமதி.P.பத்மரஜனி, திருமதி.M.ஜெயலலிதா, திருமதி.N.தமிழ்வாணி

## பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் – 2009



இருப்பவர்கள் (இட.வலமாக) : செல்வி.கெ.கேமலா (உபசெயலாளர்), செல்வி.தி.துஷ்யந்தினி(தலைவர்), செல்வி.ஆ.சுபைதா (பொருளாளர்)

நிற்பவர்கள் (இட. வலமாக) : செல்வி.G.தர்ஷனி, செல்வி.ஜெ.பிரசாந்தி, திரு.ம.பங்கையன், செல்வன்.ஆ.மிதுனன், செல்வன்.ஜெ.கீர்த்தனன்


முதன்மைநிலை – 01 மாணவர் மன்றக் குழுவினர் அதிபர், ஆசிரியர்களுடன்



முதன்மைநிலை – 2,3 மாணவர் மன்றக் குழுவினர் அதிபர், ஆசிரியர்களுடன்



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம்–1 மாணவர்கள் (2009)



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம்–2 மாணவர்கள் (2009)



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் – 3 மாணவர்கள் (2009)




அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் – 4 மாணவர்கள் (2009)




அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் – 5 மாணவர்கள் (2009)



அதிபர், ஆசிரியருடன் ELRTC வகுப்பு மாணவர்கள் – 2009



அதிபர், ஆசிரியர்களுடன் இந்து மாணவர் மன்றக் குழுவினர் – 2009




அதிபர், ஆசிரியர்களுடன் கிறிஸ்தவ மாணவர் மன்றக் குழுவினர் 2009



# பாடசாலையின் அடையாளச் சின்னங்கள்








# பாடசாலை அதிபரின் அறிக்கை

## வரலாற்றுச் சுருக்கம்.

யா/ புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையின் தோற்றமானது தமது பிரதேசத்திற்கென ஓர் பாடசாலையில்லையென்ற குறையினை நீக்கும் முகமாக உத்திராவத்தை, வராத்துப்பளை,சந்தாதோட்டம்,வல்லிபுரக்குறிச்சி,தும்பளை தெற்கு ஆகிய கிராமங்களை சேர்ந்த முன்னோடிகள் இப்பாடசாலையின் தோற்றத்திற்கு மூலகாரணமாக விளங்கினர்.சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் அனுசரணையுடன் மாண்புமிகு S.W.R.D பண்டாரநாயக்காவின் அரசியல் கல்வி மந்திரியாக விளங்கிய டாக்டர் ஐ.தகநாயக்கா இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கினார். இக்காலத்தில் பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய சமூகநீதிக் கொள்கையாளரும், பொதுவுடமையாளருமாக விளங்கிய திரு.பொன்-கந்தையா அத்திவாரமிட்டவர்களில் முக்கியமானவர் ஆவார். இதன் தாபகராக காலஞ்சென்ற திரு.கந்தையா-பசுபதியும், திரு.M.C.சுப்பிரமணியமும் விளங்கினார்கள்.

15.06.1958 ல் நலன் விரும்பி ஒருவரால் வழங்கப்பட்ட காணியில் ஒரு சிறிய கொட்டிலில் உத்திராவத்தையில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இப்பாடசாலையில் தரம் 1-7வரை வகுப்புக்கள் நடைபெற்றன. திரு.P.J. அன்ரனி பதில் தலைமை ஆசிரியராக இருந்தார். இவ்வாண்டிலேயே கரவெட்டி, அச்சுவேலி, கட்டுபுலம்,போன்ற இடங்களிலும் இவ்வாறான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சுவீகரிப்பு- கல்விச்சீர்திருத்தத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகத் தனியாரினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளை அரசு சுவீகரிப்புச் செய்தது. இதனடிப்படையில் 27.07.1959 இல் அரச பாடசலையாக இது பொறுப்பேற்கப்பட்டது. இக்காலப்பகுதியில் தலைமை ஆசிரியராக திரு.V.K.தங்கராசா கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடங்கள், மலசலகூடங்கள், தளபாடங்கள் என்பன கிடைக்கப் பெற்றன. 1967ம் ஆண்டளவில் இப்பாடசாலையில் வகுப்புக்கள் 1-10 வரை நடாத்தப்பட்டன. G.C.E(O/L) பரீட்சைக்கும் மாணவர்கள் தோற்றினர்.

1970ல் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. இதில் பாடசாலைக் கட்டமைப்புக்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இதனடிப்புடையில் இப்பாடசாலை தரம் 1-5 வரையான தரம் III வகையை சேரந்த பாடசாலையாக மாற்றப்பட்டது. அதன்பிறகு ஆரம்பக்கல்வியை இங்கு கற்ற மாணவர்கள் இரண்டாம் நிலைக் கல்விக்கு அயற்பாடசாலைக்குச் சென்றனர். ஆரம்பம் முதல் இன்று வரை இப்பாடசாலை ஒரு கலவன் பாடசாலையாக உள்ளது. இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியினைக் கற்ற மாணவர்கள் வேறுபாடசாலைகளில் தொடர்ந்து கற்று பல்கலைக்கழகம் சென்று வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், தொழில்நுட்பவியலாளர்களாவுள்ளனர்.

05.07.2006 இல் இப்பாடசாலையின்அதிபராக நான் பொறுப்பேற்றேன். அப்போது 84 மாணவர்களும் 05 ஆசிரியர்களும் கடமையாற்றினார்கள். ஓய்வுபெற்ற திரு.மு.செல்வராசா அதிபரிடமிருந்து நான் பாடசாலையைப் பொறுப்பேற்றேன். திரு.சி.துரைராசா உபஅதிபராகக் கடமையாற்றி வருகின்றார். எனக்கு முன்பிருந்த அதிபர்களில் திரு.சி.கணேசமூர்த்தி 14 வருடங்கள் கூடிய காலம் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். திரு.மு.செல்வராசா அதிபராகவிருந்த போது பாடசாலைக்கு பல பௌதீகவளங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

மலசலகூடம், தண்ணீர்தாங்கி, மின்சாரம், சுற்றுமதில், புத்தகஅலுமாரி, மற்றும் உருக்கு அலுமாரிகள் போன்றவையாகும். இவரின் முயற்சியால் பாடசாலைக்கு மின் பெறப்பட்டமையாலே, பின்பு எனது காலப்பகுதியில் கணனி, போட்டோபிரதி இயந்திரம், போன்றவை பெறக்கூடியதாகவிருந்தது.

## நிர்வாகம்

பாடசாலையின் நிர்வாகம் அதிபரினாலும் உபஅதிபர், மற்றும் ஆசிரியர்களாலும் வெவ்வேறு பொறுப்புக்கள் பகிர்ந்து நடாத்தப்படுகின்றது.

## நிதி

திணைக்களத்தால் வழங்கப்படும் தரஉள்ளீடு, HOP, பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகளும், உதவியளித்து வருகின்றனர். வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர்களும் நிதியுதவி செய்கின்றனர்.

## பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

தற்போது இப்பாடசாலையில் 68 மாணவர்கள் உள்ளனர். 51 பா.அ.ச. உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் பாடசாலைக்கு அரசினால் வழங்கப்படும் உதவிகள் தவிர ஏனைய உதவிகளைச் செய்து வருகின்றனர். பாடசாலை விழாக்களின் போது தம்மால் இயன்ற பொருள் உதவிகள், சரீர உதவிகள், என்பவற்றைச் செய்து வருகின்றனர். W.F.P க்கான காலை உணவு வழங்கல் திட்டத்திற்கும் உதவி வருகின்றனர்.

இப்பாடசாலைக்கு மின்சார இணைப்பு அவர்களின் உதவி மூலமே பெறப்பட்டது. 2004 இல் மின்னிணைப்பு பெறப்பட்டது. அக்காலப்பகுதியிலிருந்த திரு.மு.செல்வராசா அதிபரின் முயற்சியுமே காரணமாகும். மின்கட்டணமும் பா.அ.சங்கம் மூலமே செலுத்தப்பட்டது. இவ்வாண்டிலிருந்து திணைக்களத்தினால் 800/= வரை மின்சாரக்கட்டணத்திற்கு பணம் வழங்கப்படுகிறது. விளையாட்டு மைதானத்திற்குரிய நிலம் கொள்வனவு இரு கட்டங்களாக 1996 இலும், 2000 இலும் நடைபெற்றது. அதற்குரிய பணத்தினையும் இவர்களே செலுத்தியுள்ளனர். தற்போது நடைபெறும் பொன்விழாவிற்கும் தாராளமாக உதவிகள் செய்துவருகின்றனர்.

## பழைய மாணவர்சங்கம்

இப்பாடசாலையின் இச்சங்கமானது 2002 இல் உருவாக்கப்பட்டது. தலைவராக திரு.மா.லோகசிங்கம் செயற்பட்டார். 10 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவினர் நன்கு செயற்பட்டுள்ளனர். இப்பாடசாலைக்கு தற்போது கொழும்பு, கனடா, பிரான்ஸ் போன்ற இடங்களிலும் பழைய மாணவர் கிளைச்சங்கங்கள் உண்டு. அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். இப்பாடசாலைக்கு 2008இல் பெயர்வளைவு 50 000/= செலவில் திருமதி.ப.பாக்கியம் அவர்களின் பிள்ளைகளின் உதவி மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் ஆவார்.

எமது பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் இல்லாத குறையினை நீக்கும் பொருட்டு 2006 இல் இருந்து ஒரு ஆசிரியரை நியமித்து அவருக்கான கட்டணத்தினை கனடாவிலுள்ள பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள் செலுத்தி வருகின்றனர். பொன்விழாவிற்கும் தாராளமாக உதவியுள்ளனர்.

இங்கு செயற்படும் பழைய மாணவர்கள் பொன்விழாவினை முன்விட்டு எதுவித கூலியும் அறவிடாமல் வர்ணம் தீட்டித் தந்துள்ளனர். விழாக்களின் போது நிதியுதவிகள், சரீர உதவிகள், தாராளமாகச் செய்து வருகின்றனர். 2008ம் ஆண்டு SCF அமைப்பினர் பாடசாலைக்கு கணனிகள், போட்டோபிரதி இயந்திரம், என்பனவற்றைத் தந்த போது அதற்குரிய அறையினை செப்பனிடுவதற்கு கொழும்பிலுள்ள பழைய மாணவர்கள் 40 000/= வினைத் தந்துள்ளனர். அதன்மூலம் கணனி அறை இயங்கக்கூடியதாகவுள்ளது.

## குருளைச்சாரணர்

2008 ம் ஆண்டு செல்வி.சறோஜினி ஆசிரியர் தலைமையில் குருளைச் சாரணர் இயக்கம் பாடசாலையில் உருவாக்கப்பட்டு 12 மாணவர்களிற்குச் சின்னம் சூட்டப்பட்டதுடன் தற்போது தொடர்ந்து இயங்குகின்றது. இவர்கள் சாரணிய அமைப்பினால் நடாத்தப்படும் போட்டிகள், பயிற்சிப்பாசறைகளில் பங்குபற்றி வருகின்றனர்.

## ELRTC வகுப்பு.

2007 ம் ஆண்டிலிருந்து செல்வி.ச.கிருஷாந்தி தலைமையில் நடாத்தப்பட்டு வந்தது. மாணவர்கள் பரீட்சையில் பங்குபற்றி நல்ல பெறுபேறுகளும் பெற்றுள்ளனர். இவ்வகுப்பு தற்போதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## கணணிக் கல்வி

2008ம் ஆண்டிலிருந்து SCF அமைப்பினர் 02 கணனிகள் தந்துள்ளமையால் அவற்றினைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கணனி தொடர்பான ஆரம்ப அறிவு ஊட்டப்படுகிறது. இதற்குப் பொறுப்பாக செல்வி.தி.துஷ்யந்தினி நியமிக்கப்பட்டுள்ளார். இதில் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும், கற்கக் கூடியதாக உள்ளது. வினாத்தாள்கள் மற்றும் கற்றல் சாதனங்களைத் தயாரிப்பதற்கும் இக்கணனிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்.

இல்லமெய்வல்லுனர் போட்டிகள் வருடாந்தம் நடாத்தப்படுகின்றது. எமது காலப்பகுதியில் 2008,2009 ம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டன. இம்முறை ம.பிரவீனா என்ற மாணவி கோட்டமட்டத்தில் நீளம் பாய்தலில் முதலிடத்தைப் பெற்றார். 2005ல் சூ.கஸ்மின் என்ற மாணவன் மாகாணவிளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றியுள்ளார்.

தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டி, வாய்ப்பாடு, மனனப்போட்டி, போன்றவற்றிலும் மாணவர்கள் பாடசாலைமட்டம், கோட்டமட்டம், போன்றவற்றில் பங்குபற்றி வருகின்றனர்.

2007ம் ஆண்டு சிறப்பான முறையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. 2008ம் ஆண்டு எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்ட பின்னர் நிஷாப்புயல் காரணமாக பிற்போடப்பட்டது. தற்போதைய பொன்விழாவுடன் சேர்த்து நடாத்தப்படுகின்றது.

## பரீட்சைப் பெறுபேறுகள்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை

| ஆண்டு | தோற்றியோர் | சித்தி பெற்றோர் | ஆண்டு | தோற்றியோர் | சித்தி பெற்றோர் |
|---|---|---|---|---|---|
| 1992 | 18 | - | 2001 | 11 | - |
| 1993 | 19 | 02 | 2002 | 10 | 02 |
| 1994 | 09 | 02 | 2003 | 12 | - |
| 1995 | 12 | 01 | 2004 | 11 | 02 |
| 1996 | 12 | 04 | 2005 | 13 | 01 |
| 1997 | 14 | - | 2006 | 18 | - |
| 1998 | 11 | 02 | 2007 | 16 | 04 |
| 1999 | 19 | 02 | 2008 | 19 | 03 |
| 2000 | 13 | 02 | | | |

## ELRTC

| வருடம் | பிரிவு | பங்குபற்றியோர் | | Merit | Credit | Simple |
|---|---|---|---|---|---|---|
| | | Spoken | Written | | | |
| 2007 | Level-I | 18 | - | 04 | - | 06 |
| 2007 | Level-I | - | 18 | 04 | 06 | 03 |
| 2008 | Level-I | 07 | - | 03 | 01 | 01 |
| 2008 | Level-II | 17 | - | 02 | 06 | 08 |
| 2008 | Level-I | - | 08 | 01 | 01 | - |
| 2008 | Level-II | - | 17 | 01 | 02 | 04 |
| 2009 | Level-I | 14 | - | 02 | - | 05 |
| 2009 | Level-II | 07 | - | - | - | 03 |

## சமூக உறவுகள்

| வருடம் | வழங்கிய உதவி | வழங்கிய நிறுவனம் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2002 | மலசலகூடம் | GTZ | பொருட்களும் கூலியும் 24 000.00 |
| 2003 | நீர்த்தாங்கியும் குழாய் அமைப்பும் மோட்டார் | UNICEF | 125 000.00 |
| 2004 | புத்தக அலுமாரியும், புத்தகங்களும் | UNICEF | 13 000.00 |
| 2006 | சுற்றுமதில் (1100') | SCF | 18 00 000.00 |
| 2006 | உருக்கு அலுமாரி-02 | SCF | 24 000.00 |
| 2008 | கணனிகள் -02<br>பிறின்ரர்-01<br>போட்டோபிரதி இயந்திரம் -01<br>றோணியோ-01 | SCF | 5 33 000.00 |


## பிள்ளைநேயப்பாடசாலை

இப்பாடசாலை 2003ல் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதன் மூலமே UNICEF நிறுவனம் water Tank, புத்தக அலுமாரி, தண்ணீர் இறைக்கும் மோட்டர் போன்றவற்றை பாடசாலைக்கு வழங்கியது.

## பொன்விழாவிற்கு நிதியுதவி அளித்தோர் விபரம்.

| | | |
|---|---|---|
| 1. | கனடாவிலுள்ள பழைய மாணவர்கள் | 50 000.00 |
| 2. | பிரான்ஸில் உள்ள பழைய மாணவர்கள் | 50 000.00 |
| 3. | கொழும்பு பழைய மாணவர்கள் | 20 000.00 |
| 4. | டென்மார்க் பழைய மாணவர்கள் | |
| | திரு.க.கலைச்செல்வன், திரு.க.அகிலன் | 10 000.00 |
| 5. | லண்டன் பழைய மாணவன் - திரு.ஜெ.ஜெயசீலன் | 5 000.00 |
| 6. | பிரான்ஸ் பழைய மாணவர் -திரு.செ.குணசிங்கம் | 10 000.00 |
| 7. | கிராமமக்கள் - | |
| | உத்திராவத்தை | 27 000.00 |
| | வராத்துப்பளை | 20 000.00 |
| | சந்தாதோட்டம் | 7 000.00 |
| | ஊரியவத்தை | 4 000.00 |
| | தும்பளை தெற்கு | 5 800.00 |
| 7. | இவற்றைவிட கணனி அறை அமைப்பதற்கு | |
| | கொழும்பு பழைய மாணவர்சங்கம் | 40 000.00 |
| 8. | கணனி ஆசிரியர் வேதனம் | 5 000.00 |
| 9. | 2007 பரிசளிப்பு | 7 000.00 |
| 10. | பெயர் வளைவு திருமதி.பசுபதி.பாக்கியம் குடும்பம் | 50 000.00 |

இப்பாடசாலையின் பற்றுமிக்க அனைத்து உள்ளங்களும் நலமேயிருக்கவும், பாடசாலை நலனில் தொடர்ந்து அக்கறை செலுத்தவேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்வதோடு, அவர்களை மனதார வாழ்த்துகின்றேன். மேலும் இப்பாடசாலை என்றென்றும் இப்பிரதேச சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்பட்டு, ஒரு கலங்கரை விளக்காக ஒளிரட்டும்.



# ஆரம்பக்கல்வி அபிவிருத்தியில் அபாக்கஸ் (Abacus)



திரு.கி.கிருஸ்ணயோகன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**அறிமுகம்.**

எந்த ஒரு நாட்டிலும் ஆரம்பக்கல்வியில் கூடுதலான அக்கறை செலுத்தப்பட வேண்டும் என்பது கல்விச் சமூகத்தின் கருத்தாகும். இருந்தாலும் நமது நாட்டைப் பொறுத்தவரை அண்மைக் காலங்களிலேயே ஆரம்பக்கல்வி மீதான கவனம் அதிகரித்து வருகின்ற நன்மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. இப் போக்கின் ஒரு அம்சமாக நமது ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே அபக்கஸ் பற்றிய அறிவினை ஏற்படுத்தும் முயற்சிகளும் தற்போது மெல்ல மெல்ல முகிழ்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்று நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு பாடசாலைகளில் அபக்கஸ் தனியார் நிறுவனங்களினால் நடத்தப்படுவதையும் பணச்செலவையும் பொருட்படுத்தாமல் பெற்றோர்கள் ஆர்வத்துடன் தமது பிள்ளைகளை அபக்கஸ் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்புவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனை எதிர்காலத்தில் நாம் பெறக்கூடிய நற்பயன்களில் முதல் படி எனக் கூறுவதும் தவறில்லை.

**வரலாறு.**

அபக்கஸ் சீனர்களால் உலகுக்கு அளிக்கப்பட்ட ஒரு அரிய சாதனமாகும். இது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மணிச்சட்டமாகும்.இவ் அபக்கஸ் பயிற்சியை பெற்றதனாலேயே சீனர்கள் நுண்ணறிவு மற்றும் ஞாபக சக்தியில் சிறந்தவர்களாக காணப்படுகிறார்கள் எனக்கருதப்படுகிறது.மேலும் மலேசியக் கல்வி அமைச்சினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிக்கல்வியின் ஒரு பாடமாக அபக்கஸ் பயிற்சி சேர்க்கப் பட்டுள்ளது. யப்பான் நாட்டு மாணவர்களும் இக்கருவியிலேயே தமது எண்கணித செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். யப்பானிய மொழியில் இக்கருவி சொரபன் என அழைக்கப்படுகின்றது. அமெரிக்காவிலும் இச்சாதனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கண்பார்வையற்றவர்களின் தோழன்**

அபக்கஸ் கண்பார்வையற்றவர்கள் தமது எண்கணிதச் செயற்பாடுகளை செய்வதற்கு மிகவும் துணைபுரிகின்றது. அவர்கள் இக்கருவியிலுள்ள மணிகளை தமது கைகளால் அசைத்து எண்கணித செயற்பாடுகளை சாதாரணமானவர்களைவிட மிகவேகமாக செய்து முடிப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இது அவர்களுக்கு வெள்ளைப் பிரம்பைப் போல உற்றதோழனாக காணப்படுகின்றது.

**ஆரம்பபிரிவு மாணவர்களுக்கு அபக்கஸ் ஏன் அவசியம்?**

சிறுவர்கள் 14 வயதை அடையும் பொழுது மூளையின் வளர்ச்சி சுமார் 80 சதவீதத்தை அடைந்துவிடுகிறது. மிகுதி 20 சதவீத மூளைவளர்ச்சி அவர்களது மிகுதி வாழ்நாள் முழுவதற்குமாக பெறப்படுகின்றது. எனவே இவ் அபக்கஸ் பயிற்சியின் மூலம் மிகவிரைவாகவும் இலகுவாகவும் சிறுவர்கள் 80 சதவீத மூளை வளர்ச்சியைப் பெற்றுவிடுகின்றார்கள்.மாணவர்கள்

தமது இரு கைகளையும் பாவித்து அபக்கஸ் பயிற்சியை பெறுவதன் மூலம் அவர்களின் இடது வலது மூளைகள் இரண்டும் விருத்தியடைகின்றன. ஆகவே இக்கருவியைக் கையாள்வதன் மூலம் வாழ்க்கை முழுவதற்கும் வேண்டிய திறமைகள் சிறுவயதிலேயே வளர்த்துக்கொள்ளப்படுகின்றன.

மனித மூளைச் செயற்பாடுகள்.

விஞ்ஞானிகளின் ஆய்வுகளின் மூலம் மனித மூளையின் இடதுபக்கம் ஆராய்தல், மொழி, ஓசை, போன்ற வேலைகளைச் செய்கின்றது.மூளையின் வலதுபக்கம் வடிவம், எண்ணிப்பார்த்தல், படைக்கும் ஆற்றல், முதலிய பணிகளைச் செய்கின்றது.அபக்கஸ் பயன்படுத்தும் போது சிறுவர்கள் தங்களது இரு கைவிரல்களையும் உபயோகித்து அபக்கஸ் மணிகளை நகர்த்துகிறார்கள்.இதனால் மூளையின் வலது,இடது,செயற்பாடுகள் இரண்டும் தூண்டப்படுகின்றன.இதன் மூலம் சிறுவயதிலேயே மூளையின் முழுத்திறன் வளர்ச்சிக்கான பயிற்சி வழங்கப்படுகின்றது.

பொதுவாக வலதுகைப்பழக்கம் உடையவர்கள் இடது கையை பயன்படுத்தும் ஆற்றல் குறைவு.அவ்வாறே இடது கைப்பழக்கமுடையவர்கள் வலது கையைப் பயன்படுத்தும் ஆற்றல் குறைவாக காணப்படுகின்றது.வலது கையை அதிகம் உபயோகிப்பதால் இடது மூளை, வலது மூளையை விட நன்றாக திறன் வளர்ச்சி பெறுகின்றது.ஆனால் அபக்கஸை பயன்படுத்திக் கற்பதன் மூலம் இரு கைகளும் சமவலுவான அளவிற்கு தொழிற்படுவதால் எமது வலது, இடது மூளைகளின் செயற்பாடுகள் முழுமையாக செயற்படத் தொடங்குகின்றன.

விம்பத்திறன் ஞாபகசக்தி
**(Photographic Memory)**


விம்பத்திறன் ஞாபகசக்தி ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படும் திறமைகளில் மிகச்சிறந்ததாகும்.அபக்கஸ் மணிகள் கணிதத்தின் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், செயற்பாடுகளுக்காக இரண்டு கைகளிலுமுள்ள அனைத்து விரல்களாலும் அசைக்கப்படுகின்றன. இவ் நகர்த்தல்கள் விம்பமாக மூளையில் பதிவாகின்றன.இது போன்ற செயல்கள் இடைவிடாது தொடரும் பொழுது மனிதனின் விம்பத்திறன்(Imaging Skill) ஞாபகசக்தியை தூண்டிவிட்டுப் பெருக்குகின்றது.இவ்வாறு தூண்டப்படும் ஞாபகசக்தி தான் காணும் அனைத்துப் பொருட்களையும், நிகழ்வுகளையும், படிக்கும், பார்க்கும், கேட்கும்,செய்திகளையும் மூளையில் வைத்து தேவைப்படும் பொழுது சிறிது குறையாமல் வெளிக்கொணர உதவுகிறது.

அபக்கஸ் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்.

- ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை
  Concentration
- தெளிவாக விளங்கிக் கொள்ளல்
  Understanding
- விம்பத்திறன் ஞாபகசக்தி
  Photographic Memory
- வேகமும் துல்லியமும்
  Speed & Accuracy
- படைக்கும் திறன்
  Creativity
- தெரிந்துகொள்ளல்
  Comprehension
- தன்னம்பிக்கை
  Self confidence
- கவனித்தல்
  Listening

போன்றவையாகும்.

அபக்கஸ் (Abacus) மாதிரி உரு



அபக்கஸ் செயற்பாடு

அபக்கஸ்ஸில் மேலிருந்து கீழாகக் கம்பிகள் இணைக்கப்பட்டு, அக்கம்பிகள் குறுக்குச்சட்டமொன்றினால் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். சட்டத்தின் மேலே ஒரு மணியும் கீழே நான்கு மணியுமாக ஒவ்வொரு கம்பியிலும் ஐந்து மணிகள் கோர்க்கப்பட்டிருக்கும். யாதேனுமொரு மணி குறுக்குச்சட்டத்தை நோக்கி நகர்த்தப்படும் போது அது எண் பெறுமானத்தை பெறும். விலக்கப்படும் போது அது எண் பெறுமானத்தை இழக்கும். ஒவ்வொரு கம்பியும் கூடு என அழைக்கப்படும். வலதுபக்கமாக உள்ள முதலாவது கூடு ஒன்றின் தானத்தையும் இடது புறமாக வரும் அடுத்தடுத்த கூடுகள் பத்தின் தானம் நூறின் தானம் என்றவாறு அமையும்.

வலது புறமாக உள்ள முதலாவது கூட்டிலே கீழுள்ள ஒரு மணியைக் குறுக்குச் சட்டத்தை நோக்கி நகர்த்தினால் அது ஒன்று ஆகும். இவ்வாறே கீழுள்ள அடுத்தடுத்த மணிகளை குறுக்குச் சட்டத்தை நோக்கி நகர்த்தி நாம் முறையே இரண்டு, மூன்று, நான்கு என்ற இலக்கங்களை பெறமுடியும்.பின்னர் நான்கையும் கீழே தள்ளிவிட்டு அதாவது அழித்துவிட்டு மேலே உள்ள ஒரு மணியைக் குறுக்குச் சட்டத்தை நோக்கி நகர்த்தும் போது அது ஐந்தாகும்.

இவ்வைந்தோடு கீழே உள்ள மணிகளை ஒவ்வொன்றாக நகர்த்தி ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது முதலிய இலக்கங்களை நாம் பெறமுடியும். பின்னர் இவ்வொன்பதையும் அழித்துவிட்டு இடதுபுறமாக நகர்த்தி கீழுள்ள ஒரு மணியைக் குறுக்குச்சட்டத்தை நோக்கி நகர்த்தினால் அது பத்தாகும். இவ்விதமாக நாம் ஏனைய எண்களையும் அமைத்துக் கொள்ளமுடியும்.

எனவே எனக்கு கூறுங்கள் நான் அதனை மறந்துவிடுவேன். எனக்கு காட்டுங்கள் நான் ஞாபகத்தில் வைத்துக்கொள்வேன். என்னை ஈடுபடச் செய்யுங்கள், நான் கற்றுக்கொள்வேன் என்ற கொன்பியுசியஸ் (Confucius) இன் கூற்றுக்கு அமைவாக எமது பாடசாலைக் கலைத்திட்டத்தில் அபக்கஸ் சேர்க்கப்படும் போது அது சிறந்த ஒரு கற்பித்தல் துணைச்சாதனமாக ஆசிரியர்களுக்கு விளங்குவதோடு சிறந்தவொரு கற்றல் சாதனமாக மாணவர்களால் கையாளப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எண்சட்டத்திற்கும் அபக்கஸ் மணிச்சட்டத்திற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்.

| எண் சட்டம் | அபக்கஸ் மணிச்சட்டம். |
|---|---|
| கம்பிகளில் மணிகளைக் கொண்டது | கம்பிகளில் மணிகளைக் கொண்டது |
| எண்கணித செயற்பாடுகளுக்கு பயன்படும். கணித்தலின் போது மணிகள் இடப்படும். | எண்கணித செயற்பாடுகளுக்கு பயன்படும். நிரந்தரமாகவே மணிகள் காணப்படும். |
| ஒரு கம்பியில் ஆகக் கூடுதலாக 9 மணிகள் இடப்படலாம். கம்பியிலும் இடப்படும் சகல மணிகளும் அவ்வவ் இடப்பெறுமானத்தை பெறும் | ஒவ்வொரு கம்பியிலும் 5 மணிகள் நிரந்தரமாகவே இடப்பட்டிருக்கும். குறுக்குச் சட்டத்தை நோக்கி நகர்த்தப்படும போது எண்பெறுமானத்தை பெறும். |
| ஒரு கம்பியிலுள்ள சகல மணிகளும் ஒரே எண்பெறுமானத்தை கொண்டிருக்கும். உ-ம்:- பத்தின் இடத்து மணிகள் யாவும் பத்து என்ற எண் பெறுமானத்தை பெறும். சட்டத்தின் வலது பக்கத்தில் இருந்து எண்கணித செய்கைகளுக்கான செயற்பாடுகள் ஆரம்பமாகும். (ஒன்றின் இடத்திலிருந்து) | 4 மணிகள் ஒரே பெறுமானத்தையும் ஒரு மணி வேறொரு பெறுமானத்தையும் பெறும். உ-ம்பத்தின் இடது மணிகளில் குறுக்கு சட்டத்திற்கு கீழுள்ள மணிகள் நான்கும் பத்து என்ற எண்பெறுமானத்தை பெறும்.மேலுள்ள மணி 50 என்ற எண் பெறுமானத்தை பெறும். சட்டத்தின் இடது பக்கத்தில் இருந்து எண்கணித செய்கைகளுக்கான செயற்பாடுகள் ஆரம்பமாகும். |


**உசாத்துணை நூல்கள்**

செல்வி.இ.செல்வநாயகம்
"சீரிய சிந்தனை"
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

திரு.ஆ.இரவீந்திரன்
(விசேட கல்வி அடிப்படைகள்) டிசம்பர்-2007

Empowerment of Isuru Schools Teachers
Teacher's Manual
Ministry of Education

Gama Abacus
Gama Abacus Acadamy
Palaly road, Jaffna

கணிதம் கற்பித்தல் முறைகள்
ஆசிரியர் கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம.



திரு.சிதம்பரப்பிள்ளை-தில்லைநாதன்
(முன்னாள் ஆரம்பக்கல்வி ஆலோசகர்)
அதிபர்
யா/குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

ஒருவரது கல்வியின் அத்திபாரமாக அமைவது ஆரம்பக் கல்வியாகும். அதுவே வாழ்க்கையின் உறுதியான ஆரம்பமாக கொள்ளப்படுகிறது. இன்று முன்பள்ளிச் செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. முன்பள்ளிகளின் திசைகோள்படுத்தல் மூலம் சிறார்கள் ஆரம்பக்கல்வியில் பிரவேசிக்கிறார்கள். வளர்ந்து வரும் நவீன விஞ்ஞான யுகத்திற்கேற்பவும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் "கல்வி" அமைய வேண்டுமெனக் கல்வியியலாளர்களால் உணரப்பட்டது.

இலங்கையில் பழைய மரபுக்கல்வி முறைகளில் ஏற்பட்ட தோல்விகள் மக்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய விழுமியங்களை விடப் போட்டி பொறாமையையே உருவாக்கியது. மக்களின் நல்வாழ்விற்காகவும், நாட்டிற்காகவும் கல்வி முறை சீர்செய்ய வேண்டுமெனப் பலரும் ஏற்றுக்கொண்டனர். இதற்கமைய 1960 இன் பின்னர் 1970,1980,1990,2000 களில் கல்வியியற் பிரச்சினைகள் பல இனங்காணப்பட்டு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆரம்பக்கல்வி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. 1998 இல் கம்பஹா மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு 1999 முதல் தேசியரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சீர்திருத்தம் 1999 இல் தரம் 01ல் ஆரம்பித்து 2003 இல் தரம் 5 இல் முடிவுற்றது.முன்னைய கல்விச் சீர்திருத்தங்களை விட அதிகளவில் வெற்றியளித்தது. இதன் தொடர்ச்சியாக 2007 ம் ஆண்டு புதிய கல்வி மறுசீர் அமைப்பிற்கமைய முதன்மைநிலை I இற்கும் 2008ம் ஆண்டு முதன்மைநிலை II இற்கும் 2009ம் ஆண்டு முதன்மைநிலை III இற்கும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

புதிய கல்விச் சீர்திருத்தம் பிள்ளைகளிடம் இருக்கும் உள்ளாந்த ஆற்றல்கள் திறமைகள் போன்றவற்றை இனங்கண்டு மேலும் அவற்றை விருத்தி செய்ய வழிசமைக்கிறது.ஆசிரிய மையத்திலிருந்து மாணவர் மையமாக மாறி தேர்ச்சி தழுவியதாக கலைத்திட்டம் அமைந்துள்ளது.

ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தின் விசேட சிறப்பியல்புகள் பல உள

- புதிய கட்டமைப்பு
  
  தரம் 1 முதல் தரம் 5 வரை முன்பு இருநிலைகளாகக் கொண்டிருந்தது. (தரம்1-3 கீழ் ஆரம்பக்கல்வி தரம்4,5 மேல் ஆரம்பக்கல்வி) இன்று மூன்று முதன்மை நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
  - ✻ முதன்மை நிலை 1 Key Stage 1 தரம் 1,2
  - ✻ முதன்மை நிலை 2 Key Stage 2 தரம் 3,4
  - ✻ முதன்மை நிலை 3 Key Stage 3 தரம் 5

ஒவ்வொரு முதன்மை நிலைக்கும் ஒரு ஆசிரியரே கற்பிப்பார்.தரம் 5,6 உம் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தையும் கனிஸ்ட இடைநிலைக் கல்விக் கலைத்திட்டத்தையும் இணைக்கும் பாலமாக அமைகிறது.

- பிள்ளைகளை இனங்காணல்
  
  தரம் 1ல் சேரும் பிள்ளைகளின் புகுநிலைத் தேர்ச்சிகளை இனங்காணும் வகையில் 14 தேர்ச்சிகளையும் 16 செயற்பாடுகளையும் கொண்டதாக 2005 ஆம் ஆண்டு திருத்தத்துடன் நடைமுறைக்கு வந்தது.(1998 இல் பிள்ளைகளை இனங்காணல் ஆரம்பமானது)

பாடசாலை ஆரம்பித்து 2 வாரங்களில் (10 நாட்கள்) 16 செயற்பாடுகளும் செய்யப்பட்டு (பிள்ளைகளைக் குழுக்களாகவும், தனியாகவும்) தேர்ச்சிகள் கணிப்பீடு செய்யப்படுகின்றன. இதனால் அவர்களின் கற்றல் தேவைகள் இனங்காண முடிகிறது. இதற்கமைய ஆசிரியர் கற்றல்-கற்பித்தலைத் திட்டமிட்டுச் செயற்படுத்துகிறார். இதேபோன்று தரம் 3இற்கும் 2007 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

- தேர்ச்சிமையக் கலைத்திட்டம்
  தேர்ச்சி எனக் குறிப்பது அறிவுத்திறன், மனப்பாங்கு மற்றும் விழுமியங்கள் போன்றவற்றைக் கொண்ட ஒரு கூட்டமாகும். (மாணவர்களின் இயலுமையை வெளிக்காட்டும்)

- அடிப்படைத் தேர்ச்சிகள்
  தேசிய ஆணைக்குழுவினால் 5 அடிப்படைத் தேர்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று 7 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. (புதியவை அடிக்கோடிடப்பட்டவை)
  - ✱ தொடர்பாடல் தேர்ச்சி
  - ✱ <u>ஆளுமை சார்ந்த தேர்ச்சி</u>
  - ✱ சுற்றாடல் சார்ந்த தேர்ச்சி
  - ✱ சமயமும் ஒழுகலாறும் சார்ந்த தேர்ச்சி
  - ✱ விளையாட்டும் ஓய்வும் சார்ந்த தேர்ச்சி
  - ✱ <u>வேலையுலகிற்கு தயாராகும் தேர்ச்சி</u>
  - ✱ கற்றலுக்காக கற்றல் தேர்ச்சி

- பாடப்பரப்புகள்
  நான்கு பிரதான பாடப்பரப்புக்களைக் கொண்டுள்ளது. பிள்ளை தாய்மொழியிலே கற்கிறது.

✱ மொழி → தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்

✱ கணிதம்

✱ சமயம் → சைவம் / கத்தோலிக்கத் திருமறை / கிறிஸ்தவம் / இஸ்லாம் / பௌத்தம் (இவற்றுள் ஒன்று)

✱ சுற்றாடல்சார் செயற்பாடுகள் → சுற்றாடல் / ஆக்கம் / அழகியல் / உடற்கல்வி

- வாய்மொழி ஆங்கிலம்
  நாட்டிலுள்ள சகல பாடசாலைப் பிள்ளைகளும் உரையாடுவதற்காக வாய்மொழி ஆங்கிலம் புகட்டப்படுகிறது. இது செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் ஏனைய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியராலே சிறப்பாக சுற்றாடல் சார் செயற்பாடு, கணிதம், ஆகியபாடப்பரப்பூடாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. தரம் 1-5 வரை கற்பிக்கப்படுகிறது.

- சர்வதேச மொழி
  தரம் 3,4,5 ல் கற்பிக்கப்படுகிறது. (முதன்மைநிலை I,II.III) ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.அல்லது குறுங்காலப் பயிற்சி பெற்ற ஆசிரியராலும் கற்பிக்கப்படுகிறது.

- இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்)
  புதிய கல்விச்சீர்திருத்தத்தின் படி முதன்மைநிலை 2,3 இல் தமிழ்மொழிமூல மாணவர்களுக்கு தமிழும் கற்பிக்கப்படுகிறது. புதிய கல்வி மறுசீரமைப்பின்படி முதன்மைநிலை I இருந்தே கற்பிக்கப்படுகிறது.தரம் 1,2 இல் வாய்மொழியாகவும் தரம் 3,4,5 இல் வாய்மொழியும்,எழுத்து மொழியும், கற்பிக்கப்படுகிறது.

- இணைப்பாடச் செயற்பாடுகள்.
  முதன்மைநிலை 1,2,3 இல் வாரம் ஒன்றிற்கு 30 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

☛ விருப்புப் பாடம்

முதன்மை நிலை 3இல் (தரம்5) வாரத்திற்கு 30 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளது,விரும்பிய சிறப்புப்பாடம் கற்பிக்கப்படுகிறது.உ-ம் சங்கீதம்,நடனம், சித்திரம், கணணி ...... மாணவர்களின் விருப்பத்திற்கமைய வகைப்படுத்தி அவ்வவ்வகைக்கு அவ்வவ் பாடம் ஒன்றுக்கு பாடத்திட்டம் எழுதிக் கற்பிக்கப்படுகிறது.


☛ செயற்பட்டு மகிழ்வோம்

காலை உடற்பயிற்சிச் செயற்பாடாக 20 நிமிடங்கள் செய்யப்படுகிறது.இதில் பின்வரும் அம்சங்கள் உண்டு.

✱ உடலை உஷ்ணப்படுத்தும் பயிற்சிகள்
✱ மைதான நிகழ்ச்சி
✱ சுவட்டு நிகழ்ச்சி
✱ போலச் செய்தல்
✱ விளையாட்டு

இதனால் செயற்பட்ட மகிழ்வோம் எனப்படுகிறது.

☛ கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள்




தரம் 1 2 3 4 5

முதன்மை நிலை 1ல் வழிகாட்டப்பட்ட விளையாட்டு முக்கியத்துவம் பெறுகிறது. முதன்மை நிலை 2,3 இல் செயற்பாடுகளும் எழுத்து வேலையும் முக்கியத்துவம் பெறுகிறது.

☛ அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் (கணிப்பீடு)

முதன்மை நிலை 1,2,3, இன் (தரம் 2,4,5) இறுதியில் மாணவர்கள் அடைந்திருக்க வேண்டிய அதிகுறைந்த பட்சத் தேர்ச்சிகள் இனங்காணப்பட்டுள்ளன.

முதன்மை நிலை I இற்கு 40 தேர்ச்சிகள்
முதன்மை நிலை II இற்கு 52 தேர்ச்சிகள்
முதன்மை நிலை III இற்கு 54 தேர்ச்சிகள்

ஒவ்வொரு நிலையிலும் இத்தேர்ச்சிகள் அடைந்த பின்பே அடுத்த முதன்மை நிலைக்கு அனுமதிக்க வேண்டும். எனவே அத்தேர்ச்சி மட்டத்தை அடையச் செய்யும் பொறுப்பு அவ்வாசிரியருக்கே.

☛ பாடம் சார் தேர்ச்சிகள்.

ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் சார்ந்த தேர்ச்சி கணப்பீடுகள் உண்டு.அவ்வவ்விடயங்கள் கற்பிக்கும் போதே அத்தேர்ச்சிகள் கணிப்பிடப்படுகிறது.

☛ தரம் 6/5 வகுப்புடன் தரம் 1/2 இணைந்த குழு வேலை

முதன்மை நிலை 1 மாணவர்கள் தரம் 6 அல்லது தரம் 5 மாணவர்களுடன் இணைந்து குழுவேலைச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.இதன் மூலம் சுமுகமான தொடர்பாடல், பொறுப்புணர்ச்சி, தலைமைத்துவம், நற்பண்புகள், மாணவர்-மாணவர் மூலம் கற்றல் போன்றன மேம்படுகிறது. இச்செயற்பாடானது வாரத்திற்கு 30 கொண்டதாக உள்ளது.

☛ கணிப்பீடு-மதிப்பீடு

முறைசாராததும்(அவதானித்தல்,வாய்மொழி), முறைசார்ந்தது (எழுத்து) ஆக அமையலாம். முதன்மை நிலை I முறைசாராதது முக்கியத்துவம் பெறுகிறது.அவ்வவ் வகுப்பு ஆசிரியரே தயாரித்து கற்றல்- கற்பித்தலின் போதே செய்ய வேண்டும்.இதனால் மாணவர்களின் வலிவு,மெலிவு,கற்பித்தலின் வலிவு,மெலிவுகளையும் இனங்கண்டு மேம்படுத்த உதவும்.செய்யப்படும் சகல கணிப்பீடுகளும் தரம் 1 தொடக்கம் 5 வரை தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டும். தேர்ச்சியடையவில்லை எனின் பரிகாரக் கற்பித்தல் செய்து மீண்டும் கணிப்பீடு செய்து பதிய வேண்டும். முன்னைய •அருகில் ✓இடப்பட வேண்டும்.( •✓ / •✓)

- பல்வேறு வளங்கள்
- ✱ ஒரு பிள்ளைக்கு 1 சதுர மீற்றர் வீதம் கொண்ட வகுப்பறை
- ✱ செயற்பாட்டு மேசை / சீமெந்தினாலான தட்டுள்ள வகுப்பறை
- ✱ பல்வேறு விசேட மூலைகள் உ-ம் நீர் மூலை, வாசிப்பு மூலை, சுற்றாடல் மூலை,....................
- ✱ விளையாட்டு முற்றம்/பூஸ்கா போன்றவையாகும்.

ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களிடம் காணப்படும் சில கற்றல் பண்புகளைப் பார்ப்போம்.

- ✱ ஐம்புலன்கள் மூலம் கற்றல்
- ✱ புதிய புதிய விடயங்களை அறியும் நாட்டம் உடையவர்
- ✱ செயல்கள் மூலம் கற்க விரும்புவர்
- ✱ பின்பற்றல்/போலச் செய்தல் மூலம் கற்க விரும்புவர்
- ✱ விளையாட்டின் மூலம் கற்க விரும்புவர்
- ✱ தர்க்கரீதியாகச் சிந்தித்து நாம் கூறியபடியே செய்வர்.
- ✱ எவற்றையும கையாண்டு பார்க்கும் ஆர்வம் உடையவர்
- ✱ எதைக் கற்கிறோம்,ஏன் கற்கிறோம், என்பதை அறியாமலே கற்கிறார்.
- ✱ தமது ஆசிரியர் மீதே பெரிதும் நம்பிக்கை கொண்டவர்.
- ✱ தொடர்ச்சியாக இருக்கையில் இருந்தே கற்க விரும்புவார்.
- ✱ சுதந்திரமாகத் தொழிற்பட விரும்புவர்.

போன்றனவாகும்.

இவற்றை அனுசரித்தே ஆசிரியர் தமது கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டியுள்ளது.

ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடம் இருக்க வேண்டிய பண்புகள்.

- ✱ ஆசிரியர் மாணவர்களுள் ஒருவராகச் செயற்படல்
- ✱ புதுப்புது கற்பித்தல் துணைச்சாதனங்கள் பயன்படுத்தல்
- ✱ இன்முகமும், சிறந்த மொழிப்பிரயோகமும், கொண்டிருத்தல்
- ✱ சிறந்த தொடர்பாடலைக் கொண்டிருத்தல்
- ✱ மாணவர்கள் மீது இடையறாத அக்கறை உணர்வு இருத்தல்
- ✱ முன்மாதிரியாகவும்,வழிகாட்டுபவராகவும் செயற்படல்
- ✱ மாணவர்களிடம் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தல்
- ✱ நவீன உலகிற்கமைய தன்னை மாற்றிக் கொள்ளல்.
- ✱ நவீன கருவிகள்,உபகரணங்களை பயன்படுத்திக் கற்றல்-கற்பித்தலை மேம்படுத்த முன்வரல்
- ✱ இணைபாட விதானச் செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்தல்
- ✱ தரஉள்ளீட்டு பொருட்களை திட்டமிட்டு வாங்கி மாணவர் பயன்படுத்த உதவுதல்.
- ✱ சிறந்த செவிமடுப்பவராக இருத்தல்
- ✱ பல்வேறு கற்பித்தல் முறைகளை கையாளுதல்
- ✱ தமக்கென சிறந்த நற்கொள்கையுடன் தொழிற்படல்
- ✱ வளங்களை உரிய முறையில் பயன்படுத்தலும்,பேணுதலும்.
- ✱ ஆசிரியர்-ஆசிரியர், அதிபர், மாணவர், பெற்றோர்,இடையில் நல்ல தொடர்பையும் ஒத்துழைப்பையும் பேணல்
- ✱ தரவட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்
- ✱ சிறந்த வகுப்பறை முகாமையாளராகத் தொழிற்படல்.

போன்றனவாகும்.

ஆசிரியர் தமது வாண்மையை விருத்தி செய்து நல்ல வினைத்திறன் உடைய கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்த முன்வருதல் வேண்டும்.கற்பித்தல் கலாசாரத்தில் இருந்து கற்றல் கலாச்சாரத்திற்கு மாற வேண்டும்.செயற்பாடுகள் நிறைந்ததாக கற்பித்தல் அமைய வேண்டும்.இதற்கென நன்கு திட்டமிட்டு வளங்களைத் தயாரித்தும் பெற்றும் மாணவர் செயற்பட வழிகாட்ட வேண்டும்.ஆரம்பக்கல்வி ஆசிரியர் சமூக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சிறந்த முதற்படியாக அமைகிறார்கள்.அவர்களின் செயற்பாடுகளுக்கு எல்லோரும் ஒத்துழைத்து நாட்டின் நம்பிக்கையை உருவாக்குவோம்.

# பாடசாலையின் வினைத்திறன் மற்றும் வினை திறன் மேம்பாட்டில் ஆசிரியரின் வகிபங்கு.



திருமதி.வாசுகி நித்தியானந்தன்.
ஆசிரியர்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

மனிதனுக்கு கல்வி அறிவினை ஊட்டுவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பே பாடசாலை ஆகும். இன்று எல்லா நாடுகளிலும் கல்வி வழங்கும் பொறுப்பினை அரசே ஏற்றுள்ளதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.தனியார் துறையினரின் பங்களிப்பும் சில நாடுகளில் காணப்படுகின்றது. அதனையும் அரசு வழிப்படுத்துகின்றது. எல்லோருக்கும் கல்வி வழங்கவேண்டிய தேவை அரசின் பொறுப்பாக உள்ளதனால் அதன் பங்களிப்பு இதில் முக்கியத்துவம் பெறுகின்றது.ஏனெனில் அரசின் தலையீடு இல்லாவிட்டால் எல்லோருக்கும் கல்வியை பெற்றுக்கொள்ள முடியாத நிலையொன்று ஏற்பட்டுவிடும்.

கல்வியானது தனிமனிதனுடைய வளர்ச்சியோடு மட்டும் தொடர்புடையது எனப் பல்லாண்டுகளாகக் கருதப்பட்டு வந்த நிலை மாறி, கல்வி "சமூகத்துடன்" நெருங்கிய தொடர்பு கொண்டு சமூகவளர்ச்சியை பாதிக்கும் ஒரு செயல்முறையாகும் என அறிந்துள்ளோம்.இதனாலேயே அரசின் அக்கறை இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பாடசாலைகள் பெருமளவிற்கு அரசினால் நிர்வாகிக்கப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.அரசே கல்வி தொடர்பான தேசியக்குறிக்கோள்களை நிர்ணயிக்கின்றது.இக்குறிக்கோள்கள் இலங்கையில் தற்போது தேசியக்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றது. இவை தேசிய ரீதியான அறிவூட்டல், திறனை முன்னேற்றுதல், நேர்மனப்பாங்கு, தொழில்சார்தேர்ச்சி, நற்பழக்கவழக்கங்களை உருவாக்குதல்,கூடிவாழுதல்,சமாதானத்தை விரும்புதல்,தேசப்பற்றுடையவராக இருத்தல், போன்ற பல்வேறு குறிக்கோள்களை அடையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

தற்போது இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பானது, பின்வருமாறு அமைந்துள்ளது. அவை முறையே

1. ONE "AB" வகைப் பாடசாலைகள், இவை க.பொ.த. உயர்தரம் வரை விஞ்ஞானம்,கலை, வர்த்தகம், வகுப்புகளைக் கொண்டுள்ளன.
2. ONE "C" வகைப் பாடசாலைகள், இவை க.பொ.த. உயர்தரம் வரை கலை,வர்த்தக வகுப்புகளைக் கொண்டுள்ளன.
3. வகை இரண்டு (Type Two) என்ற பிரிவிலுள்ள பாடசாலைகள்,இவை க.பொ.த. சாதாரண தரம் வரையிலான வகுப்புக்களைக் கொண்டிருக்கும்.
4. வகை மூன்று (Type Three) என்ற பிரிவிலுள்ள பாடசாலைகள்,இவை பெரும்பாலும் ஆரம்ப பாடசாலைகளாகவே உள்ளன.

இலங்கையில் பாடசாலைகள் நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டும்,வேறு காரணிகளின் அடிப்படையிலும்அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், பிரிவேனாப் பாடசாலைகள், சர்வதேசப் பாடசாலைகள் எனப் பிரிக்கப் பட்டுள்ளன.

| பாடசாலை வகை | மாணவர் தொகை | பாடசாலை எண்ணிக்கை |
|---|---|---|
| அரச பாடசாலை | 40 46 233 | 10 505 |
| தனியார் பாடசாலை | 96 917 | 80 |
| பிரிவேனாப் பாடசாலை | 54 968 | 599 |
| சர்வதேசப் பாடசாலை | 60 000 | 95 |

மூலம் :-
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை(2002)

தற்போது (2009) இலங்கையில் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் பாடசாலைகள் 9 678 ஆகும்.93 சதவீதமான பாடசாலைகளும்,96 சதவீதமான மாணவரும்,அரச துறையின் பொறுப்பிலேயே உள்ளனர்.3000 மாணவருக்கு மேலான எண்ணிக்கை கொண்ட 90 பாடசாலை உள்ளன. ஆனால் 100 பிள்ளைகளிலும் குறைவான எண்ணிக்கை கொண்ட பாடசாலைகள் 2936 ஆகவுள்ளது.

பாடசாலை ஒரு நிறுவனம் என்ற வகையில் ஒரு சமூகத்தின் முறைசார் கல்வியை வழங்கும் பொறுப்பு அச்சமூகத்திற்கு ஒப்படைக்கப்படுவதனால் ஏதாயினும் சிறப்பான சில பொது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு சட்டரீதியாகவும், விதிமுறையாகவும், பெற்றுக்கொண்ட பொறுப்பும்,அதிகாரமும் பெற்ற மக்கள் கூட்டத்தினர் ஒன்று சேர்ந்து பல்வேறு கருமங்களையும் செயன்முறைகளையும் ஒன்று திரட்டி கட்டியெழுப்பும் முறையான சமூக அமைப்பு என்ற வகையில் "பாடசாலை ஒரு நிறுவனம்" என்றழைக்கப்படுகின்றது.

சிறந்த பாடசாலையின் பண்புகள்.

பாடசாலையும்,ஆசிரியர் தொழிலும், இன்றைய சமூகத்தில் மேலானவை.நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளையும் சிறந்த பாடசாலைகளாக வளரச் செய்தல் வேண்டும்.ஒரு சிறந்த பாடசாலையில் (Promiss in School) பின்வரும் பண்புகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1. மாணவர்களின் பாடசாலை வரவு உயர்ந்த மட்டத்தில் இருக்கும்.
2. மாணவர் இடைவிலகல் அபூர்வமாகவே நிகழும்.ஒழுக்கசீலர்களாக மாணவர்கள் காணப்படுவர்.
3. மாணவர்களுடைய தேர்ச்சிகளும்,பரீட்சைப் பெறுபேறுகளும் உயர்ந்த மட்டத்தில் இருக்கும்.4.ஆசிரியர் லீவு பெறுதல் குறைந்த மட்டத்தில் இருக்கும்.ஆசிரியர் அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.
5. பாடசாலை சமூகத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கும்,உயிர்ப்பன பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்கும்.
6. பௌதீக வளங்கள் போதியதாகவும்,அவை நல்ல முறையிலும் பராமரிக்கப்படும்.
7. கற்றல் கற்பித்தலில் இணைபாடவிதானச் செயற்பாடுகளிற்கு முக்கிய இடமும், அவை சிறந்த முறையிலும் செயற்படுத்தப்படும்.

பாடசாலையில் வினைத்திறன்
**(Efficiency of School)**

வினைத்திறன் என்பது ஒரு பாடசாலையில் வளங்களை உச்சப்பயன் தரும் வகையில், சிக்கனமாகப் பயன்படுத்துவதைக் குறிக்கும்.அது உள்ளீட்டுடன் (Input) சம்மந்தமானது. அதாவது குறைவான (Minimum) வளங்களைக் கொண்டு உச்ச பயனைப்பெற முடியுமாயின்,அதுவே வினைதிறனின் மிக உயர்மட்டமாக அமையும்.

**வினைதிறன் உள்ள பாடசாலை ஒன்றின் பண்புகள்.**

1. பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயன்முறை தெளிவாக நிச்சயிக்கப் பட்டுள்ளமை.
2. பூரணத்துவம் வாய்ந்த தலைமைத்துவம் காணப்படுதல்.
3. ஆசிரியர்கள், மாணவர்களின் திறமைகள் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படுதல்.
4. ஆசிரியர்,மாணவர், பெற்றோர் என்ற மூன்று தரப்பினரும் அர்ப்பணிப்புடன் ஒன்று சேர்ந்து செயலாற்றும் உணர்வு கொண்டவர்களாக இருத்தல்.

5. ஆசிரியர் குழுவினரது உற்சாகமான செயற்பாடும்,கூட்டுணர்வும் காணப்படுதல்.
6. பாடசாலையின் உள்ளே சிறந்த ஆளிடைத் தொடர்பு நிலவுதல்.
7. போதியளவு வளங்கள் காணப்படுவதால் அல்லது குறைந்தளவு வளங்களைக் கொண்டு உச்சப் பயனையும் பெற்றுக்கொள்ளல்.
8. மாணவர்களது திறமைகளும் எதிர்பார்ப்புக்களும் உயர்ந்த மட்டங்களில் காணப்படுதல்.
9. பாடசாலைகளின் இணைபாடவிதானச் செயற்பாடுகள் அபிவிருத்தியடைந்த நிலையிலிருக்கும்.

பாடசாலை வினைத்திறனுடன் செயற்படவேண்டுமாயின் அதில் கடமையாற்றும் ஆசிரியர்களும் வினைத்திறன் கொண்டவர்களாக செயற்படுதல் வேண்டும்.ஏனெனில் ஒரு பாடசாலையில் உள்ளவர்களில் ஆசிரியர்களும் மாணவர்களுமே முக்கிய பிரிவினர்களாக உள்ளனர்.

ஆசிரியர் வினைத்திறன்.
**(Efficiency of Teacher)**

ஆசிரியர்கள் மாணவரினதும் பாடசாலையினதும் தேவைகளை நிறைவேற்று வதற்கான கடமைப்பாட்டையும் திறன்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

1. தமக்குத் திறமையான, வினைத்திறன்மிக்க ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை கொண்டவர்கள் மாணவர்கள் ஆகும்.
2. வினைத்திறனுடனும் தேர்ச்சி மிக்கதாகவும் தமது கடமைகளை ஆற்றவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு.
3. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தொழில்வாண்மைத் திறனைப் பொறுத்து, ஆசரியர்களின் வினைத்திறன் உறுதி செய்யப்படுகின்றது.இதற்காக அவர்களிற்கு தொழிலிற் சேர்வதற்கு முன்னரும், தொழிலில் இருக்கும் போதும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.
4. ஆசிரியர் வினைத்திறன் சார்ந்த விடயங்களைத் தாமதமின்றியும், நியாயபூர்வமாகவும் கையாளவேண்டிய பொறுப்பு அதிபர்களிற்கு உண்டு.
5. ஆசிரியரை முன்னேற்றுவதற்குரிய வினைத்திறன் மிக்க சூழல் பாடசாலையில் இருத்தல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் எதிர்கால ஆசிரியர்கள் தொடர்பாக கல்வி ஆணைக்குழு வானது நல்லதொரு ஆசிரியர் குழாம் இல்லாத நிலையில் நாட்டின் கல்வியை விருத்தி செய்யமுடியாது என்று கருத்து வெளியிட்டுள்ளது.எனவே ஆசிரியரின் வினைத்திறன் பாடசாலையின் வினைத்திறனில் முக்கியத்துவம் வகிக்கின்றது.

பாடசாலையின் வினைதிறன்
**( Effectiveness of school)**

வளங்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தி குறிக்கோள்களை அடைவதைக் குறிக்கின்றது.அது வெளியீட்டுடன் (Out put) சம்மந்தமானது. இது ஒரு முகாமையாளரின் சாதனையை வெளிப்படுத்துவது ஆகும்.

வினைதிறன் உள்ள பாடசாலையின் பண்புகள் முறையே

1. பாடசாலை மாணவர்களின் பங்களிப்பு திருப்திகரமாக இருத்தல் வேண்டும்.
2. மீளக்கற்போரின் எண்ணிக்கை குறைவாக இருத்தல் வேண்டும்.
3. பாடசாலையில் சேர்ந்த மாணவர்கள் தொடர்ந்து அங்கு கல்வியை கற்றல் வேண்டும்.
4. பாடசாலை அறிக்கைகள் யாவும் கால ஒழுங்கிற்கமைய பேணப்படுதல் வேண்டும்.

எனவே வினைதிறன் சரியானவற்றை செய்வதைக் காட்டுகின்றது.அது ஒரு முகாமையாளரின் சாதனையை வெளிப்படுத்துகின்றது.பாடசாலையின் குறிக்கோளிற்கும், அதன் அடைவுகளிற்கும் இடையில் உயர்ந்த இணைப்பு இருக்குமாயின் அது ஒரு சிறந்த வினைதிறன் உள்ள ஒரு பாடசாலை ஆகும்.

ஒரு பாடசாலையின் செயற்பாடுகளிற்கு கிடைக்ககூடிய வளங்கள் முறையே

- மனிதவளம்(**Human Resource**) – அதிபர்,ஆசிரியர், ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்,நலன்விரும்பிகள்,பழையமாணவர்கள்,கல்வி அலுவலர்கள்,அரசியல்வாதிகள் போன்றோர் ஆகும்.
- பௌதிக வளங்கள் (Physical Resource) – நிலம், கட்டடம், உபகரணங்கள், வேறுபொருட்கள்,
- நிதி(**Finance**)-வசதிகள் சேவைக்கட்டணம்,தரஉள்ளீட்டு நிதி, பழைய மாணவர்சங்க நிதி உதவிகள், நன்கொடைகள்,அரசமுதலீடுகள்.
- நேரம்(Time) – நேரம் பொன்னானது இழக்கப்படும் ஒவ்வொரு நிமிடமும் திரும்ப பெறமுடியாது.அதனை மிக நிதானத்துடன் பயன்படுத்துதல் வேண்டும்.

இவ்வளங்களை திட்டமிட்டு செயற்படுத்துவதில் அதிபரின் பங்களிப்பு முக்கியமானது. பாடசாலைகளில் வெவ்வேறு முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு வேலைகள் பகிர்ந்தளிப்பதன் மூலம் வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறக்கூடியதாக உள்ளது.

பாடசாலை வினைதிறனை அதிகரிப்பதில் ஆசிரியர் முக்கிய இடம் வகிக்கின்றார்.நல்ல ஆசிரியர்கள் எப்போதும்

- கற்பிக்கும் பாடத்தில் ஆழ்ந்த அறிவும்,நடைமுறை மாற்றங்களையும் அறிந்திருப்பார்.
- கற்பித்தலில் நவீன தொழில்நுட்பங்களை கையாளக்கூடியவராக இருப்பார்.
- வகுப்பறைக் கற்பித்தல்,மாணவர் வகுப்பறைச்சூழல்,பாடசாலை சூழல் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருப்பார்.
- தமது தொழிலை நல்ல முறையில் கொண்டு நடாத்துவதற்கேற்ப தொழிற் தகமை கொண்டவராக இருப்பதுடன், பிள்ளைகளுக்கு நல்ல முறையில் கற்பிப்பவராக இருப்பார்.
- பிள்ளைகளை நன்கு அறிந்து,தனியாள் வேறுபாடுகள், பலவீனங்கள் போன்றவற்றினை அறிந்திருத்தல்

ஆசிரியரின் வகிபங்கு

பண்டைய சமூகங்களில் சமயகுரவர்களே பெரும்பாலும் ஆசிரியர்களாக விளங்கினார்கள். மேலைநாட்டில் கிறிஸ்தவப் பாதிரிமாரும்,இந்தியப் பாரம்பரியத்தில் இந்துமதத் துறவிகளும்,பௌத்த மதத்தில் பிக்குகளும் ஆசிரியர்களாக பணியாற்றினர்.

மரபுவழி ஆசிரியர்களின் வகிபங்கு

- ஆசிரியர்கள் சமய அறிவில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர்
- ஆசிரியர்கள் பெரும்பாலும் துறவிகளாகவே இருந்தனர்.
- கல்வி கற்றலும் பாடஏற்பாடும்,முற்றாகவே சமயம் தழுவியதாகவே இருந்தது.
- கல்வியின் நோக்கம் பெருமளவிற்கு மாணவர்களை அறவழிப்படுத்துவதாகவும், அவர்களை ஒழுக்கசீலர்களாக்குவதுமாக அமைந்தது.
- ஆசிரியர்கள் மாணவர்களையும், வகுப்பறையையும்,தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.
- ஆசிரியர் கூறுவதை திரும்பக் கூறுதல், மனனம் செய்தல், மனனம் செய்தவற்றை *சரி பார்த்தல்* என்பனவே *கற்றல்* முறையாகவும்,கற்பித்தல் முறையாகவும் விளங்கின.

ஆசிரியர்களின் புதிய வகிபாகம்.

- சகல ஆசிரியர்களும் பயிற்றப்பட்டவர் களாகவும், எதிர்காலத்தில் பட்டதாரி களாகவும் ( All Graduates Service) ஆசிரியர் மாறுதல் வேண்டும்.

- ஆசிரியர் பணிக்குப் பொருத்தமான உளப்பாங்குடையோரை மட்டுமே அப்பணிக்குத் தெரிவு செய்தல் வேண்டும்.
- ஆசிரியர் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, என்பவற்றின் அரசியல் தலையீட்டிற்கு இடமளிக்கப்படாது. தகுதி வாய்ந்தவர்களுக்கு பதவி உயர்வும், இடமாற்றங்களும்,ஒழுங்காக நிகழுதல் வேண்டும்.
- அண்மைக் காலத்தில் நிறுவப்பட்ட ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வியியலாளர் சேவை, கல்வி நிர்வாக சேவை, என்பனவும் இதற்குரிய சாதக காரணிகளாக உள்ளது.

மரபு ரீதியான ஆசிரிய வகிபாகத்தினூடாக ஆசிரியர் முன்னுரிமை வழங்குவது கற்பித்தலுக்கேயன்றி கற்றலுக்கன்று. பாடஅறிவுடன் கூடிய ஒருவர் "ஆசிரியர்" என்ற அந்தஸ்தினைப் பெறுகின்றார். பாடஅறிவு அற்றவரும் படிப்பதில் விருப்பமுள்ளவர்களுமான பிள்ளைகள் "மாணவர்கள்" என்ற இடத்திலுள்ளனர். இங்கு அறிவு முழுவதும் ஆசிரியராலேயே மாணவர்களிற்கு கடத்தப்படுவதனால், கடத்தல் வகிபங்கு (TRANSMISSION ROLE) எனப்படும்.

மாணவர்கள் பெற்றிருந்த அனுபவங்களையும் கருத்திற் கொண்டு. அவற்றிலிருந்தும் பயன் வகையிலான இருவழித் தொடர்பாடல் முறை பற்றிப் பிற்காலத்தில் ஆராயப்பட்டமையின் விளைவாக ஆசிரியரின் கொடுக்கல் வாங்கல் வகிபங்கு (TRANSACTION ROLE)தோன்றியது. இங்கு ஆசிரியர் வசதி செய்து கொடுப்பவராக(FACILITATER) செயற்படுவர்.கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கி,மாணவர்களை வேலையில் ஈடுபடுத்தி, மாணவர்கள் முன்னறிவால் பயன்பெறக்கூடிய ஒரு வகிபங்காகும்.

21ம் நூற்றாண்டில் மாணவர்களின் நவீன தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் நிலைமாறும் வகிபங்கு (TRANSFORMATION ROLE) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கற்றல் செயலொழுங்கு முன்கூட்டியே திட்டமிடப்படவேண்டும்.வெவ்வேறு வடிவங்களில் கற்றல் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படும்.காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரியரின் வகிபாகமும் மாற்றத்தை வேண்டி நிற்கின்றது.தற்போது ஆசிரியர் புதிய நிலை மாற்று வகிபாகத்தை நன்கு விளங்கி அதன்படி செயற்பட வேண்டி உள்ளது.

## முடிவுரை (Conclusion)

பாடசாலையில் வினைத்திறன் வளங்களின் உச்சப்பயன்பெறும் வகையில் செயற்படுத்துவதனையும் அது உள்ளீட்டுடனும், விளைதிறன் பாடசாலையின் வெளியீட்டுடனும் தொடர்புடையது ஆகும்.பாடசாலையின் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றுபவர் ஆசிரியர்கள் ஆவார்.அவர்களின் வகிபங்கு பாடசாலையின் வினைத்திறன்,விளைதிறன் என்பவற்றில் முக்கிய பங்காற்றுவதனை அவதானிக்க முடியும்.இவற்றில் அக்கறை செலுத்தாத பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவடைவதுடன்,பாடசாலையை மூடவேண்டிய நிலையும் ஏற்படுவதனை அவதானிக்கலாம்.

## உசாத்துணை நூல்கள்- References


1. உலகநாதர் நவரத்தினம், மாரிமுத்து கணபதிப்பிள்ளை "வகுப்பறையில் ஆசிரியவாண்மை" வெளியீடு திருமதி விக்கினேஸ்வரி நவரத்தினம் 83/3B 37ம் ஒழுங்கை, கொழும்பு 06.ஆவணி.2002

2. ந.ஆனந்தராஜ் முகாமைத்துவ நுட்பங்கள் வெளியீடு - நந்தி பதிப்பகம்,வல்வெட்டித்துறை,செப்டெம்பர் 1999

3. உ.நவரட்ணம்,மா.கணபதிப்பிள்ளை,புலமை காலாண்டிதழ்-மலர் 01 ஆடி 2004 இதழ்01

4. ம.சின்னத்தம்பி-ஆசிரிய முகாமைத்துவம் விஸ்டம் பிரசுரிப்பாளர்,சாம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில், முதற்பதிப்பு மார்கழி 2004.

# CONTRASTIVE APPROACH TO SECOND LANGUAGE TEACHING

K. Sanmuganathan,
Lecturer in English Language,
ELTC,
University of Jaffna.

## Introduction

Learning strategies, which have been defined as "specific actions, behaviours, steps or techniques used by learners to enhance their own learning" are often considered essential in facilitating the learning of a foreign language. More specifically, if teachers intend to maximize learners' potential, efforts need to be made to train learners to use strategies that can improve their learning effectiveness (Larsen-Freeman, 2000). This leads us to consider the possible ways in which strategy training should be conducted. If strategies are taught in ways that are not suited to the needs of the learners, it may be difficult to expect any desired result in strategy training over the short term. It is therefore important to look into various factors affecting the learning process before attempts are made to design strategy training.

One of the factors influencing the learning process and the use of strategies mentioned above is interference or negative transfer, which may be defined as "the use of a negative language pattern or rule which leads to an error or inappropriate form in the target language" (Richards, Platt and Platt, 1992, p.205). The term 'interference', however, has also been used to refer to transfer of a learner's previous or existing knowledge of the target language while learning the same language. Errors may therefore occur as a result of such intralingual interference, which involves an application of general training strategies similar to those manifested in first language learning.

## Source of learner errors.

There are admittedly a number of potential pitfalls to watch out for when analyzing learner English as the "errors" it contains. It is difficult, for example, to form a clear idea of what exactly is an error. What sounds 'wrong' or 'foreign' to one researcher may seem quite acceptable to another. It is also difficult to establish what caused a learner to make a particular error – analysis is usually carried out in the absence of the learner in question and it is not always the case that the analysist is proficient in the learner's mother tongue. So it is not always easy to establish whether an error is attributable to interference or for example, simple lack of concentration, classroom misunderstanding, pure accident, or even interference from another third language the learner has been in contact with. So there is still much to be gained from taking a much closer look at learner English in all its varieties.

Similarities or perceived similarities between languages can exist to varying degrees in the pronunciation and stress patterns of the languages, in grammatical structures of sentence, in word order, tense usage, verb inflections, in their pragmatics and style, and in the way they deal with questions and negatives, to name just a few as well as in the spelling and the morphology of individual words. It is as important to be aware of these similarities when we are learning a language as it is to learn the differences and in some cases, these similarities can be capitalized upon to good effect. Where they are not

purely coincidental, they are the result of contact between languages, of languages and cultures rubbing up against one another at some points or many points, in their long evolution.

**Error Taxonomies and Classified Errors**

It is necessary to study the characteristics of the language errors, the pattern of the common errors, and the situation involved in the errors to help analyze errors systematically, as well as to understand, and find causes of such errors. In addition, the study of errors will improve the process of second language learning and develop more information for developing the second language acquisition theory. In the past, it is believed that most of the errors were caused by the transformation from one language to another language. Later, it was found that the influence of native language on the second language is quite minimal; that is, it affects only 3-25% of such errors (Richards,1974). James (1998) studied Error Taxonomies and classified errors into two types.

**Linguistic category classification**

This type of taxonomy specifies errors in terms of linguistic categories and in terms of where the error is located in the overall system of the target language. First, it indicates at what level of language the error is located: in phonology, grammar, lexis, text or discourse and if it is grammar level, what particular grammatical construction does it involve? Having established the level of the error, one next asks about its class. Given that it is a grammar error, does it involve the class of noun, verb, adjective, adverb, preposition, conjunction or determiner? Which leads to the assignment of a rank to the error, in terms of where it lies on the hierarchy of units that constitute its level. Finally, we need to specify the grammatical system that the error affects such as tense, number, voice, countability transitivity.

**The surface structure taxonomy**

This is the second type of descriptive taxonomy proposed by Dulay, Burt and Krashen (1982) who describe this taxonomy as being based on "the way surface structures are altered" (1982, P.150).Errors can occur because of change in surface structure in specific and systematic ways. James (1998) states that there are four causes of errors which have been identified as interlingual errors, intralingual errors, communication strategy-based errors and induced errors.

**Interlingual errors**

These kinds of errors are influenced by the native languages which interfere with target language learning. Learners translate word by word idiomatic expressions, vocabulary and even the grammatical rules of the learners' first language into the second language. In contrastive analysis, it is believed that the type of errors made by the learners of the target language can be predicted and their causes can be determined.

**Intralingual errors**

These types of errors are caused by the target language itself. Apart from recourse to L1 transfer, the learners in ignorance of a target language form on any level and any class can do of two things: either either they can set about learning the needed item, engaging their learning strategies, or they can try to fill the gap by resorting to communication strategies. Learning strategies are used for code breaking while communication strategies are encoding and decoding strategies. Both types of strategy can be the source of error.

**Positive and negative transfer**

When the relevant unit of structure of both languages is the same, it most often results in correct language production called positive transfer, "correct" meaning in line with most L1 speakers' notions of acceptability. However, that language interference is often discussed as source errors known as negative transfer. Negative transfer occurs when speakers and writers transfer items and structures that are not same in both languages. Within the theory of contrastive analysis, the systematic study of a pair of languages with view to identify their structural differences and similarities, the greater the differences between the two languages, the more negative transfer there should be.

**Language transfer.**

Patten (1986) made his observation pertaining to L2 acquisition and FL teaching. Language transfer is not the simple transfer of "habits" as once believed. First – Language influence is manifested in one of two ways; psycho linguistic transfer and communicative transfer.

Research on second language acquisition puts to rest the simplistic notion of transfer of "First–language habits" an assumption espoused by behaviourists in the fifties and sixties. Instead of focusing on differences between the first and second languages, researchers investigating the role of the first language in second language acquisition have turned their attention toward the degree of similarity between the languages. That is, if and when transfer occurs in the process by which language is internalized, it occurs because of similarities, not differences.

Research on the transfer of lexical meaning has shown that learners are more likely to use a transfer strategy when they perceive an overlap between the first and second languages than when there are obvious differences. Other research has documented that transfer occurs when a transitional stage resembles a structure in the first language. If transfer is triggered, the result is either more structures in that stage that look first- language structures or a protraction of that stage of development. This type of transfer can be called "Psycho linguistic transfer", since it affects how language is internalized or structured during development.

Regarding psycholinguistic transfer, it is generally agreed that the influence of the first language is limited, in that transfer cannot violate the natural properties of acquisition. In other words, transfer does not happen willy – nilly in the learner's developing linguistic system. Transfer can only happen when conditions are right. The discovery that acquisition tends to proceed from unmarked to marked structures. If a learner's first language has a marked rule but the second language has an unmarked rule, transfer of the first- language rule is blocked. However, if the first language has an unmarked rule but the second language has corresponding marked rule, the first language rule will most likely transfer. For example, among the three word orders subject–verb–object (SVO), subject– object–verb (SOV) and verb–subject–object (VOS), SVO is the most frequent in the world's languages and is considered less marked. Regarding the formation of yes-No questions, rising intonation that refrains SVO order (eg. She is leaving now?) is much more common than subject- verb inversion (e.g. Is she leaving now?) in natural languages and is therefore posited as less marked (actually unmarked in this example). Language learners acquire the unmarked or less marked forms more easily than they do more marked forms, and the unmarked forms emerge first in learner out put. Thus, a learner of a language with SVO order will produce Yes- No questions with rising intonation and the SVO order intact. Research on markedness in second–language acquisition has included not just syntax but lexicon, semantics, morphology and phonology as well.

"Communicative transfer" is the use of first–language syntax to generate an utterance on the spot under pressures of communication. It is in a sense, a, falling back on the first- language system, a type of mental translation.

For example, instead of 'He came walking slowly' in English, the form 'He came walking slowly and slowly.' can be stated as a direct translation of the form, ' avan mella mella naTanOu vanOaan' in Tamil. (The dual occurrence of adverb form is very frequent in Tamil. Here 'mella' refers to slowly).

**Language interference**

Nicholls (2002) has explored the language interference in learning foreign language. According to his views, when confronted with something new, it is a natural instinct to look for similarities with things that are familiar, to try to draw some comparison with what we know already. Consciously or unconsciously, we bring what we know to what we do not, making it impossible to learn any thing entirely from scratch.

interference may occur if a grammatical category, such as gender, noun, exists in the target language but not in the mother tongue or if the two languages employ different structures to convey a particular grammatical relationship, such as the passive.

This notion is relevant to the learner's first language (Tamil) which also interferes in the manifestation of L-2 (English) noun forms. In Tamil, the plural suffix '(k) kal' is added to all the countable nouns uniformly.

For example,

| Singular. | Addition | Plural |
|---|---|---|
| ceyOi | - kal | ceyOikal ('News') |
| paaMam | - kal | paaOankal ('Feet') |
| kulanOai | - kal | kulanOaikal ('Children') |

The words like news, furniture etc. are treated as countable in Tamil but they are uncountable in English. Because of this difference in the morphological process of Tamil and English, the English learners whose mother tongue is Tamil, make a negative transfer on certain elements to English morphology importing from Tamil morphology unknowingly. There are instances when learners tend to make sentences such as:

* The news are read by Ravi.

* The furnitures are made by the carpenter.

* Those childrens are very nice.

* Ungrammatical

**The interference of the first language**

The comments of Krishnaswamy , Verma and Nagarajah. (1992) on the influence of the L1 in second language learning are summarized as follows.

The contrastive analysis hypothesis (CAH) emphasizes the gravitational pull of the mother tongue (i.e., the first language) on the process involved in learning a second language: phonological, morphological, syntactic and semantic. The structuralists' assumption that the learning of a language is actually the learning of a set of linguistic habits, characterizes their view of the learning of a second language too, as the learning of a secondary set of habits; this implies that the primary set of habits must interfere with the secondary set that is learnt, wherever the two sets do not have similarities. This understanding led to the comparison of the linguistic systems of the first and second languages, and to the identification of errors that could be attributed to the difference between the two systems (p93)

Another important factor that is to be taken into account is the notion of markedness. In a language, if construction A is rare and more difficult to learn than construction B, then A is said to be more marked. The hypothesis is that this notion of markedness also plays a role in L2 acquisition. The notion of markedness of certain constructions also leads to the notion of language transfer. It is said that if we take into account the relative markedness of L1, L2 constructions (as relative difficulty), then transfer of difficulty in L2 learning can be predicted.

In Tamil, for example, 'otuOOatum vatavillai' (otuOOatum refers to 'no one' and vatavillai refers to 'did not come'.) is unmarked, for the subject (otuOOatum) is also within the scope of the negative morpheme not. The corresponding English sentence 'no one came' is marked for difficulty and hence the difficulty in transferring from L1 and L2 can be predicted.

For example, the utterance 'No one did not come.' instead of 'No one came.'

Li-Ling Chen (2006) has mentioned the study made on L1 interference in his article. He says that the use of L1 requires language teachers to explain abstract and complicated grammar structures. To help beginning EFL learners better understand English grammar, contrastive analysis that compares the L1 and L2 was used to facilitate grammatical explanation as well as to clarify the linguistic differences between the L1 and L2. For example, in subject-verb agreement, Tamil verb conjugation reflects changes in subject-verb agreement with the person, while English verbs remain unchanged regardless of person.

According to the contrastive analysis hypothesis, an examination of differences between

the first and second language should help us to predict or at least explain errors made by L2 learners. Similarities between the two systems are assumed to facilitate learning and differences lead to interference or negative transfer. While the strong version of CAH claims that comparison of the two systems can predict a learner's errors, the weak version of the theory maintains that a comparison of L1 and L2 can help in understanding the difficulties of the learner.

**First language interference on syntax.**

The topic of "first language interference" has had a long history in second language acquisition research and practice. For many years, it had been presumed that the only source of syntactic errors in adult second language performance was the performer's first language (Lado,1957), and a great deal of materials preparation was done with this assumption in mind. Subsequent empirical studies of errors made by second language students led to the discovery, however, that many errors are not traceable to the structure of the first language, but are common to second language performers of different linguistic backgrounds (Richards, 1971). The findings on first language influence on second language performance are quite consistent with findings and hypotheses from other apparently non-related areas, and that they contribute to a clear theoretical picture of second language acquisition and performance.

The following syntactical errors committed by his students are due to L1 interference

Sample 1.

1). The next day going to Muthumari Amman temple
2). The last time going to Colombo.
3). I don't never smoke.

The student has used the adverbs like 'next day', 'last time' as the subjects in the place of subject position and the required subjects are deleted. This kind of expressions may be due to the mother tongue influence.

In Tamil, sentences can be produced without subject and the adverb is placed in the initial position of the sentence. The subject can be understood through the PNG marker- Person, Number and Gender.

For example,

01) naalaikku vatukireen
Tomorrow, I am coming
'Tomorrow coming PNG.'

02) neettu poonaan
Yesterday he went.
'Yesterday went PNG'

So this type of L1 syntactical structure appears in the L2 learner performance as shown in the above examples 01 and 02.

The comments of Agesthialingam (1966) on the difficulties of a Tamil student of ESL are presented below.

"Another kind of problem that one has to encounter while teaching English to Tamil students is due to the difference in the structure of Tamil and English. While learning a second language in adolescence and in adulthood it is very difficult to get rid of the influence of the structure of one's own mother tongue. We try to find out one to one correspondence between the target language and the mother tongue." (p.506)

A Tamil student of ESL may form grammatically wrong sentences by using a wrong preposition. For example, he may construct a sentence, "Mohan comes to school <u>in</u> bus." Instead of the correct form, "Mohan comes to school <u>by</u> bus.", This wrong sentence construction is the result of the student's positive transfer from Tamil into English. In Tamil, the form,"Mohan paaTacaalaikku pasil vatukiraan" (Mohan comes to school by bus). is grammatically correct. Here in this sentence, the inflection '–il' occurs with the word , 'pas' which is an English borrowing in Tamil, meaning 'bus'. The direct and usual English prepositional equivalent of this inflection '-il' is 'in'.

Similarly, in another instance "I am drawing a picture <u>by</u> a pencil." Here again, the Tamil –aal as

the first and second language should help us to predict or at least explain errors made by L2 learners. Similarities between the two systems are assumed to facilitate learning and differences lead to interference or negative transfer. While the strong version of CAH claims that comparison of the two systems can predict a learner's errors, the weak version of the theory maintains that a comparison of L1 and L2 can help in understanding the difficulties of the learner.

**First language interference on syntax.**

The topic of "first language interference" has had a long history in second language acquisition research and practice. For many years, it had been presumed that the only source of syntactic errors in adult second language performance was the performer's first language (Lado,1957), and a great deal of materials preparation was done with this assumption in mind. Subsequent empirical studies of errors made by second language students led to the discovery, however, that many errors are not traceable to the structure of the first language, but are common to second language performers of different linguistic backgrounds (Richards, 1971). The findings on first language influence on second language performance are quite consistent with findings and hypotheses from other apparently non-related areas, and that they contribute to a clear theoretical picture of second language acquisition and performance.

The following syntactical errors committed by his students are due to L1 interference

Sample 1.

1).The next day going to Muthumari Amman temple

2).The last time going to Colombo.

3). I don't never smoke.

The student has used the adverbs like 'next day', 'last time' as the subjects in the place of subject position and the required subjects are deleted. This kind of expressions may be due to the mother tongue influence.

In Tamil, sentences can be produced without subject and the adverb is placed in the initial position of the sentence. The subject can be understood through the PNG marker- Person, Number and Gender.

For example,

01) naalaikku vatukireen
Tomorrow, I am coming
'Tomorrow coming PNG.'

02) neettu poonaan
Yesterday he went.
'Yesterday went PNG'

So this type of L1 syntactical structure appears in the L2 learner performance as shown in the above examples 01 and 02.

The comments of Agesthialingam (1966) on the difficulties of a Tamil student of ESL are presented below.

"Another kind of problem that one has to encounter while teaching English to Tamil students is due to the difference in the structure of Tamil and English. While learning a second language in adolescence and in adulthood it is very difficult to get rid of the influence of the structure of one's own mother tongue. We try to find out one to one correspondence between the target language and the mother tongue." (p.506)

A Tamil student of ESL may form grammatically wrong sentences by using a wrong preposition. For example, he may construct a sentence, "Mohan comes to school <u>in</u> bus." Instead of the correct form, "Mohan comes to school <u>by</u> bus.", This wrong sentence construction is the result of the student's positive transfer from Tamil into English. In Tamil, the form,"Mohan paaTacaalaikku pasil vatukiraan" (Mohan comes to school by bus). is grammatically correct. Here in this sentence, the inflection '–il' occurs with the word , 'pas' which is an English borrowing in Tamil, meaning 'bus'. The direct and usual English prepositional equivalent of this inflection '-il' is 'in'.

Similarly, in another instance "I am drawing a picture <u>by</u> a pencil." Here again, the Tamil –aal as

found in the Tamil sentence, "naan pencilaal otu paTam vataikireen." (I am drawing a picture with a pencil.) is replaced by the English 'by'.

Wrong selection of preposition is caused by generalization also.

e.g. She goes to the office by bicycle. (Instead of "She goes to the office on bicycle.)

The students familiarity with the sentences such as, "He goes to school by bus" etc. makes him generalize the prepositional rule in this manner.

## Conclusion

Thus, the interference of the native language into the systems and structures of the target language is well pronounced in most cases. At such times the need for contrastive approach to second language teaching arises. At this point, it is most appropriate to mention the objectives of contrastive grammars well stated by Gleason (1955: 207).

"Contrastive grammars are most useful in setting up second language teaching materials. They enable an experienced teacher to predict with reasonable success what parts of the language structure will present the greatest difficulties to learners. They commonly define rather precisely the exact nature of those difficulties. This gives the teacher or lesson writer the basis for selecting a strategy to meet or minimize these difficulties".

One way of contrasting the patterns in English and Tamil for effective teaching would be to compare them in a reasonably accurate and objective way. It is to predict the areas of difficulty faced by L2 learners and suggest suitable remedial measures. The fixed word order in English and the flexible word order of Tamil, the use of prepositions in English as against the case markers in Tamil, lack of copula 'be' in Tamil, the use of double verbs in Tamil as in 'cenru vantaan' "went and came" etc can be some of the areas of difficulty which can be taken up for contrastive approach to second language.

## References:


Agesthialingam, S. (1966). *"Teaching Tamil as a Foreign Language"*, Proceedings of the first International Conference Seminar of Tamil Studies, Volume 11, Malaysia, PP. 503-507.

Corder S.P (1967). *The significance of learner's errors*. International Review of Applied Linguistics 5, 161-170.

Chen, Li. L. (2006). *The effect of the use of L1 in a multimedia tutorial on grammar learning: An error analysis of Taiwanese beginning EFL learners' English essays.* Asian Efl Journal. Vol. 8, Issue 2, Article 4.

Krishaswamy, S..Verma, K and Nagarajan. M (1992) *Modern applied linguistics,* Printed by V.N.Rao at Macmillan India Press.

Lado, R. (1957). *Linguistics across cultures: Applied linguistics for language teachers.* Ann Arbor, MI: University of Michigan Press

Larsen-Freeman, D. (2000). *Techniques and principles in language teaching,* 2nd edn. Oxford: Oxford University Press.

Oxford, R. (1990). *Language learning strategies: What Every teacher should know.* Boston:Heinele & Heinle Publishers.

Oxford, R. (1991). *Language learning styles and strategies.* In Teaching English as Second or Foreign Language, 3rd edn.


Pantten.B. (1986) *"Second language acquisition research and the learning/teaching of Spanish: Some research findings and implications,"* Hispania 69. P. 202-216.

Richards, J.C, Platt, J. & Platt, H. (1992). *Language teaching and applied linguistics.* Essex: Longman Group UK Limited.

Weinreich, U. (1953). *Language in contact:* Findings and problems, Publications of the linguistic circle of New York, Number 1, New York.

Weinreich, U. (1979). *Languages in contact.* The Hague: Mouton.


# திறந்த தினக்குறிப்பு




தி.சுபாகரன்,
வளவாளர்
கணனி வன்பொருள் மற்றும் வலைப்பின்னல் பராமரிப்புக் குழு
வடமராட்சி கல்வி வலயம்.


தினக்குறிப்பு எழுதுவது என்பது எமது நாளாந்த வாழ்வில் இடம்பெறும் ஒரு முக்கிய அமிசமாகும். இதன் மூலம் எமது வாழ்வில் நடந்த நிகழ்வுகள், எமது எண்ணங்கள், எமது சந்தோசங்கள்,எமது துக்கங்கள்,எமது மறக்கமுடியாத பொழுதுகள் போன்றவற்றை எழுத்துருவில் பதித்து விடுகின்றோம். இங்கு எழுத்தாளனும் வாசகனும் ஒருவனே.எழுத்தாளனாய் தனது உணர்வுகளைக் கொட்டுவதும் பின்னர் அவனே வாசகனாகி கொட்டிய உணர்வுகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் படித்து மகிழவும் அழவும் செய்கின்றான்.ஒருவரது தினக்குறிப்பை வேறொருவர் படிப்பது என்பது அநாகரிகமான ஒரு செயல் எனவும் பலராலும் குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் பலரது தினக்குறிப்புக்கள் அவர்களது வாழ்க்கைக் காலத்தின் பின் படிக்கப்பட்டு அவற்றிலிருந்து பல பயனுள்ள விடயங்கள் இவ் உலகிற்குக் கிடைத்துள்ளன.அந்த வகையில் எமது எண்ணங்களை, எமது உணர்வுகளை இவ் உலகின் ஒவ்வொரு மூலையிலுமுள்ள ஏனையவர்களோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய வகையில் திறந்த தினக்குறிப்புக்களில் பதித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை இன்றைய தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் எமக்குத் தந்துள்ளது.இந்த திறந்த தினக்குறிப்பில் வெறும் எழுத்துக்களை மட்டுமல்லாது புகைப்படங்கள், வீடியோக்கள் என்பவற்றையும் இணைத்துக் கொள்ளக்கூடியதாக இருத்தல் இதன் சிறப்பமிசமாக உள்ளது. எனவே இத்தகைய ஒரு திறந்த தினக்குறிப்பை எவ்வாறு உருவாக்கமுடியும்? என்பதை இனி நோக்குவோம்.

Google நிறுவனத்தால் வழங்கப்படும் blogger சேவையைப் பெறுவதன் மூலம் எமக்கென தனியான ஒரு வலைப்பதிவை மிகவும் இலகுவாக உருவாக்கிக் கொள்ள முடியும். இச் சேவையைப் பயன்படுத்த உங்களுக்கு மின்னஞ்சல் முகவரி மட்டும் இருந்தால் போதுமானது இச் சேவை முற்று முழுதாக இலவசமாக வழங்கப்படுகின்றது. முதலில் browser இல் Address bar இல் www.blogspot.com என்ற முகவரியை type செய்து Enter key அழுத்துங்கள். இதன் போது Blogger பக்கம் தோன்றும்.




இதில் வலைப்பதிவு ஒன்றை உருவாக்கவும் என்பதைக் Click செய்யுங்கள். இதன் போது தோன்றும் Window வில் உங்கள் மின்னஞ்சல் முகவரி, அதற்கான Pass word போன்றவற்றை வழங்கி தொடருக என்பதைக் Click செய்யுங்கள்.








அடுத்து தோன்றும் Window வில் உங்கள் வலைப்பதிவிற்கான பெயரினையும் வலைப்பதிவிற்கான முகவரியையும் Type செய்து தொடருக என்பதைக் Click செய்யுங்கள்.


தொடரந்து வரும் Window வில் காணப்படும் இணைய வடிவமைப்புக்களில் (Templates) விருப்பமானதைத் தெரிவு செய்தபின் தொடருங்கள்.





இதன் போது உங்கள் வலைப்பதிவு உருவாக்கப் பட்டுவிட்டது என்ற செய்தியைக் கொண்ட Window தோன்றும் இதில் வலைப் பதிவிடலைத் தொடங்குக என்பதைக் Click செய்வதன் மூலம் உங்கள் எண்ணங்களை வலையில் பரப்ப ஆரம்பித்து விடலாம்.





இடுகைகளை இடுவதற்கான Window வில் உங்கள் இடுகைகளை Type செய்து இடுகையை வெளியிடு என்பதை Click செய்யுங்கள். படங்களைப் பதிவேற்றம் செய்ய இவ் Window வில் உள்ள பட Icon ஐப் பயன்படுத்தலாம். இவ் Icon ஐ Click செய்யும் போது உங்கள் கணனியிலிருந்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட படங்களைத் தெரிவு செய்ய அனுமதிக்கும் ஒரு Window தோன்றும். இதில் Browse என்ற Button ஐ Click செய்து நீங்கள் விரும்பும் படத்தின் அல்லது படங்களின் இருப்பிடங்களை தெரிவு செய்வதன் மூலம் அப்படங்களை உங்கள் இடுகையில் சேர்த்துக் கொள்ள முடியும். இவ்வாறு படங்களை உள்ளீடு செய்யும் போது அவற்றின் Size, Alignment என்பவற்றில் மாற்றங்களைச் செய்வதற்கான வசதிகளும் இதில் காணப்படுகின்றது.




உங்கள் இடுகைகள் வெளியிடப்பட்டுவிட்டதாக செய்தி ஒன்று திரையில் தோன்றும். மேலும் பல புதிய விடயங்களை சேர்த்துக் கொள்வதற்கு புதிய இடுகை என்ற இணைப்பை Click செய்து புதிய விடயத்திற்கான தலைப்பை வழங்க விரும்பினால் அதனை Type செய்த பின்னர் உள்ளடக்கத்தை எழுதி வெளியிடு என்ற Button ஐ Click செய்யும் போது உங்கள் புதிய இடுகை பதிவேற்றம் செய்யப்பட்டுவிடும். ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்ட விடயமென்றைத் திருத்துவதற்கு இடுகைகளைத் திருத்து என்ற இணைப்பைத் தெரிவு செய்ய வேண்டும். இதன் போது உங்கள் வலைப்பதிவில் உள்ள விடயங்களின் சுருக்கங்கள் அவற்றின் தலைப்புக்களுடன் பட்டியற்படுத்தப்படும். இதில் திருத்தம் செய்ய வேண்டிய விடயத்தை தெரிவு செய்யும் போது இடுகைகளை சேர்ப்பதற்குரிய Window வில் நீங்கள் தெரிவு செய்த விடயம் தோன்றும். இதில் தேவையான மாற்றங்களைச் செய்த பின்னர் வெளியிடு என்ற Button ஐ Click செய்யும் போது திருத்தம் செய்யப்பட்ட விடயம் பதிவேற்றம் செய்யப்பட்டுவிடும்.



இதில் வலைப்பதிவைக் காண்க என்பதை தெரிவு செய்வதன் மூலம் உங்கள் வலைப்பதிவைப் பார்வையிட முடியும். உங்கள் கணக்கினுள் உள்நுழையாது நேரடியாக உங்கள் வலைபாதிவிற்குச் செல்ல இணைய உலவியில் (Browser) உங்கள் வலைப்பதிவு முகவரியை Type செய்து Enter Key ஐ அழுத்த வேண்டும். உதாரணமாக எனது வலைப்பதிவை நீங்கள் பார்வையிட விரும்பினால் www.subapolikandy.blogspot.com என்ற முகவரியைப் பயன்படுத்திப் பார்வையிட முடியும்.





இவ்வாறு இலகுவாக உருவாக்கக்கூடிய வலைப்பதிவில் நீங்கள் எழுதும் கருத்துக்களுக்கு கருத்துரை வழங்க வாசகர்களுக்க அனுமதி வழங்க முடியும். உங்களால் வெளியிடப்பட்ட விடயங்களைத் திருத்தவோ அல்லது நீக்குவதற்கோ வசதியுண்டு. Blogger சேவையை பயன்படுத்தும் நீங்கள் அதன் சேவை விதிமுறைகளுக்குக் (**http://www.google.com/terms_of_service.html**) கட்டுப்பட்டவர்களாகின்றீர்கள். நீங்கள் வெளியிடும் இடுகைகள் அது தொடர்பான விளைவுகள் என்பவற்றுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள். எனவே எழுதுவதற்கான களம் கிடைத்துவிட்டது என்பதனால் பொறுப்பற்ற முறையில் நாம் எழுத முற்படக்கூடாது. Unicode ஐப் பயன்படுத்துவதன் மூலம் உலகில் உள்ள எந்தவொரு கணனியிலும் தமிழில் உங்கள் வலைப்பதிவைத் தோன்றச் செய்ய முடியும் உங்கள் வலைப்பதிவுக்கான அமைப்புக்கள், கருத்துரைகள் தாவலில் சொல் சரிபார்ப்பு விருப்பம் என்பது இருக்கும்.நீங்கள் இந்த அமைப்பில் ஆம் என்று தெரிவு செய்தால் உங்கள் வலைப்பதிவில் கருத்துரைகளிட விரும்புபவர்கள், வலைப்பதிவை உருவாக்கும் போது நீங்கள் பூர்தி செய்வதைப் போன்ற ஒரு சொல் சரிபார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும்.மனிதர்கள் மட்டுமே இதை வாசித்து இந்தப் படியைக் கடக்க முடியும் என்பதால், தானியங்கு அமைப்புக்கள் உங்கள் வலைப்பதிவிற்குக் கருத்துரைகள் சேர்ப்பதைத் தடுக்க முடியும். உங்களுக்கு HTML தெரிந்திருப்பின் நீங்கள் தெரிந்தெடுத்துள்ள தள அமைப்பில் தாராளமாக மாற்றங்களை மேற்கொள்ள முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்தும் ஒரு வலைப்பதிவில் தமது இடுகைகளை இடுவதற்கான வசதியும் இந்த Blogger சேவையில் காணப்படுகின்றது. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரு வலைப்பதிவைப் பயன்படுத்த விரும்பின முதலில் ஒருவர் வலைப்பதிவை உருவாக்க வேண்டும். பின்னர் அவர் மற்றவர்களை அதில் இணைய அழைப்பு விடவேண்டும். உறுப்பினர்கள் நிர்வாகிகளாகவோ அல்லது சாதாரண உறுப்பினர்களாகவோ இருக்க முடியும்.

இங்கு நிர்வாகிகள் தமது இடுகைகளையும் ஏனையவர்களின் இடுகைகளையும் திருத்துவதற்கும் குழு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் அகற்றுவதற்கும் வலைப்பதிவு அமைப்புக்களை மாற்றியமைப்பதற்கும் அதிகாரம் உள்ளவர்களாவர்.நிர்வாகிகளல்லாதவர்கள் வலைபதிவில் இடுகையிட மட்டுமே முடியும். வலைப்பதிவிற்கு இடுகைகளை மொபைல்களிலிருந்தும் அனுப்பிக் கொள்ள முடியும்.

வலைப்பதிவு ஒன்றை நீக்குவதற்கு அமைப்புக்கள் என்பதன் கீழுள்ள அடிப்படைகள் என்பதைத் தெரிவு செய்து அதில் இந்த வலைப்பதிவை நீக்கு என்பதை Click செய்யும் போது உங்கள் வலைப்பதிவு நிரந்தரமாக நீக்கப்பட்டுவிடும். உங்கள் வலைப்பதிவு உட்பட உங்கள் Google கணக்கை நீக்க Google கணக்குகள் முகப்புப் பக்கத்தில் உள்நுழைந்தவுடன் எனது சேவைகள் என்பதற்கு அடுத்துள்ள திருத்து என்பதைக் Click செய்யுங்கள். இதன் போது உங்கள் கணக்கை நீக்க உதவும் ஒரு பக்கத்தை அடைவீர்கள்.இதில் உங்கள் கணக்கை நீக்குவதற்கான விருப்பத்தைத் தெரிவு செய்யும் போது உங்கள் கணக்குடன் கூடிய உங்கள் சுயவிபரம், உங்கள் Google பக்கம், உங்கள் வலைப்பதிவு போன்ற அனைத்து Google சேவைகளும் நீக்கப்பட்டுவிடும்.

எனவே உங்கள் எண்ணங்களை இலகுவாகவும் இலவசமாகவும் வெளியிடுவதற்கு இந்த blogger சேவை உங்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். எம்மில் எத்தனை திறமைசாலிகள் தங்களது எழுத்துத் திறமைகளை வெளிக்கொணர பத்திரிகை வாய்ப்புகளின்றி முகவரியற்றுப் போய்விடுகின்றார்கள். இன்னும் பலர் தமது ஆரோக்கியமான விமர்சனங்களை வெளிப்படுத்த வடிகாலின்றி விம்முகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் களம் அமைத்துக் கொடுப்பதாக இந்த blogger சேவை அமைந்துள்ளது எனலாம். ஆயினும் உங்கள் வலைப்பதிவின் முகவரியை வாசகர்களுக்குச் சென்றடைய வைப்பதன் மூலமே உங்கள் வலைப்பதிவிற்கான வாசகர்களைத் திரட்டிக் கொள்ள முடியும். இதற்காகவும் நீங்கள் பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டும். உதாரணமாக இந்தக் கட்டுரையை வரைந்ததன் மூலம் எனது வலைப்பதிவு முகவரியை உங்களிடம் சேர்ப்பித்துள்ளேனல்லவா?. Facebook போன்ற வலைத்தளங்களில் உங்கள் முகவரியை இணைப்பதன் மூலம் நண்பர்கள் வலையமைப்பினூடாகப் பலரையும் இலகுவில் இம் முகவரி அடைந்துவிடும். மேலும் பலருக்கும் தேவையான விடயங்களை உங்கள் வலைப்பதிவில் இணைத்துக் கொள்வதன் மூலம் பலதரப்பட்டவர்களையும் உங்கள் பக்கத்திற்கு இழுத்துக் கொள்ள முடியும். இனி என்ன? எழுதுங்கள். உங்கள் எண்ணங்களை விருப்பம்போல் வலையில் பரப்புங்கள். உலகின் ஏதோவொரு மூலையிலேனும் உங்களுக்கென ஒரு வாசகனோ வாசகியோ இருக்கத்தான் செய்வார்கள்.



## யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் மாணவர் இடை விலகலும் அதனைக் குறைக்க மேற்கொள்ளும் வழிவகைகளும்.



திரு.மு.செல்வராசா
முன்னாள் அதிபர்.

கல்வியில் சகலருக்கும் சமசந்தர்ப்பமும் சம வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து இன்றைய உலகில் முனைப்புப் பெற்றுள்ளது.ஆயினும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் திரும்பக் கற்போரின் எண்ணிக்கையும் கல்வியை இடைநிறுத்தம் செய்வோரின் எண்ணிக்கையும் உயர்வாகவே காணப்படுகின்றது.

அண்மைக்கால யுனெஸ்கோவின் ஆய்வுகளின்படி ஆசிய நாடுகளில் 540 இலட்சம் பிள்ளைகள் இடையில் விலகுவோர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர் இடைவிலகல் என்பது கட்டாயக்கல்விக் காலம் எனக் கருதப்படும்.பிள்ளையின் 6 வயது தொடக்கம் 16 வயது வரையுள்ள காலத்தில் அடிப்படைக் கல்வியைப் பூர்த்தி செய்யாது பாடசாலையை விட்டு விலகுதலைக் குறிக்கும்.

இலங்கையில் 5 வயது தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட காலப்பகுதியில் மாணவர்களது இடைவிலகல் வீதங்கள் பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது.

05-09 வயது எல்லைக்குட்பட்டவர்களில் -08%
10-14 வயது எல்லைக்குட்பட்டவர்களில் -30%
15-19 வயது எல்லைக்குட்பட்டவர்களில் -50%

இவர்கள் பாடசாலை செல்லாமலும் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்குபற்றாமலும் இருக்கின்றனர். இத்தகையதொரு முக்கிய பிரச்சினைக்கு காரணம் காலத்திட்டத்திலுள்ள குறைபாடு என்று சுட்டிக்காட்டப் படுகின்றது. கட்டாயக்கல்வி வயதெல்லைக்கு அப்பால் அதிகளவான இடைவிலகல் நடைபெறுவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் மாணவர்கள் இடைவிலகலில் பலகாரணங்கள் செல்வாக்கு செலுத்தினாலும் வறுமையும் தொழிலுக்கு செல்லுதலும் காரணமாக ஏறக்குறைய 50 சதவீதமான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாக கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது 418 பாடசாலைகள் மாத்திரம் இயங்கி வருகின்றது.இப்பாடசாலைகள் பலவற்றில் மாணவர்கள் தமது கல்வியை முற்று முழுதாக தொடராது பலசந்தர்ப்பங்களில் இடைவிலகி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிகழும் மாணவர்களின் இடைவிலகலுக்கு வறுமையே பிரதான காரணியாகக் கூறப்படுகின்றது. பின்வரும் அட்டவணை 1 இலங்கையில் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களின் வீதத்தை எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 1

இலங்கையில் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணிகளின் வீதம்.

| | |
|---|---|
| வறுமை | 48.29% |
| பாலியல் குற்றங்கள் | 14.18% |
| பொருத்தமற்ற பாடத்திட்டம் | 12.01% |
| பாடசாலை இல்லாமை | 04.01 % |
| தொழில்களுக்கு செல்லுதல் | 01.09% |
| காரணமின்மை | 20.42% |
| மொத்தம் | 100.00% |

மேற்படி அட்டவணையில் இருந்து வறுமை காரணமாகவே அதிகளவான மாணவர்கள் இடைவிலகுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகலுக்கு பின்வரும் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

1. குடும்பத்தின் அடிப்படை வசதிகள் குறைவாக இருத்தல்
2. குடும்பத்தில் அதிகளவு பிள்ளைகள் இருத்தல்
3. தாய் தந்தையரின் கல்வி குறைவாக இருத்தல்
4. தாய் தந்தையரின் தொழிலும் வருமானமும் குறைவாக இருத்தல்
5. தாய் தந்தை இறப்பும் தாய் தந்தை பிரிந்து வாழுதலும்
6. வீடுகளில் கற்பதற்கான வசதிகள் குறைவாக காணப்படுகின்றமை.
7. உள்நாட்டு மோதல்களினால் ஏற்பட்ட இடப்பெயர்வும்,இடம்பெயர்ந்தோர் முகாம் வாழ்வும்.
8. ஒழுங்கற்ற பாடசாலை வரவு
9. சகபாடிகளின் தொடர்பு அதிகரிப்பு
10. சமூகம் பெற்றோர் பாடசாலைகளுடனான தொடர்பு குறைவாக இருத்தல்

போன்றவற்றை குறிப்பிடலாம்.

குடும்பத்தின் அடிப்படை வசதிகள் என நோக்குகின்ற போது கற்கக்கூடிய சூழல் உள்ள வீடுகள் குறைவாக காணப்படுவது, குடிநீர் பெற நீண்டதூரம் அலைந்து திரிதல், மலசலகூட வசதி இன்மையால் தொற்று நோய்க்கு ஆளாகும் தன்மையால் ஒழுங்கற்ற வரவு காணப்படும் நிலை, இவற்றால் மாணவர் தமது கல்வியைத் தொடர வாய்ப்பின்றி இடைவிலகும் நிலை காணப்படுகின்றது.

யாழ்மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் குடும்பங்கள் அதிகளவு பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களாகவே காணப்படுகின்றது. கல்வியறிவு குறைவாக காணப்படுவது, குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை பின்பற்றாமை, அதிக பிள்ளைகளைப் பெறுதல் சாதனையாக நோக்குதல், போன்ற காரணிகளால் அதிகளவு பிள்ளைகளைப் பெற்று விடுகின்றனர். இதனால் குடும்ப வருமானம் குறைவடைந்த நிலையில் மூத்த பிள்ளையை பாடசாலையில் இருந்து இடைநிறுத்தி ஏனைய பிள்ளைகளைப் பராமரிக்கச் செய்தல், வேலைகளுக்கு கூட்டிசெல்லுதல், போன்றவற்றால் கல்விக்கு முழுக்குப் போடும் வாய்ப்பு காணப்படுகின்றது.

இடைவிலகுகின்ற பிள்ளைகளது குடும்ப பின்னணியை நோக்கும் போது அப்பிள்ளை தனது தாய், தந்தையரது கல்வி மட்டம் குறைவாக காணப்படுவதை அவதானிக்கலாம்.புதிய பாட சீர்திருத்தங்களுக்கு அமைவாக கல்வியை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்கள் பிள்ளைகளது பெற்றோருக்கு குறைவாக காணப்படுவதால் பிள்ளைகளை வழிப்படுத்த முடியாமை கல்வியை இடைநிறுத்த காரணமாகின்றது.

தாய், தந்தை இருவரும் கூலி வேலைக்குச் செல்லும் குடும்பங்கள் கிடைக்கும் வருமானத்தை வைத்தே வாழ்க்கையை நடாத்துகின்றனர்.நிச்சயமற்ற தொழிலால் வருமானமும் குறைந்த நிலையில் காணப்படுவதால் மூத்த பிள்ளைகளை கல்வியில் இருந்து இடைநிறுத்தி பிள்ளை பராமரிப்பு, வேலைக்கு அமர்த்துதல் போன்றவற்றில் ஈடுபடுத்துகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் பல்வேறு காரணிகளால் குடும்பத்தில் தாய்,தந்தை இறப்புக்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளன.இது பிள்ளைகளின் கல்வியில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது.இதனால் கல்விக்கு முடிவு கட்டிய பல குடும்பங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.மேலும் குடும்பத் தகராறு காரணமாக கணவன், மனைவி பிரிந்து வாழும் நிலையிலும் பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்வதில் தடங்கலை ஏற்படுத்தி உள்ளன.

இன்று பல்வேறு காரணிகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.இதனால் வீடுகளில் கற்பதற்கான சூழல் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.மேலும் உள்நாட்டு யுத்தம் காரணமாக பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து அகதிமுகாம் வாழ்க்கையை நடாத்தி வருவதால் அங்கு கற்கக் கூடிய தளபாட

மின்சார வசதிகள் எவையும் காணப்படவில்லை. இதனால் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர இவை தடையாக உள்ளமை அவர்களின் இடைவிலகலுக்கு காரணமாகின்றது.

சமூகத்தில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளுக்காக மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதை இடையிடையே தவிர்த்து வருகின்றனர்.பூப்புனித நீராட்டுவிழா,அந்தியேட்டி, திருமண வீடு, கோயில் திருவிழா போன்றவற்றால் மாணவர்கள் ஒழுங்கற்ற வரவை கொண்டிருக்கின்றனர்.இந்நிலை தொடர்கல்வியில் ஆர்வம் குன்றி இடைவிலக வழி அமைத்து விடுகிறது.

இடைவிலகும் மாணவர்களுக்கும் பாடசாலைகளில் படிக்கும் சகநண்பர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்ற போது பாடசாலை செல்லும் மாணவர்களும் நாளடைவில் இடைவிலகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.காரணம் இடைவிலகிய மாணவன் தொழிலில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பதையோ ஏனைய பொழுது போக்கு நிகழ்வுகள் பற்றி சகநண்பர்களிடம் குறிப்பிடும் போது தனது படிப்பை விட தானும் இத்தொழில்களில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பதை எண்ணி இடைவிலகும் தன்மை அதிகரிக்கின்றது.

தற்கால சூழ்நிலையில் பாடசாலைகளுடன் சமூகத்தின் இடை வினையுறவு குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.பெற்றோர் பாடசாலைகளுடன் கொண்டுள்ள தொடர்பு அதிகரிக்கும் போது மாணவரது இடைவிலகல் வீதம் குறைவடையும். மாறாக இவர்கள் பாடசாலையுடன் கொண்டுள்ள தொடர்பு குறையும் போது மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளில் ஆர்வமின்றி இருப்பர்.இது இடைவிலக வழி அமைத்து விடுகின்றது.மேலும் மாணவர்களை கவர்ந்திருக்கும் மனமகிழ்வுக் கூடமாக (உ-ம்) கவர்ச்சி பாடசாலைகள் இல்லாதவரை மாணவர்கள் தமது கற்றலில் வெறுப்படையும் நிலை அதிகரிக்கின்றது.

இத்தகைய பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துவதால் யாழ்மாவட்ட பாடசாலைகளில் மாணவர்கள் கல்வியில் இடைவிலகிச் செல்கின்றனர். இவ் இடைவிலகலைக் குறைப்பதற்கு பல்வேறு தரப்புகளில் இருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகின்றது.ஏனெனில் எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்திற்கு கல்வியே முதலீடாகும்.

இதற்கு பின்வரும் விடயங்களில் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

- குடும்பங்களின் அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.
- குடும்பங்களில் உள்ள பிள்ளைகளைப் பராமரிக்க குழந்தை காப்பகங்களை ஏற்படுத்தல்
- தாய், தந்தையரின் கல்வியை உயர்ந்த முறைசாரக் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- கல்வியின் அவசியத்தை வலியுறுத்தல். சமூகத்தில் விழிப்புணர்வை உண்டாக்கல்.
- வீடுகளில் கற்கக்கூடிய சூழலை ஏற்படுத்தல், மீளக்குடியமர வழிவகை செய்தல்.
- ஒழுங்கற்ற வரவை குறைக்க பாடசாலை சமூக மட்டத்தில் குழுக்களை நியமித்து செயற்படுத்தல்.
- பெற்றோர் பாடசாலைகளுடனான தொடர்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- முன்னாரம்பக் கல்வியை வலுவூட்டுதல்
- மகிழச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குதல்.
- பருவகால வேலைகளுக்கு ஏற்ப பாடசாலை நேரங்களை நெகிழ்ச்சி தன்மையுடையதாக்குதல்
- பாடசாலைகளுக்கிடையிலான வளப்பகிர்வில் சமநிலைத் தன்மையை ஏற்படுத்தல்.

போன்றசெயற்பாடுகளை மேற்கொள்வதனுடாக யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கல்வியில் இருந்த இடைவிலகிச் செல்லும் மாணவர்களது எண்ணிக்கையை குறைவடையச் செய்ய முடியும்.

**உசாத்துணை நூல்கள்.**


S.மனோகரன் ஆய்வுக்கட்டுரை.
(யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்கள் இடைவிலகல்)

# OVER VIEW



Dr.Pasupathy Asokan
MBBS (Ceylon)
MD(Ceylon)

*Medical education in Sri Lanka like other countries has much respect and discipline. Selection of a student to medical schools in Sri Lank is depending on their performance in the advance level examination. There are a limited number of students ant sent to different medical facilities in various parts of the country. currently there are six medical schools in srilanka.*

1. *University of Colombo.*
2. *University of Peradeniya.*
3. *University of Sri Jayewardenepura.*
4. *University of Galle.*
5. *University of Kelaniya.*

*There is no private medicial school in srilanka aithrough we had two colleges few years back.but later they were affiliated to the state medical schools. The state me medical education in smanka, like many other counles is taught in English and all the teaching and study materials are based on the British system. The difference in some schools. The medical curriculum is designed and organized according to the diseases of the human beings and divided in to many disciplines, depending on the system of the body affected. All medical students have to study for 5years which include combined theory at their medical faculties an clinical clerkship at the teaching hospitals.*

*The subject s included in the medical schools in Sri Lanka are,*

1. *Anatomy- Includes the gross morphology of the various systems of the human Beings.*
   *E.g. brain, heart, lungs and kidneys and also Microscopic anatomy.*

2. *Physiology- Includes the study of the various organs system in normal and Disease conditions.*

3. *Bio chemistry- Includes the study of the chemical nature and function of the Systems.*

4. *Pharmacology- Includes the study of the drugs used in human beings during The treatment of diseases.*

5. *Microbiology- Includes the study of small organisms like viruses, bacteria, And other microorganisms.*

6. *Parasitology- Include the study of parasite that causes diseases E.g. - worms, Malarial parasite.*

7. *Forensic medicine- Includes the post mortems ,study of injuries, suicide homicide and rape.*

8. *Community medicine- Includes the study of preventive aspects of health.*

9. *Pathology- Includes the diagnosis of all disease by laboratory methods E .g. cancer of all types.*

10. *Surgery- Includes the study of diseases that require surgical management.*

11. *Medicine- Includes the study of management of all disease processes, Including psychiatry.*

12. *Paediatrics- Include study of that affect children.*

13. *Obstetrics and gynaecology- Includes study of all pregment mothers fetal Development ant the diseases affecting Women.*

*During the first two years the medical students should attend series of lectures and practicals in the medical faculty. After completing their 2nd MBBS examination they should attend the clinical clerkship of different disciplines in the teaching hospital in the addition to the lectures. At the end of the 4th year 3rd MBBS examination is held in the final year .all the medical students attend to the full time clinical clerkship to complete their course .some medical schools have changed their medical curriculum in resent years so that medical students should attend to the clinical clerkship from first year.*

*At the end of the 5th year the medical graduates are awards with a degree MBBS (Bachelor of medicine and bachelor of surgery). The examination methods include multiple choice questions. essays, practicals, vivas and clinical examination of patients. A wrong answer will be given a minus mark.*

*All medical graduates , after the completion of their study should do one year compulsory internship at a designated hospital under the supervision of a medical specialist . The selection of hospitals depends on their merit level island wide.*

*The disciplines include medicine ,surgery, paediatrics and obstetrics & gynaecology. They have to select two of the above .A medical graduate after completing all of the above is considered to be a qualified doctor and should be able to manage different types of patients.*

**Specialist training**

*A doctor who wants to be a consultant or a specialist in a particular . This is called post graduate course and includes competitive examination in selected disciplines. The post graduate institute of medicine of the university of Colombo conducts and coordinates all the specialty courses in collaboboration with the ministry of Sri Lanka .*

*The following courses are conducted in post graduated institute of medicine ,Colombo,*

*Surgery / orthopedics /ENT/urology / cardiothoracic/cancer surgery/ Neurosurgery*

*Medicine / rheumatology/Chest medicine /endocrinology/Neurology*


| | |
|---|---|
| *Obstetrics& gynecology* | *Forensic medicine* |
| *Community medicine* | *Medical administration* |
| *Blood transfusion* | *Psychiatry* |
| Radiology | *Oncology and radiotherapy* |
| *Forensic medicine* | *Community medicine* |
| *Medical administration* | *Blood transfusion* |
| *Psychiatry* | *Ophthalmology* |
| *Pathology* | *Hematology* |
| *Biochemistry* | *Anesthesia* |

*A doctor who has selected to specialist a particular field will be appointed to that particular unit in a teaching hospital. He/ she has to work like other doctors, at the same time he/she has to study further to fulfill their requirements for the particular courses. The expense for the post graduate courses and examination are not funded by the government , but the doctor should pay all the expense from their own money . The candidates who become successful in the exam at the very first time will be awarded with the refund of the examination fee. A doctor who completed the examination and other training requirements for a particular field should undergo one year compulsory overseas traning in that particular field with the funding of the ministry of health . Once they have completed their overseas training all doctors should return back the country. And certified as a medical specialist / consultant by the board of post graduate institute of medicine The specialist then will be sent to a particular hospital to work as a consultant by the ministry of health.*

*It is a long journey to become a doctor.*

*Dr. Asokan Pasupathy*
*(old boy)*

## மாறிவரும் கல்விச் செயற்பாடுகள்



திரு.செ.செல்வச்சந்திரன்
அதிபர்,
யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை.
அல்வாய்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல" என்ற முதுமொழிக்கு அமைவாக காலத்தின் தேவை கருதி மாற்றங்கள் ஏற்கப்படவேண்டியவை.பழைய விடயங்களை அப்படியே இறுகப்பிடித்து வைத்திருக்க முடியாது.அதே சமயம் பாரம்பரியங்களதும் பழைய சரியான விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

கல்வி ஒரு நீண்டகால முதலீடு. நாம் கல்வியை பெரும் சொத்தாக மதிக்கின்றோம்.எத்தனையோ இடர்கள் அவலங்களை சந்தித்தபோதும் கல்வியை எமது கண்களாக மதிப்பவர்கள்

"கற்றறிந்தார் எல்லாம் கண்ணுடையார்-முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்"

கல்வி உலகிலே பல் மாற்றங்கள் நடைபெற்று வருவதனை நாம் கண்கூடாக பார்க்கின்றோம்.கல்விச்சிந்தனையிலே கற்பித்தல் முறைகளிலே கற்றல் முறைகளிலே கல்வி நிர்வாகத்திலே பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.ஆரம்ப காலத்தில் "குருகுலக் கல்விமுறை" பல ஆண்டுகளாக இருந்து வந்தது.அதாவது ஆசிரியரின் வசிப்பிடத்திற்கு மாணாக்கர் சென்று அவருக்கு தேவையான பணிவிடைகளை செய்து பின் கற்றுக் கொள்ளுதல் ஆகும்.

கால ஓட்டத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் உருவாகின.அவை மேலும் வளர்ச்சியடைய பாடசாலைகள் உருவாகின.பாடசாலைகள் பல கல்லூரிகளாக தரமுயர்ந்தன.அவற்றுள் சில தேசியப் பாடசாலைகள் என்ற மகுடத்தை ஏற்றுக்கொண்டன.பாடசாலை வகைப்படுத்தலில் தரம் 1-5 வரையான அல்லது தரம் 1-9 வரையான பாடசாலைகள் வகை III எனவும், தரம் 1-11 வரையான பாடசாலைகள் வகை II எனவும் தரம் 1-13 அல்லது தரம் 6-13 வகுப்பறைகளையும் உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையை கொண்டிராது கலைத்துறையை மட்டும் கொண்டுள்ள பாடசாலைகள் 1C எனவும், உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவுகளை கொண்டுள்ள பாடசாலைகள் 1AB எனவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. நிர்வாகத்தை பொறுத்தமட்டிலே தேசியப்பாடசாலைகள் மத்திய கல்வி அமைச்சின் கீழுள்ளது. ஏனைய பாடசாலைகள் மாகாணக்கல்வி அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்டது. யாழ்மாவட்டத்திலே யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, என்பன தேசியப் பாடசாலைகளாகும்.இவற்றை விட பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்டவை.

இனி கற்றல் கற்பித்தல் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஒப்பீடு செய்வது உகந்ததாக இருக்கும்.ஆக முற்பட்ட காலத்தில் முதலில் கூறப்பட்டது போல குருகுலக்கல்வி முறை

இருந்தது. பாடசாலை உருவாக்கத்தின் பின்னரான கற்பித்தல் முறையை எடுத்து நோக்குவோமாயின் அது ஆரம்பத்தில் ஆசிரியர் மையக் கல்வியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.ஆசிரியர் மையக்கல்வியில் ஆசிரியர் முழுமையாக தனக்குத் தெரிந்த விடயங்கள் அனைத்தையும் மாணவர்க்கு ஒப்புவிப்பவராக மட்டுமே இருந்தார்.மாணவரின் சிந்தனைக் கிளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

இது பின்னர் பாட மையக்கல்வியாக மாற்றம் பெற்றது. இதுவும் கிட்டத்தட்ட ஆசிரியர் மையக்கல்வியையே ஒத்திருந்தது.இதில் குறிப்பாக பாடங்களை மனனம் செய்யும் அல்லது பரீட்சையை மட்டுமே இலக்காகவும் கொண்டிருந்தது.எனவே பாடமையக்கல்வியில் மாணவரின் பல்வித ஆளுமைத்தன்மைகளை வளர்த்தெடுக்கும் பாங்கு மிகக்குறைவாக இருந்த காரணத்தினால் கல்வியியலாளர்கள் மாணவர் மையக்கல்வியை புகுத்தினார்கள். இம்முறையானது மாணவர்களின் சுயசிந்தனைக்கு வாய்ப்பளிப்பதாகவும்,ஆசிரியர் மாணவர் கருத்துப்பரிமாற்றத்திற்கு உதவுவதாகவும் மாணவர்களின் ஆளுமைக்கூறுகளை தட்டி எழுப்பி அவற்றை உத்வேகப்படுத்துவதாகவும் கற்றலில் உற்சாகத்தையும் அளித்தது.

கல்வி என்பது யாது? கல்வியின் இலக்கு எதுவாக இருக்க வேண்டும்.கல்வி என்பதற்கு பல வரைவிலக்கணங்கள் கல்வியியலாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன.பொதுவாக மாணவனின் எல்லாவித நடத்தைகளிலும் ஓர் நல்ல முன்னேற்றமான மாற்றத்தை ஏற்படுத்தல் கல்வி எனலாம். அப்படியாயின் கல்வியின் இலக்கு அல்லது இறுதி நோக்கம் எதுவாக இருக்க வேண்டும் என்றால் "நற்பிரஜையை" உருவாக்குவதே கல்வியின் இறுதி இலக்காக ஏற்றுக் கொள்ள முடியும். ஒழுக்கவிழுமியச் சிந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நேர்மை,விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, உதவி செய்தல் போன்ற நற்சிந்தனைகளுடன் அவனது கல்வி கட்டி எழுப்பப்பட வேண்டும்.

தற்போது பல மாற்றங்களுடன் மாணவர் மையக்கல்வியானது தேர்ச்சி மையக்கல்வியாக வியாபகம் அடைந்துள்ளது.ஆரம்பக் கல்வித்துறையில் (தரம்1-5) பாடம் சார்ந்த தேர்ச்சிகள் ,✓ என்ற குறியீடுகளினால் சுட்டிக்காட்டப்படுகின்றன.புள்ளி அடையாளம் பிள்ளை குறித்த விடயத்தில் தேர்ச்சி அடையாத தன்மையை குறிக்கும்.இந்த இடத்தில் பிள்ளையின் பலவீனத்தை போக்கும் வகையில் ஆசிரியர் பரிகாரங்களை மேற்கொள்வது மிகமிக அவசியமாகும்.இதைவிட ஆரம்ப வகுப்புகளில் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளும் மாணவர் அடைந்திருக்க வேண்டும்.

இடைநிலை வகுப்புகளில் தேர்ச்சி மையக்கல்வியை சரியான முறையில் நடைமுறைப்படுத்த "5E" முறை மூலமான கற்பித்தல் முன்னெடுக்கப்படுகிறது. "5E" முறையினை நடைமுறைப்படுத்துவதிலும் அதன் பலாபலன்கள் தொடர்பில் ஆசிரியர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது.

5E முறையிலே

E1- Engagement - மாணவனை கற்றலுக்கு உள்ளீர்த்தல் அல்லது தயார்ப்படுத்தல்.இதற்கு பொருத்தமான கவன ஈர்ப்பினை மாணவருக்கு அறிமுகப்படுத்த வேண்டியது ஆசிரியர் கடமை ஆகும்.

E2.- இது Exploration இதில் ஆசிரியரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை குழு முறையில் ஆராய்ந்து நூல்களை உசாவி பிரச்சனைகளை விடுவித்தல் ஆகும்.இது மாணவர்களுக்க உற்சாகத்தை அளிப்பதுடன் இயற்கையாகவுள்ள அவர்களின் ஆராய்வூக்கத்தை மேலும் அதிகரிக்க வழிவகுக்கும்.

E3.- இது Explaination மாணவர் குழுவினால் ஆய்ந்தறியப்பட்ட விடயங்களை குழுவின்

தலைவர் அல்லது பிரதிநிதி முன்வைப்பார். இதனை Presentation என்பர். இதன் மூலம் மாணவரை முன்னுக்கு வந்து விடயங்களை விளக்கும் திறனை வளர்க்க உதவும். இது மாணவர்களின் தலைமைத்துவத்தை பேச்சாற்றலை, கூச்சசுபாவ தவிர்ப்பை அதிகரிக்க வழிசமைக்கும்.

E4- இது Ellaboration மாணவர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களில் உள்ள தவறுகள் திருத்தப்பட்டு மேலும் புதிய விடயங்கள் மாணவர்க்கு சமர்ப்பிக்கப்படும். இதன் மூலம் மாணவர் ஆசிரியர் இடைத்தாக்கம் அதிகரிப்பதுடன் கற்றல் அடைவுதிறன் அதிகரிக்கும் என்பது கல்வியியலாளரின் ஆராய்ச்சி முடிபுகள்.

E5- இது Evaluation இதில் மதிப்பீடும் கணிப்பீடும் கொண்டதாக அமையும்.

இந்த 5E முறையின் அனுகூலம், பிரதிகூலம் பற்றி களத்தில் பணிபுரியும் ஆசிரியர்களினால் இம்முறைக்கு சார்பாகவும் எதிராகவும் குரல் கொடுக்கின்றார்கள்.

உண்மையில் சில மாற்றங்களை நாம் ஏற்றுத்தானாக வேண்டும். எனினும் பல ஆசிரியர்கள் மாற்றங்களை தமது சோம்பேறித்தனத்தால் ஏற்க பின்னடிக்கின்றார்கள் என்பது தான் உண்மை. பாட ஆயத்தம் என்பது கற்பித்தலில் மிகப் பிரதானமானது. குறிப்பிட்ட அளவிலான ஆசிரியர்கள் பாட ஆயத்தத்துடன், கற்பித்தல் சாதனங்களுடன் செல்கின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இதேசமயம் எந்தவித ஆயத்தமுமின்றி வகுப்பறைக்குள் நுழைந்து 40 நிமிடத்தை பாழடிப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்பது நிதர்சனம்.

மாறிவரும் கல்விச் செயற்பாடுகளில் கற்பித்தல் உத்திகளும் வெகுவாக மாற்றமடைந்து வருகின்றன. நவீன கற்பித்தல் சாதனங்கள் இன்று பாடசாலைகளில் உட்புகுத்தப்பட்டுள்ளன. இச்சாதனங்களை கொள்வனவு செய்வதற்கான நிதிமூலங்களும் இனங்காணப்பட்டுள்ளன. தர உள்ளீடுகள் (Quality inputs) மூலமாக மூலதனப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இன்றைய கற்பித்தல் சாதனங்கள் ஆக படமேல் தலை எறியி (Over head project) கணனிகள், மல்ரிமீடியாக்கள், எனப் பலப்பல புதிய சாதனங்கள் கற்றலை இலகுவாக்குகின்றன.

மேலும் கற்றலை தேடிச்செல்வதற்காக இணையத்தளம் (web site) பேருதவியாக இருக்கிறது. தனக்குத் தேவையான விடயங்களில் இணையப்பக்கங்களில் (Web page) இருந்து பெறக்கூடிய அளவிற்கு விஞ்ஞானம் வெகுவாக வளர்ச்சி அடைந்து விட்டது. இணையப் பக்கங்களில் வேண்டத்தகாத விடயங்களைத் தேடிப்பெற்று கல்வியைச் சீரழிக்கும் விடயங்களும் உள்ளன என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டியிருக்கிறது.

கல்வி ஆசை முற்காலத்திலாயினும் சரி நிகழ்காலத்திலாயினும் சரி எதிர்காலத்திலாயினும் சரி, அபிவிருத்தியை இலக்காக கொண்டது. அதாவது சமூக முன்னேற்றத்திற்கு கல்வியே காரணியாகும். "முன்னேற்றத்திற்கு முடிவும் எல்லையும் இல்லை" என்பது பிரான்சிய சிந்தனையாளர் B.D.Fontenelle என்பவரின் கருத்தாகும்.

"யாவருக்கும் பாடசாலைக் கல்வி", 14 வயது வரையில் கட்டாயக்கல்வி என்பன "UNICEF" இன் தாரக மந்திரங்களாக உள்ளன. இலங்கையை பொறுத்த வரையில் 1945 ல் இலவசக்கல்வியின் தந்தையாகிய

C.W.W.கன்னங்கரா அவர்களினால் நடைமுறைக்கு வித்திடப்பட்டது. இலவசக்கல்வி இன்று வியாபித்து இலவச நூல், இலவச சீருடை, இலவச உணவு, இலவச மேலதிக பயிற்சி என்பன அரசினால் வழங்கப்பட்டு வருகிறது.இவ்வளவும் இலவசமாக வழங்கப்பட்டாலும் மாணவர்கள் பாடசாலை விட்டு வந்த கையோடு சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்கின்றனர்.இதன் மூலம் இலவசக் கல்வி என்பது கேள்விக்குறியாகி விட்டது.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் மாற்றமடைந்து வியாபிக்கும் கல்விச் செயற்பாடுகளுக்கு உலகவங்கியின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.உலகவங்கி அதிகாரிகள் பொருத்தமான கல்வி முறை பற்றி ஆராய்ச்சி நடாத்துகின்றனர்.அதேசமயம் உள்நாட்டு கல்வி நிபுணர்களும் பல ஆராய்வுகளை நடாத்தி வருகின்றனர்.இவ்விரு சாராரினதும் ஆராய்ச்சிகளின் விளைவாக நாட்டின் கல்வி முறையில் மாற்றம் ஏற்படுகின்றது.

வளர்முக நாடுகளில் செய்யப்படும் பொருள் முதலீடுகளை விட கல்விக்கான முதலீடு அதிகளவிலான சமூக நன்மைகளை பெற்றுத்தரும் என ஆய்வுகள் கூறுகின்றன.மக்களின் நீடித்த ஆயட்காலம் சிறந்த அபிவிருத்தி குறிகாட்டி ஆகும். நீடித்த ஆயுளுக்கும் எழுத்தறிவுக்கும் தொடர்பு உண்டு.சுருங்கக் கூறின் கல்வியின் முக்கியத்துவம் நாட்டின் பொருளாதாரத்துடன் நேர்முகத் தொடர்புடையது.

1960 களில் உலகவங்கி முதன்முதலாக இலங்கைக்கு விவசாயம்,போக்குவரத்து, தொழில்முன்னிலைக்கல்வி, என்பவற்றிற்கு நிதியுதவி அளித்தது.இதில் விவசாயம், போக்குவரத்து என்பவற்றில் குறித்த அபிவிருத்தி எட்டப்படவில்லை.எனினும் தொழில் முன்னிலைக் கல்வி மூலம் ஏராளமான தொழிற்பயிலுனர்கள் உருவாக்கப்பட்டார்கள்.

1970 களில் உலகவங்கி இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு அதிக அளவில் நிதி ஊட்டம் அளித்தது.இக்காலகட்டத்தில் பதவியில் இருந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட "தரப்படுத்தல்" சட்டம் காரணமாக தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதன் காரணமாக தமிழ் மாணவர்கள் மத்தியில் விரக்தி நிலை உண்டாக்கி அது ஒரு அரச எதிர்ப்பு போராட்ட நிலையை தோற்றுவித்தது.இதன் மூலமாக காலப்போக்கில் பெரும் யுத்த நிலை உண்டாகி ஏறத்தாழ 30 வருடங்கள் மோசமான ஒரு சூழ்நிலையை இலங்கை எதிர்கொண்டது.

இன்று ஒரு கனிவான சூழ்நிலை காணப்படுகின்றது. மாறிவரும் சமூக விஞ்ஞான யுகத்திற்கேற்ப மாணவரை பயிற்றுவிக்க வேண்டிய ஒரு மாபெரும் பொறுப்பு ஆசிரியர்களிடம் மாத்திரமல்ல சமூகத்திலுள்ள புத்திஜீவிகளின் கையிலும் தங்கியுள்ளது.இன்று புரட்சி கரமான முறையில் முன்னேறிவரும் இலத்திரனியல் தொழில்நுட்ப யுகத்தில் உலகம் சுருங்கி சிறு கிராமமாகி விட்டது எனலாம்.ஆகவே இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து எதிர்நோக்கி வரும் சவால்களை முறியடித்து அன்பு, அகிம்சை, விட்டுக்கொடுத்தல், மற்றவர்களுக்கு மனதளவில் கூட தீமை விளைவிக்காமை போன்ற நல்ல சிந்தனை பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டியது பாடசாலைகளினதும் கல்விச்சமூகத்தினதும் கடமையும் பொறுப்புமாகும்.

# THE PLACE OF "LISTENING" IN THE TEACHING OF ENGLISH AS AN INTERNATIONAL LANGUAGE.

A.Kandiah.

*The teaching of any language involves the active participation of the pulpi in acquiring proficiency in the four skills of language learning namely, listening, speaking ,reading and writing.*

*Teachers of English who belong to the old school of thought will, no doubt, feel strange to advocate listening as a separate skill. They tend to think that with most teaching methods, particularly the traditional ones, most of the lesson time is spent on listening to the teacher teaching, explaining and advising and quite naturally they show a kind of aversion to accepting listening as a separate skill. They say that the pupils have plenty of practice in their day-to-day language learning activities . Why ,they ask, should we overburden the pupils with an additional skill.*

*Teachers who belong to this epoch confuse listening in class room situation with listeing in real life situation . There is a marked difference between the two. In a classroom situation listening involves –*

*a) repetition*
*b) explanation*
*c) slow speed*
*d) translation*

*Conversely in every day life the learner doesn't have "PAUSE" because there is a continuous flow of words and the pupils can't call for repetition. The kinds of listening outside the class that our pupils are most likely to be concerned are communication through radio and television ,public speeches , announcements and everyday interaction with their peer groups.*

*It, therefore, becomes necessary to prepare our students to listen well and to listen in the right way. Normal classroom listening might some time blunt their ability to understand the speaker.*

*The old epoch has now come to an end. The new epoch has seen many changes in language teaching and language learning. Listening is now included as the forth skill in language teaching. Earlier the teacher did all the talking and the pupils passively listened as an American educationist has rightly said. In short we are now in an epoch that advocates child – cantered education.*

*Teachers as craftsman need to adopt other men's methods and other men's tools to their special work. They are craftsmen in their own right and not technicians waiting on others. The status of the teachers has changed with the changes taking place in the teaching of English in our schools. As such teachers should equip themselves with all the teaching techniques to*

*make language learning an enjoyable and enthusiastic one.*

*Listening is a receptive skill, that is, the child absorbs the sounds and assimilates the meaning. Listening is hearing the sounds and recognizing them, storing what is heard in memory for later use and remembering them so that they could be told to somebody.*

*In short listening implies the understanding of the sound representation into meaningful wholes. It is the primary reaction to any sound symbols. That is why listening requires special training to enhance the power of understanding. Listening, if taught properly, giving attention to pronunciation, intonation and the style of reading will help pupils keep in memory all that is taught.*

*There are three major areas where listening comprehension practice is graded. They are enumerated below:*

a) *The type of comprehension exercises selected.*
b) *The type of materials selected for comprehension exercises.*
c) *The subject matter of the materials selected.*

*Care should be taken to the language level of the class to which the materials are administered so that listening will be effective and interesting.*

*A progressive grading of listening comprehension will involve the systematic and simultaneous use of all the three areas. If any area is ignored there will be a marked drop in performance.*

*It is absolutely necessary for the teacher to take into account the types of exercises set, to help effective practice. The exercises one selects for listening comprehension should suit the age level of the child. The teacher also should be aware of the areas on which these tasks are set. He or she should leave out irrelevant and unwanted details in the passages he or she selects. The passages thus selected should have relevance to the day-to-day experience of the child.*

*The following types of exercises are recommended to make listening effective. But hereagain the teacher is the deciding factor and knowing the class as he or she does, she or he has all the liberty to design the types of exercises that well suit the class.*

a) *True or False exercises*
b) *Yes or No answers*
c) *True or False and Not stated exercises*
d) *Filling in the blanks*
e) *Multiple choice questions*
f) *Interpretation of the speakers' intention*

*The length of the passages could frequently be anything from 50 -100 words. As the exercises are specially recommended to the lower forms, long passages or something that are complicated will cause problems and greatly deter their power of attention and understanding. The teacher should not only consider the length of the passage but also the language content of the passage.*

*English today is no more the property of the English people. It is the property of the world. To make this language a viable means of communication is left to the hands of the teachers. Sri Lanka expects much from our teachers.*

# பிள்ளைகளை அணுகுவது தொடர்பாக ஆசிரியர், பெற்றோரது பங்களிப்பு



செல்வி.துஷ்யந்தினி -தியாகராசா
பழைய மாணவி.

பிள்ளைகளுடைய அன்பை அன்நியோன்யமான உறவை நாம் பெற விரும்பினால், எமது அணுகுமுறை திட்டமிடப்பட்டதாகவும், அவர்கள் விரும்பும் இலக்குகளை அடையக்கூடியதாகவும், இருப்பது நன்று.இம்முயற்சி ஒரு பகுதியினருக்கு இன்பத்தையும், வெற்றியையும் அளிக்கும்.நற்பயனுடைய தொடர்பு, உரையாடல் விரக்திக்கு இடமளிக்காது பெற்றோர்,ஆசிரியர் கூறுவதை பிள்ளைகள் மகிழ்வுடன் செவிமடுக்க கூடிய முறையில் அன்பு, கவர்ச்சி, விவேகம், நுட்பம், கொண்ட உரையாடல் சாலவும் சிறந்தது.இருபகுதியினரின் சுயகௌரவம் பேணப்பட வேண்டும்.

இன்றைய பிள்ளைகளே நாளைய உலகத்தை உருவாக்கப் போகிறவர்கள். ஆதலால் பிள்ளைகளின் விருத்தியானது பொருத்தமான வகையில் மேம்பாடடைய உதவுவது பெரியவர்களாகிய எமது கடமையாகவும், பொறுப்பாகவும் அமைகிறது. பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லத் தொடங்கிய காலம் தொடக்கம் அவர்களது நாட்களின் கணிசமான பகுதி பாடசாலையிலேயே செலவிடப்படுகின்றது. இதனால் பிள்ளைகளை அவதானிப்திலும், நல்வழிப்படுத்துவதிலும், அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதிலும் அவர்களது படிப்பு என்கிற அறிவுத் தேவைக்கு மேலதிகமாக, அன்பு, அரவணைப்பு, ஆதரவு, போன்ற உணர்ச்சி தேவைகளை வழங்குவதிலும் ஆசிரியரின் செல்வாக்கு முக்கிய இடத்தை வகிக்கிறது.

ஒரு பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது ஒரு பிள்ளையினுடைய ஆளுமையில் மிகுந்த செல்வாக்கு செலுத்துகிறது.இச் செல்வாக்கானது அதனுடைய ஆயட்காலம் முழுவதும் நீடிக்கிறது.ஆயினும் சில வயதுப் பருவங்களில் குடும்பத்தின் செல்வாக்கானது மிகக் கூடுதலாக உள்ளது.ஒருவர் தனது வாழ்க்கை காலத்தில் கூடுதலான காலம் குடும்பத்தினரோடு வாழ்தல் இதற்கு காரணமாகும்.

பிள்ளைகள் புதிய சூழலை அறிய விளங்கிக் கொள்ள செயற்பட காலம் தேவை.இயற்கை இதை நன்கு உணர்ந்த பிள்ளைபருவத்தை, மிருகங்களின் குட்டிகளின் குறுகிய காலத்திலும் பார்க்க, நீடித்து இருக்கின்றது.பிள்ளைகளின் வளர்ச்சியானது உடல்,உள வளர்ச்சியில் தங்கியுள்ளது.

அற்புதமான புதிய படைப்பிலிருக்கும் மர்மங்களையும், ஆற்றல்களையும், பெற்றோரும்,ஆசிரியரும், சமூகமும் புரிய முனைவதோடு, வழிப்படுத்தவும், நெறிப்படுத்தவும், உதவ வேண்டும்.



திருமதி. உ.பாலஸ்கந்தராசா
ஆசிரியர்,
யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பரந்து விரிந்து காணப்படும், பல்லாயிரக்கணக்கான பிரதேசங்களை கொண்டு விளங்கும் இப்பிரபஞ்சம் தற்போது சுருங்கி வருகிறது. புவியியல் ரீதியில் அல்லாமல் தொடர்பாடல் ரீதியில் ஏற்பட்டிருக்கும் இச்சுருக்கத்துக்குரிய சரியாக காரணம் கைத் தொலைபேசியின் கண்டு பிடிப்பு ஆகும்.

கைத்தொலைபேசியின் கண்டு பிடிப்பு எனும் நிகழ்வு உண்மையிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். ஏனெனில் ஒருகாலத்தில் புறாக்கள் மூலம், ஓடும் வீரர்கள் மூலம் எனும் கடினமான, நீண்டகாலம் செல்லக்கூடிய வரலாற்றுக்கட்டங்களை கொண்டு இருந்த தொடர்பாடல் இன்று நினைத்தவுடன், நினைத்த விடயத்தை, நினைத்தவருக்கு அனுப்பி விடமுடியும். என்கிற கட்டத்தினை அடைந்து விட்டமைக்குரிய காரணம் தொலைபேசி கண்டு பிடிப்பு என்பதை விட கைத்தொலைபேசி கண்டுபிடிப்பு என அடித்துக் கூற முடியும்.

கடிதம் மூலமான தொடர்பாடல் முறை நீண்டகாலம் மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அழிவில்லாததாக காணப்பட்ட ஒரு தொடர்பால் முறையாகும். அதே வேளை இது மக்களால் அதிகம் பயன்படுத்தப்பட்ட, அதிகம் விரும்பப்படுகிற ஒரு தொடர்பாடல் முறையாக காணப்பட்டது. ஆதற்குரிய காரணங்கள் எளிமை, மலிவு, இலகு, நம்பகத்தன்மை ஆகியனவகும். ஆயினும் கைத்தொலைபேசி தொடர்பாடல் முறை இன்று கடித முறைக்கு சாவல் விடுகிற ஒரு தொடர்பாடல் முறையாக பரிணாமம் பெற்று இருப்பது எனும் செய்தியானது கடிதப்பிரியர்களுக்கும், ஏழைகளுக்கும், பழமை விரும்பிகளுக்கும் ஓர் அதிர்ச்சித்தகவல்தான்.

தொடர்பாடலுக்கு தொலைபேசி நிலையங்களை நாடும் அவசியமில்லை. பணச்செலவு குறைவு, நினைத்தவுடன் தொடர்பு கொள்ள முடிதல், தொடர்பு கொள்ள இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை இலகுவில் காவிச் செல்ல முடிகின்றமை, கையடக்கம் ஆகியன காரணங்களே கைத்தொலைபேசி பாவனை இன்று சர்வ சாதாரணமான முறையாக, விரும்பத்தக்க முறையாக மாற காரணமாக அமைந்தது. ஆயினும் இத்தகைய காரங்களே மாணவர் மத்தியில் கைத்தொபேசி பாவனை பரவ காரணமாக அமைந்ததாக இன்றைய கல்வியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்குறித்த காரணங்கள் மட்டுமன்றி பல்லூடக பாவனை(Malti media) Radio, Television ஆக பயன்படுத்தல; மற்றும் ஒலிப்பதிவு (Record, Audio), ஒளிப்பதிவு(Vidio), internet Browsing ஆகியனவாக வசதிகளை கொண்டு இருத்தல் ,Camara வாக பயன்படுத்தல் ஆகிய பல்வேறு தொழில் நுட்ப வசதிகளை கொண்டு இருத்தல் கைத் தொலைபேசியில் மாணவர் சமூகம் பற்றுக் கொண்டமைக்கு காரணங்களாகும்

கைத்தொலைபேசி நிறுவனங்களின் உற்பத்திப் போட்டி காரணமாக நாளுக்கு நாள் புகுத்தப்பட்டு வரும் உத்திகள் காரணமாக இன்று அதிகம் கவரப்படும் சமூகம் மாணவர் சமூகமாகவே உள்ளது. இன்னுமொரு வகையில் கூறப்போனால் மாணவர் சமூகத்தை இலக்கு வைத்தே இன்று பல வசதிகளை புகுத்துவதில் கைத்தொலைபேசி நிறுவனங்கள் இலக்காக உள்ளன. ஆயினும் அவ்வசதி வாய்ப்புக்கள் மூலம் மாணவர் சமூகத்தின் புலன் திசைமாறக்கூடியதாக இருத்தல் எனும் ஆபத்தான நிலைக்கு இன்று கல்விச் சமூகம் தள்ளப்படுகிறது.

அதேவேளை கையடக்கத்தொலைபேசி கொண்டிருக்கும் வசதிகள் என்பது இன்று பல குற்றச் செயல்களை மேற்கொள்ள குற்றவாளிகளுக்கு வசதியளிப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதே வேளை பல குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு பலருடைய கைத்தொலைபேசிகள் இருப்புதும் உர்ஜீதம் செய்யப்பட்டு இருப்பது அதிர்ச்சியளிப்பதான தகவலாக உள்ளது.

எனவே மாணவர் சமூகத்தை பொறுத்த வரை கைத்தொலைபேசி இன்று அவசியமானதுதானா? என்ற கேள்வி நலன்விரும்பிகளிடையேயும், கற்ற அறிஞர்களிடையேயும், பெற்றோர்களிடையேயும் ஏற்பட்டு இருப்பது குற்றச் செயல்கள் தொடர்பான மேற்படி தகவல்கள் மூலமாக ஏற்பட்ட விழிப்புணர்வு மூலமேயாகும்.

மாணவர் சமூகத்தை பொறுத்தவரை அவர்களது கடமைகள் உரிமைகள் என்பன கல்விப புலத்துடன் தொடர்புபட்டதாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருப்பதாலும் அவர்கள் தங்கி வாழ்வதாலும் தொடர்பாடல் என்பதும் பாடசாலை மற்றும் குடும்பசூழல் சார்ந்த அவர்களின் தேவைகளைப் பொறுத்தவரை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தேவைப்படுவதாக உள்ளது.

எனவே மாணவர்களுக்கு கைத்தொலைபேசி தேவையற்றது என்ற வாதத்தை கல்விப்புலம் முன்வைத்து இன்று பாடசாலைகளில் அவற்றை வைத்திருப்பதற்கும் பாவிப்பதற்குமான தடையையும் கல்விச்சமூகம் விதித்து இருப்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும். ஏனெனில் கைத்தொலைபேசி என்பது தற்போது தொடர்பாடலுக்கு என்ற நோக்கத்தை கருத்தில் கொள்ளாது அதில் பொதிந்துள்ள ஏனைய வசதிகளை கருத்தில் கொண்டும் நாகரீகத்தை மையப்படுத்தியுமே கொள்வனவு செய்யப்படுகின்ற பொருளாக மாறியுள்ளது.

மேலும் கைடக்கத் தொலைபேசி பாவனையும் அதில் உள்ள வரையறையற்ற வாய்ப்புக்களும் எதிர்காலத்தில் மாணவக்குற்றவாளிகளை உருவாக்கும் சாத்தியங்கள் உள்ளது என்பதை கல்விச்சமூகம் தனக்கேயுரிய தீர்க்கதரிசன யுக்திமூலம் கண்டுபிடித்திருக்கிறது என்பதே மாணவரும் கைத்தொலைபேசியும் தொடர்பான அவர்களின் கரிசனைக்கு முக்கிய காரணமாகும். ஏனெனில் மாணவக் குற்றவாளிகளை கொண்ட சமூகம் என்பது கற்பனை செய்து பார்க்கக்கூட முடியாத விடயம் என்பதில் மாற்றுக்கருத்தேதும் இல்லை.

மேலும் கையடக்க தொலைபேசியின் கவர்ச்சித்தன்மை, வசதி, நிறுவனங்களின் போட்டி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அது பல்வேறு விலைகளில் சந்தைகளில் கிடைக்கிறது. பெறுமதிமிக்க கையடக்க தொலைபேசிகளினை வைத்திருப்பவர் பொது இடங்களில் மதிக்கப்படுபவர், நாகரீகமாணவர், என்கிற தப்பான அபிப்பிராயமும் இளைஞர்கள் மத்தியில் உண்டாகாமல் இல்லை. இவ்வாறான சகதிக்குள் மாணவர்கள் சிக்கி விடக்கூடாது என்பது கல்வி அதிகாரிகளின் பிரதான பிரச்சனையாக உள்ளது.

மாணவர்களின் நேரங்களை அதிகளவில் காவு கொள்ளும் பொழுதுபோக்குப் பொருளாகவும்

இன்று கைத்தொலைபேசிகள் மாறிவருகின்றன. எனவே மாணவன் கல்விக்கு நேரத்தை ஒதுக்கி செயற்பட முடியாது உள்ளமை அவனது கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. போனாக்களும் புத்தகங்களும் காணப்படவேண்டிய மாணவர்களின் சட்டைப்பைகளிலும் கைப்பைகளிலும் கைத்தொலைபேசிகள் தாண்டவமாடுகின்றன. பாடசாலைவரை சென்று ஆனந்தக்கூத்தாடுகின்றன. இதன்மூலம் இக்கைத்தொலைபேசிகள் மாணவர்களின் கல்வியையும், ஒழுக்க விழுமியங்களையும் மழுங்கடிக்கின்றன.

மாணவர்கள் இன்றநெற் வசதியுள்ள கைத்தொலைபேசிகள் மூலம் மனதை அலைபாயவைக்கும் காட்சிகள், நீலப்படங்கள், அரைநிர்வான திரைப்படக்காட்சிகளையும், சிற்றின்ப நோக்கத்தில் பார்ப்பதையும் அவற்றை சேமித்துவைத்து ரசிப்பதையும் நோக்காகக்கொண்டுள்ளனர். மேலும் கற்கும் வயதில் பருவ வயதின் விளைவாக காதல் சேட்டைகளை அரங்கேற்றவும் கைத்தொலை பேசிகளை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் அடங்கலாக சமூகத்தின் பல இடங்களில் பல பிரச்சனைகளுக்கு கையடக்க தொலைபேசி காரணமாக அமைந்துள்ளது. மேலும் கைடக்கத் தொலைபேசிகள் மூலம் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பெற்றோர்களோ ஆசிரியர்களோ கண்காணிக்க முடியாது என்பதும் மறைவிடங்களில் வைத்து கையாளமுடியும் என்பதும் கைத்தொலைபேசி மூலம்மேற்கொள்ளப்படும் அநாகரீக நடவடிக்கை களை மேலும் தூண்டுவதாக உள்ளது.

மாணவர்கள் ஆசிரியர்களைப் பின்பற்றி நடப்பவர்கள் என்பதற்கிணங்க சமூகத்தில் பல பொறுப்புக்களை கொண்ட பல தேவைகளை கொண்ட பல பிரச்சனைகளை உடைய ஆசிரியர்கள் மீதும் கல்விச்சமூகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் கைத்தொலைபேசி பாவனைக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது..

மேலும் கைடக்கத்தொலைபேசி பாவனை மாணவ சமுதாயத்தின் பாலியல் இச்சைகளை வளர்ப்பதற்கும் தூண்டுவதற்கும் ஏதுவாகவும் அதிக தேவையற்ற சுதந்திரத்தை உணரவைப்பதாகவும் அமைந்து இருக்கிறது.

மேலும் கையடக்க தொலைபேசிகளை அதிகம் பாவிப்பதால் செவிப்பாதிப்பு, மற்றும் சட்டைப்பையில் வைத்திருப்பதன்மூலம் அது ஏற்படுத்தும் அதிர்வு மூலம் இருதய பாதிப்புக்கள் ஆகியன ஏற்படுகின்றன. அத்துடன் அது ஏற்படுத்தும் கதிர்வீச்சுக்கள் மூலம் மூளையில் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.என ஆய்வுகள்மூலம் அதிர்ச்சித்தகவல்கள் வெளிப்பட்டு இருப்பதும் வளரும் சமுதாய அங்கத்தவர்களான மாணவர்களுக்கு இது பொருத்தமற்றது என கோடிட்டு நிற்கின்றது.

கையடக்க தொலைபேசி பாவனை தொடர்பாக தற்போது அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இதற்கு சமூகத்தின் சகல வகுப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியுமுள்ளது. முக்கியமாக கல்விச்சமூகம் இது தொடர்பாக அதிக கரிசனை காட்டவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இல்லாவிடில் கொடிய வைரஸ் நோய்போன்று கைத்தொலைபேசி நோய் மாணவ சமுதாயத்தை அழிக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை

# பாடசாலையில் சமயக்கல்வி



வே.கௌசல்யா
ஆசிரியை

பிறப்புக்களிலே அரியது மானிடப்பிறவி. இதனாலன்றோ "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று பாடினார் எங்கள் தமிழ்மூதாட்டி ஔவையார்.நாம் பிறக்கும் போது விலங்கு உணர்வுகளுடன் பிறக்கின்றோம். காலம் செல்லச்செல்ல மனமானது பக்குவப்பட்டு மனதிலே தெய்வப்பண்பு தோன்றுகின்றது. இதனால் மனிதன் தெய்வமாகின்றான்.அதாவது இறைவனுடன் அத்துவிதமாகின்றான். இத்தகைய முயற்சிக்கே சமயக்கல்வி அவசியமாகின்றது. சமயம் என்பது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தீபம்.அது புனிதமானது.வாழ்க்கை எனும் நாடகமேடையில் நாம் ஏற்றிருக்கும் வேடங்கள் எத்தனை? எத்தனை? இவ்வாழ்க்கையின் முதலாவது நிலைதான் பிரமச்சாரியம்.அது தான் மாணவநிலை.ஒருவன் தான் கற்க வேண்டியதை இளமையிலே கற்க வேண்டும்.அது தான் பாடசாலை.அது தான் ஒரு மாணவனின் எதிர்காலத்தை தீர்மானிப்பதும் அது தான் ஒருவனை நல்லவனாக்குவதுமாகும்.ஆகவே கற்க வேண்டியதை இளமையிலே கற்க வேண்டும் என சேக்கிழார் சுவாமிகள் கூறுவார். அதாவது "ஒரு தோட்டத்திலே களை பிடுங்குவதாயின் அதற்கு நீர் பாய்ச்சிய பின்பே அக்களையை களைந்தெடுக்கலாம்" அது போல ஒருவனின் குற்றங்களை களைவதற்கும் அவனது மனத்திற்குச் சமயம் என்னும் அன்பு நீரை பாய்ச்சவேண்டும். அதன்பின்பே அவனது குறைகளை குற்றங்களை நீக்கி அவனை ஒரு நல்ல மனிதனாக மாற்றமுடியும்.எனவே தான் பாடசாலைகளிலே சமயக்கல்வி இன்று அவசியமாகின்றது.

சிறு வயதிலிருந்து பல்கலைக்கழகம் வரை ஒரு மாணவன் சமயக்கல்வியை கட்டாயம் படிக்க வேண்டும்.அத்தோடு பாடசாலைகளிலே சமயக்கல்வியை வளர்க்க பல்வேறு உதவிகளைச் செய்து வருவதும் வரவேற்கத்தக்கதாகும். இவ்வாறு ஒருவனுடைய ஒழுக்கமே ஒருவனை உயர்ந்தோன் ஆக்குவதாகும். இவற்றை விட ஒழுக்கம்,தர்மம்,போன்றவற்றையும் போதிப்பது இச்சமயக்கல்வியே என்று சொல்வதில் அச்சமில்லை.கேணியிலே நீருண்டு அதை தோண்டத் தோண்டக் கேணி ஊறும். அது போல் மாணவ சமுதாயத்தின் உள்ளத்திலே சக்தி இருக்கின்றது. அது போதிக்க போதிக்கத் தான் வளரும். எனவே இத்தகைய போதனைகள் இளமையிலே மாணவப்பருவத்திலே பாடசாலைகளில் போதிக்கப்படுவது இன்று அவசியமாகிவிட்டது.

இவற்றை தவிர விருந்தோம்பும் பண்பு, பொதுநலம், செய்நன்றி போன்றவற்றை மாணவர்கள் பாடசாலைப் புத்தகப் போதனையுடன் நின்றுவிடாது அதற்கேற்றவாறு ஒழுகத்தலைப்பட வேண்டும்.ஆகவே இவ்வாறான சமய நோக்குகளை ஏற்று மாணவர்கள் அதற்கேற்ப வாழ்ந்து காட்டவேண்டும். மனித இதயத்தில் தெய்வப்பண்புகள் மலர வேண்டும்.மொத்தத்தில் மனிதன் மிருகமாக அல்லாமல் மனிதனாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.இவை யாவும் இன்றைய உலகநாடுகளிலேயே ஏற்படுமாயின் பிணக்குகள் ஏற்படுவதற்கு இடம் கிடையாது.

எனவே சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு பாடசாலைகளிலே சமயக்கல்வி போதிப்பது அவசியமாகின்றது.சிறுவயதிலே கல்வி போதிக்கப்படாமையால் தான் மேலைநாடுகளில் சமய வாதங்கள் தலைவெடுக்கின்றன.மனிதனில் அன்பு மலர வேண்டும். அறம் பெருக வேண்டும். அதே சமயம் மறுபுறம் சுயநலம் சுருங்க வேண்டும்.ஆகவே அரிய மானிடப்பிறவியை எடுத்த எங்களுக்கு இளமையிலே பாடசாலைகளிலே நல்ல சமயக்கல்வியை போதிப்பதன் மூலம் அவனை ஓர் உயர்ந்த நிலைக்கு ஆக்கிவிடலாம்.

# கரைகாணத் துடிக்கும் உள்ளங்கள்.



திருமதி.பிறேமினா.ஜெகன்
ஆசிரியர்.
யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை.

ஓர் அழகிய கிராமம். அந்தக் கிராமத்தின் அழகை எடுத்துக் காட்டுவது நிழல் தரும் பெரிய மரங்கள், வயல்கள், கரும்புத்தோட்டங்கள், மற்றும் சூரியனைக் கண்டதும் புன்னகை புரிந்து தன் அழகைக் காட்டுவதற்காக சூரியன் செல்லும் திசையெல்லாம் தானும் திரும்பும் சூரியகாந்தித் தோட்டம் என்பவை தான். அந்தத் தோட்டத்தின் வழியே இனியா, றோகினி, அபிராமி, மூவரும் வந்து கொண்டிருந்தனர். காலை பத்துமணியாகியது "சுள்ளென்று" வெயில் முகத்தில் குத்தியது. ஆனால் நிழலில் ஒதுங்குவதற்கு அதில் நின்ற பெரிய ஆலமரம் பாறிக்கிடந்தது. மூவரும் அதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது இனியா "பார்த்தீர்களா இந்தக்கொடுமையை, இறைவன் தானே படைத்துவிட்டு பின் அதன் அழகைப் பார்க்கப் பொறாமையில் அதனை விழுத்தி விட்டார்" என்று கூறிக் கண்ணீர் சிந்தினாள். இந்தக் கிராமத்தில் சுமார் நூற்றைம்பது குடும்பங்கள் வாழ்கின்றனர். இக்குடும்பங்களை வாழவைப்பதற்கென்றே இறைவன் படைத்தார் என்று கூறும் அளவிற்கு ஜமீன் ஒருவர் இருந்தார். அவர் பெயர் வெள்ளைச்சாமி இவருக்கு இரண்டு பெண்பிள்ளைகள். மூத்த மகள் கஸ்தூரி, இளைய மகள் அபிராமி, இருவரும் தந்தையைப் போன்றே வெள்ளை மனம் படைத்தவர்கள்.இவர்களுடைய வீட்டில் பலர் வேலை செய்து வந்தனர்.அவர்களுள் செல்லப்பா, கண்ணம்மா, என்ற தம்பதியினரும் வேலை பார்த்து வந்தனர். இவர்கள் மிகவும் நாணயமானவர்கள். நேர்மையாக உழைப்பதையே விரும்புபவர்கள். இவர்கள் மீது எஜமானுக்கு தனி மதிப்பே உண்டு. இத்தம்பதியினருக்கு மூன்று பெண்பிள்ளைகள். மூத்தவள் இனியா, இரண்டாவது றோகினி, மூன்றாவது கயல்விழி,கயல்விழி 5ம் வகுப்பில் படிக்கிறாள்.

கண்ணம்மா அடிக்கடி தன் பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகளே நீங்கள் நன்றாகப் படித்து உங்களுக்கென்று ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பது தான் என் ஆசை" எனக் கூறுவாள். இந்த எண்ணம் பிள்ளைகளின் மனதிலும் வேரூன்றிக் கிடந்தது. இவர்களின் இந்த ஆசை நிறைவேறியதா? இல்லையா?

அன்று ஒருநாள் தாய் உடல்நிலை முடியாமல் படுத்துவிட்டாள். இனியா வீட்டுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, தனது கல்வியையும் கவனித்து வந்தாள்.ஒரு நாள் மூவரும் பாடசாலையில் இருந்து வீடு திரும்பினர். மூத்த மகள் இனியா தாயாருக்கு உணவு கொடுப்பதற்காக அவரை எழுப்பினாள். "அம்மா அம்மா எழும்புங்க" என்றாள்.தாய் எழும்பவில்லை. மீண்டும் ஒரு முறை "அம்மா எழும்பி சாப்பிடுங்க" என்றாள். அவர் எந்தவித அசைவுமின்றிக் கிடந்தார்.இனியா அலறியபடியே "அப்பா ஓடிவாங்க அம்மாவைப் பாருங்க" என்று கதறினாள். தாயை இழந்த இவர்களுக்கு "கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போன்ற உணர்வு தோன்றியது" விம்மி விம்மி அழுது கொண்டிருந்தார்கள். இவர்களைப் பார்த்த தந்தை "பிள்ளைகளே இனி என்ன செய்வது எல்லாம் இறைவன் செயல் நீங்கள் அழக் கூடாது. அம்மாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டும்" என ஆறுதல் கூறினார்.

இனியா தனது பணியைத் தொடர்ந்தாள். இனியா க.பொ.த. உயர்தரத்திலும் றோகினி பத்தாம் வகுப்பிலும் கற்று வந்தனர்.

காலம் கரைந்தோடியது. மாரிகாலம் தொடங்கியது. ஆனாலும் அவ்வளவாக மழை இல்லை.அன்று மாலைப் பொழுது சில்லென்று ஓர் காற்று வீசியது.மழையும் சிறுசிறு துளிகளாக விழுந்தது. மறுநாளானது வேகமாக காற்றும், மழையும் தொடர்ந்தது. தந்தை இருநாட்கள்

வேலைக்குச் செல்லவில்லை. தந்தை இனியாவிடம் "எஜமான் என்னபாடோ தெரியாது நான் ஒருஎட்டுப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டு கிளம்பினார்.

அடுப்பங்கரையில் புகைந்து கொண்டிருந்த அடுப்பை ஊதியவாறே "சீக்கிரம் வாங்கப்பா" என்று கூறியபடி இனியா தன் வேலையைத் தொடர்ந்தாள். "அக்கா எம்மிடம் வானொலிப்பெட்டி இல்லையென்றாலும் இன்று எம் வீட்டில் இனிமையான இசை ஒன்று ஒலிப்பதைக் கேட்டாயா? என்றாள் றோகினி. இனியாவும் என்னவென்று யோசித்தாள். அவர்களுடைய குடிசைக்குள் இருந்து டொட்,டொட், என்ற சத்தம். அது அவர்களுடைய குடிசைக்குள் மழை நீர் சிந்தும் இடத்தில் வைக்கப்பட்ட பாத்திரத்திலிருந்து எழும் ஓசை. தங்கையை நோக்கி "றோகினி கயல் குட்டி எங்கே? சத்தத்தையே காணவில்லை" எனவினவினாள். அதற்கு றோகினி "அக்கா கயல் தூங்குகிறாள்". கயல் நடுக்கத்தில் போர்த்தியபடி சுவரோரமாகததூங்கிக் கொண்டிருந்தாள். இனியாவும், றோகினியும் வெளியே திண்ணையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மழையும் காற்றும் விடுவதாகத் தெரியவில்லை. மழையைக் கண்ட சந்தோசத்தில் மரங்கள் எல்லாம் கைகொட்டிச் சிரிப்பது போல தலையை வேகமாக அசைத்துக் கொண்டிருந்தன.இனியா தங்கையிடம் "பார்க்கவே பயமாக இருக்கிறது. வெள்ளமும் வீட்டிற்குள் வரப்போகிறது போல் இருக்கு. அப்பாவையும் இன்னமும் காணவில்லை". என்று கூறிக்கொண்டு வீதியைப் பார்த்தாள். அவ்வீதி வழியே எஜமானின் வீட்டை நோக்கி அயலவர்கள் ஓடிச்சென்றார்கள். இனியா தங்கையை "இங்கேயே இரு நான் என்னவென்று பார்த்து வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே போய் விபரத்தைக் கேட்டாள். எஜமானின் மகள் கஸ்தூரியின் மீது மரம் முறிந்து விழுந்ததால் அவளுக்கு காயம் ஏற்பட்டு விட்டது. வைத்தியசாலைக்கு செல்வதற்கு வாகனம் எதுவும் வரவில்லை. வெள்ளம் காரணமாக மறுத்துவிட்டார்கள்.கஸ்தூரிக்கு அதிக இரத்தம் வெளியேறியதால் இறந்து விட்டாள் எனக் கூறிக்கொண்டு சென்றார்கள். இதைக் கேட்ட இனியா பதறியபடியே வீட்டை நோக்கி ஓடிவந்து தன் தங்கையிடம் செய்தியைக் கூறினாள். இருவரும் கஸ்தூரிக்கு நடந்த சம்பத்தை நினைத்து அழுதார்கள். வெள்ளம் திடீரெனக் கூடி வீட்டிற்குள் செல்ல ஆயத்தமாகியது. தூங்கிக் கொண்டிருந்த தங்கையை எழுப்புவதற்காக இனியாவும், றோகினியும் உள்ளே சென்றார்கள். அதற்குள் அவர்களின் வீட்டுச்சுவர் இடிந்து தூங்கிக் கொண்டிருந்த தங்கை மீது விழுந்தது. இருவரும் "கயல், கயல்" எனக் கதறியபடி சுவரை அகற்ற முயற்சித்தனர். முடியவில்லை. இவர்கள் அலறிய சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் இருக்கும் அண்ணா ஓடி வந்தார். மூவரும் முயற்சி செய்து போராடி தங்கையை வெளியே தூக்கினர்.தங்கை உயிரின்றிக் கிடந்தாள்.வெள்ளமும் வீட்டினுள் புகுந்து பாத்திரங்கள் பண்டங்கள் எல்லாவற்றையும் அடித்துச் சென்றது. இவர்கள் இருவரும் கோயிலை நோக்கி சனத்தோடு சனமாக ஓடினார்கள். தந்தையை காணவில்லை. பல மணி நேரத்தின்பின் காற்றும் மழையும் ஓயத் தொடங்கியது. வானம் வெளித்தது. சனக் கூட்டத்தின் மத்தியில் இருவரும் தந்தையைத் தேடினார்கள். அங்கு அவர் இல்லை. "அப்பா இங்கு இல்லையென்றால் எங்கு சென்றிருப்பார்? ஐயோ! அப்பாவைக் காணோமே!" என இருவரும் அழுதுகொண்டிருந்தார்கள்.அப்போது ஒருவர் "பல சடலங்கள் வெள்ளத்தில் அடித்து வந்து ஒதுங்கியிருக்குதாம்" எனக் கூறினார். இருவரும் அந்த இடத்திற்கு ஓடிச்சென்று பார்த்தார்கள். தந்தை உடல் முழுதும் காயத்துடன் சடலமாகக் கிடந்தார். இருவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அப்பொழுது இவர்களின் கைகளை யாரோ பிடிப்பதை உணர்ந்தார்கள். இருவரும் திரும்பிப் பார்த்தனர். எஜமான் அவர்களை நோக்கி "பிள்ளைகளே நான் எனது பிள்ளையை இழந்துவிட்டேன். நீங்களும் தந்தை, தங்கை, இருவரையும் இழந்து தவிக்கிறீர்கள். உங்கள் அம்மா அப்பாவின் நல்ல குணத்திற்கும், அவர்கள் செய்த வேலைக்கும் நான் என்றும் கடமைப்பட்டவன். அவர்களிற்கு நான் செய்யும் நன்றி என்றால் அது நீங்கள் என்னோடு வந்து தங்குவது தான். நீங்களும் என் பிள்ளைகள் தான்" என அழைத்தார்.

வேலைக்குச் செல்லவில்லை. தந்தை இனியாவிடம் "எஜமான் என்னபாடோ தெரியாது நான் ஒருஎட்டுப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டு கிளம்பினார்.

அடுப்பங்கரையில் புகைந்து கொண்டிருந்த அடுப்பை ஊதியவாறே "சீக்கிரம் வாங்கப்பா" என்று கூறியபடி இனியா தன் வேலையைத் தொடர்ந்தார். "அக்கா எம்மிடம் வானொலிப்பெட்டி இல்லையென்றாலும் இன்று எம் வீட்டில் இனிமையான இசை ஒன்று ஒலிப்பதைக் கேட்டாயா? என்றாள் ரோகினி. இனியாவும் என்னவென்று யோசித்தாள். அவர்களுடைய குடிசைக்குள் இருந்து டொட்,டொட், என்ற சத்தம். அது அவர்களுடைய குடிசைக்குள் மழை நீர் சிந்தும் இடத்தில் வைக்கப்பட்ட பாத்திரத்திலிருந்து எழும் ஓசை. தங்கையை நோக்கி "ரோகினி கயல் குட்டி எங்கே? சத்தத்தையே காணவில்லை" எனவினவினாள். அதற்கு ரோகினி "அக்கா கயல் தூங்குகிறாள்". கயல் நடுக்கத்தில் போர்த்தியபடி சுவரோரமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.இனியாவும், ரோகினியும் வெளியே திண்ணையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மழையும் காற்றும் விடுவதாகத் தெரியவில்லை. மழையைக் கண்ட சந்தோசத்தில் மரங்கள் எல்லாம் கைகொட்டிச் சிரிப்பது போல தலையை வேகமாக அசைத்துக் கொண்டிருந்தன.இனியா தங்கையிடம் "பார்க்கவே பயமாக இருக்கிறது. வெள்ளமும் வீட்டிற்குள் வரப்போகிறது போல் இருக்கு. அப்பாவையும் இன்னமும் காணவில்லை". என்று கூறிக்கொண்டு வீதியைப் பார்த்தாள். அவ்வீதி வழியே எஜமானின் வீட்டை நோக்கி அயலவர்கள் ஓடிச்சென்றார்கள். இனியா தங்கையை "இங்கேயே இரு நான் என்னவென்று பார்த்து வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே போய் விபரத்தைக் கேட்டாள். எஜமானின் மகள் கஸ்தூரியின் மீது மரம் முறிந்து விழுந்ததால் அவளுக்கு காயம் ஏற்பட்டு விட்டது. வைத்தியசாலைக்கு செல்வதற்கு வாகனம் எதுவும் வரவில்லை. வெள்ளம் காரணமாக மறுத்துவிட்டார்கள்.கஸ்தூரிக்கு அதிக இரத்தம் வெளியேறியதால் இறந்து விட்டாள் எனக் கூறிக்கொண்டு சென்றார்கள். இதைக் கேட்ட இனியா பதறியபடியே வீட்டை நோக்கி ஓடிவந்து தன் தங்கையிடம் செய்தியைக் கூறினாள். இருவரும் கஸ்தூரிக்கு நடந்த சம்பத்தை நினைத்து அழுதார்கள். வெள்ளம் திடீரெனக் கூடி வீட்டிற்குள் செல்ல ஆயத்தமாகியது. தூங்கிக் கொண்டிருந்த தங்கையை எழுப்புவதற்காக இனியாவும், ரோகினியும் உள்ளே சென்றார்கள். அதற்குள் அவர்களின் வீட்டுச்சுவர் இடிந்து தூங்கிக் கொண்டிருந்த தங்கை மீது விழுந்தது. இருவரும் "கயல், கயல்" எனக் கதறியபடி சுவரை அகற்ற முயற்சித்தனர். முடியவில்லை. இவர்கள் அலறிய சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் இருக்கும் அண்ணா ஓடி வந்தார். மூவரும் முயற்சி செய்து போராடி தங்கையை வெளியே தூக்கினர்.தங்கை உயிரின்றிக் கிடந்தாள்.வெள்ளமும் வீட்டினுள் புகுந்து பாத்திரங்கள் பண்டங்கள் எல்லாவற்றையும் அடித்துச் சென்றது. இவர்கள் இருவரும் கோயிலை நோக்கி சனத்தோடு சனமாக ஓடியார்கள்.தந்தையை காணவில்லை. பல மணி நேரத்தின்பின் காற்றும் மழையும் ஓயத் தொடங்கியது. வானம் வெளித்தது. சனக் கூட்டத்தின் மத்தியில் இருவரும் தந்தையைத் தேடினார்கள். அங்கு அவர் இல்லை. "அப்பா இங்கு இல்லையென்றால் எங்கு சென்றிருப்பார்? ஐயோ! அப்பாவைக் காணோமே!" என இருவரும் அழுதுகொண்டிருந்தார்கள்.அப்போது ஒருவர் "பல சடலங்கள் வெள்ளத்தில் அடித்து வந்து ஒதுங்கியிருக்குதாம்" எனக் கூறினார். இருவரும் அந்த இடத்திற்கு ஓடிச்சென்று பார்த்தார்கள்.தந்தை உடல் முழுதும் காயத்துடன் சடலமாகக் கிடந்தார். இருவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அப்பொழுது இவர்களின் கைகளை யாரோ பிடிப்பதை உணர்ந்தார்கள்.இருவரும் திரும்பிப் பார்த்தனர். எஜமான் அவாகளை நோக்கி "பிள்ளைகளே நான் எனது பிள்ளையை இழந்துவிட்டேன். நீங்களும் தந்தை, தங்கை, இருவரையும் இழந்து தவிக்கிறீர்கள்.உங்கள் அம்மா அப்பாவின் நல்ல குணத்திற்கும், அவர்கள் செய்த வேலைக்கும் நான் என்றும் கடமைப்பட்டவன்.அவர்களிற்கு நான் செய்யும் நன்றி என்றால் அது நீங்கள் என்னோடு வந்து தங்குவது தான். நீங்களும் என் பிள்ளைகள் தான்" என அழைத்தார்.

இருவரும் பதில் எதுவும் கூறாமல் நின்றனர்.அப்போது அபிராமி "வாருங்கள் இனி நாம் மூவரும் சகோதரர்கள்" எனக் கூறி அழைத்தாள்.

"அன்று பலரைஅனாதைகளாக்கியது
..........சுனாமி
இன்று பலரை அகதிகளாக்கியது
...............நிஷா- இனி
நாளை............................?

# வகுப்பறை முகாமைத்துவத்தை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு



வே.உதயமோகன்
B.B.A.(Hons), Dip.in.Ed., SLPS 2.II

இன்று மாணவர்களின் ஒழுங்காறு தொடர்பான பிரச்சினைகள், அதிபர், ஆசிரியர்,பெற்றோர்களை மட்டுமன்றி முழுச்சமூகத்தையும் தன்பக்கம் ஈர்த்துள்ளதாக பிரச்சினையாக அமைகின்றது.ஏனெனில் ஒழுக்கம் எல்லை மீறும் போது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை சமூகம் அனுபவித்துக் கொண்டிருப்பதே எனலாம். முக்கியமாக வகுப்பறை மட்டத்தில் நோக்கும் போது ஆசிரியரின் விளைதிறனான கற்பித்தலுக்கு தடை ஏற்படுவதுடன்,கற்றலின் இலக்கையும் சிதறடித்து விடும் தன்மையையும் ஒழுக்கமீறல் ஏற்படுத்திவிடக் கூடியது.முறைசார்ந்த வகுப்பறை என்பது நோக்கும் போது இன்னும் எம்நினைவில் வருவது மாணவர்கள்,தளபாடங்கள் மூடிய வகுப்பு என்பனவே எனலாம்.வகுப்பறை ஒழுக்கம் என்பது மாணவர்களை மிகவும் அமைதியாக வைத்திருப்பது என்பது அர்த்தமாகாது.மாணவர்களின் விளைதிறனான கற்றலில் எவ்வித தடைகளையும் உருவாக்காத வகையிலும் மாணவனின் உள விருத்திக்கு தடைகளை உருவாக்காத வகையிலும் அவனின் படைப்பாக்கத்துக்கு தூண்டுகோல் ஏற்படுத்தக் கூடிய விதத்திலும் மாணவர்களை முழுமையான கற்றல் ஈடுபாட்டுக்கு உட்படுத்தக் கூடிய விதத்திலும் வகுப்பறைக் கவிநிலையை ஏற்படுத்தும் பாரிய பொறுப்பு ஆசிரியரையே சாரும்.

இன்று தனி ஒரு மாணவர் வீட்டில் இருந்தபடியே கற்றல் Online learning என்ற போக்கு விரிவடைந்து செல்கின்ற போதும் பாரம்பரிய வகுப்பறைக் கோட்பாட்டை முற்றிலும் முறியடித்து வெளியே வரமுடியாத நிலையே உள்ளது. ஏனெனில், அதற்கு காரணம் கல்விக்கான செலவீடுகள் அரசு மட்டத்தில் செய்யப்பட்டு அதன் பயனாளிகளான மாணவர்களுக்கு இலவசமாக கிடைக்கப் பெறுவதே.இதனால் தான் ஒழுக்கத்தை மீறும் போது மாணவர்கள் தானும் பாதிக்கப்பட்டு மற்றையவர்களையும் பாதிப்புக்குள்ளாக்கி தன்னைச் சார்ந்துள்ள அதிகம் எதிர்பார்க்கும் சமூக எதிர்பார்க்கையின் விளைவின் மீது பாதிப்புக்களை உண்டு பண்ணுவதலாகும்.

வகுப்பறையில் அவ்வப்போது எழும் ஒழுக்கம் சம்மந்தமான பிரச்சினைகளை கையாள்வதற்கான வழிமுறைகள் வருமாறு:-

1) பாடத்தில் எப்போதும் ஆசிரியர் உயர்ந்த அறிவு வாண்மை உடையவராக இருத்தல் வேண்டும்.அவ்வாறு இருக்கும் ஆசிரியர் வகுப்பறை ஒழுங்கில் சிக்கல்களை எதிர்நோக்குவதில்லை.மாறாக குறித்த பாடம் தொடர்பான சிறப்பான அறிவு வாண்மை இல்லாதிருக்கும் போது மாணவன் அவற்றை இனங்கண்டு கொள்வானாயின் ஆசிரியரால் வகுப்பறை ஒழுக்கத்தை ஏற்படுத்துவது கடினமானது.எனவே தான் ஆசிரியர் மிகையாக எந்நேரமும் கற்றுக்கொண்டிருப்பவராக அறிவினை இற்றைப்படுத்துபவராக இருக்க வேண்டியது அவசியம்.

2) வகுப்பறையில் பாடத்தை தொடங்கும் ஆசிரியர் எப்போதும் உடன்பாடான மனப்பாங்குடனும் உயர்ந்த எதிர்பார்க்கை களுடனும் அவற்றை மேற்கொள்ள வேண்டும்.மாறாக மறையான சிந்தனைகளுடனும் மனப்பாங்குடனும் ஆசிரியர் செயற்படுவாரானால் கற்பித்தலின் நோக்கம் சிதைவடைந்து அதன் பயனுறுதித் தன்மையின் தரத்துக்கு பாதிப்பினை உண்டு பண்ணி விடும்.

3) வகுப்பறையில் எழுகின்ற ஒழுக்கம் சம்மந்தமான பிரச்சினைகள் வரும் போது ஆசிரியர் தனது மதிநுட்பத்தினை பயன்படுத்தி இலகுவாக தீர்த்துவிட்டு பாடஏற்பாடுகளுக்கு விரைவாக சென்று விட வேண்டும்.இல்லாவிடின் பிரச்சினை தொடர்பான தேவையற்ற விவாதங்கள் வரையறுக்கப்பட்ட நேரத்தை வீணே கழிக்க வைத்துவிடும்.

4) வகுப்பறையில் எழுகின்ற ஒழுக்காற்றுப் பிரச்சினைகளுக்கு ஆசிரியரும் காரணமாகி விடுகின்றார். அதாவது முறையான திட்டமிடலுடனும், உரிய கற்பித்தல் சாதனங்களுடனும் நேரத்திட்டமிடலுடனும், வகுப்பறைக்கு செல்லும் ஆசிரியர் எப்போதும் வினைத்திறனான கற்பித்தலை வெற்றிகரமாக நிறைவேற்றி உற்சாகமாக அடுத்தநாள் பாட ஏற்பாடுகளுக்கு தயாராகிவிடுகிறார். இதன் மறுபுறமும் உண்மையே அதாவது மேற்போர்ந்த அம்சங்கள் மாறுபடும் போது முறையாகப் பதப்படுத்தப்படாத உணவுகளை உண்ணும் நிலை ஏற்படுவதைப் போன்றதே.

5) சில ஆசிரியர்கள் இன்னும் கூட தொடர்ந்து 40 நிமிடங்களுக்கு விரிவுரையாற்றிவிட்டு இறுதியில் வகுப்பறையை விட்டு செல்லும் போது மாணவர்களின் கல்வி மட்டம் எவ்வளவு தூரம் வரை இருக்கும் என்பது இன்று கல்வியியலாளர்களால் பெரிதும் குறிப்பிடப்படும் முக்கிய அம்சம்.இத்தகைய ஆசிரியரின் கற்பித்தல் பாணியைப் புரிந்து கொண்ட மாணவர்கள் அடுத்த முறை அந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழையும் போதே "இவர் இப்படித்தான்" என்ற முத்திரையைக் குத்தி வகுப்பறைக் குழப்பத்துக்கு காரணமாகி விடுகின்றனர். உண்மையில் இத்தகைய பிரச்சினை ஏற்பட யார் காரணம் என்பது தெரிந்த விடயம்.

6) பாட ஆரம்பத்தின் போதே வகுப்பறைக் கவிநிலை எவ்வாறு என்று ஆசிரியர் அவதானித்து அதற்கேற்ப செயற்படவேண்டும். பிரச்சினைகளுக்கான ஏதுநிலைகள் உருவாகியுள்ளதென ஆசிரியர் அவதானித்து உணர்ந்தால் முதலில் அவற்றுக்கு தீர்வு கண்டுவிட வேண்டும். இல்லாவிடின் ஒத்திப்போடுதல் கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும் அவை மாணவர்களால் மறக்கப்படும் நிலை உருவாகி பிரச்சினைக்கான கோலம் புள்ளியாகி மறைந்து விடும்.

7) வகுப்பறையில் ஒழுக்கப் பிறழ்வுக்கான தண்டனைகளை வரன்முறைப்படுத்தி மாணவர்களுக்கு தெரியப்படுத்துவதனூடாக முன்கூட்டியே மாணவர் தமது தவறுக்கான தண்டனைகளை தெரிந்து வைத்திருப்பதால் பிரச்சினைகள் தவிர்க்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது.

8) வகுப்பறையில் குழப்பத்தில் ஈடுபடும் மாணவனை எச்சரிக்கை செய்தல் அதிலும் அவர் செவிமடுக்காத போது வகுப்பறைக்கு வெளியே நிற்க வைத்தல் பிரச்சினை தீர்க்கும் இன்னொரு உபாயம்.வெளியே அவனை நிற்க வைப்பதன் நோக்கம் அவனது கற்றல் சந்தர்ப்பத்தை அவனுக்கு வழங்குவதில் இருந்து ஆசிரியர் விலகக் கூடாது என்பதற்கேயாகும்.

9) ஆசிரியர் திசை திருப்பு உத்தியைக் கையாள்வதன் மூலமும் ஒழுக்காற்றுப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் அதாவது நகைச்சுவையாக கூறுதல் கதைகளை கூறி மாணவனைப் பாடத்தில் ஈடுபடுத்தல் போன்றன.

10) பிள்ளைகளைக் கேலிசெய்தலை ஆசிரியர் முற்றாகத் தவிர்க்க வேண்டும். உளவியலாளர்கள் இக்கருத்தினை பெருமளவு வலியுறுத்துகின்றனர். அதாவது ஒழுக்கத்தை நிலைநாட்ட முற்படும் ஆசிரியரே அதற்கு மாறாக நடக்கும் இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஒரு குழப்ப நிலையைத் தீர்த்து வைத்த பின்னர் அதனுடன் தொடர்புடைய மாணவர்களை வெறுப்புடன் நோக்குவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

11) வருட ஆரம்பத்தில் கண்டிப்புடனும் இறுக்கமான நேரமுகாமையடனும்,முறையான ஆவணப் பதிவேடுகளுடனும், உரிய கற்பித்தல் உபகரணங்களுடனும் கற்பிக்க தொடங்கும் போது மாணவர் வருடம் முழுவதும் அதேமாதிரியான எண்ணப்பாங்குடன் கற்றலை இலகுவாக்கி வெற்றிகரமாக அதனை மேற்கொண்டு உச்சப் பெறுபெற்றினை அடைய முடியும்.

எனவே வகுப்பறை என்பது ஒழுக்கமும், கட்டுப்பாடும் இருக்கும்போதே உயர்ந்த பட்ச பெறுபெறு தரரீதியாகவும், பண்பு ரீதியாகவும் அடையப்படும் என்பதால். ஆதனை செம்மையாக நிறைவேற்றுவது ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது.

# பாடசாலையில் பாட இணைச்செயற்பாடு



திருமதி.ரூ.ஜெ.யோகநாதன்,
ஆசிரியர்.
யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை.

இந்த உலகில் பிறந்த ஒரு பிள்ளை இவ்வுலகைப் பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் அவசியம்.அத்தோடு சிறந்த நற்பிரஜையாக திறமை, தன்னம்பிக்கை, அழகியல் உணர்வு, உடையவராக இருத்தல் சிறப்பானதாகும்.மேலும் நாம் விரும்புவது நல்லொழுக்கமுள்ளவராகவும் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனையை தீர்த்துக் கொள்ளக்கூடியவராகவும் சமூகத்தோடு பொருத்தப்பாடுடையவராகவும் வளச்சியடைவதற்கேற்ற கல்வியை அளிக்கவே.இதற்கு பாடசாலை என்னும் சமூகநிறுவனத்தை உருவாக்கி இதனூடாக பிள்ளைகளின் இன்றியமையாத செயற்பாடாகிய கற்றல் நிகழ்வு வழங்கப்படுகின்றது.இக்கற்றல் நிகழ்வானது இரு செயற்பாடுகளின் ஊடாக பாடசாலையில் வழங்கப்படுகின்றது. அதாவது

1. பாடச்செயற்பாடுகள்
2. பாட இணைச்செயற்பாடுகள்

பாடசாலையில் பாட இணைச்செயற்பாடு களில் பின்வருவனவற்றை கூறலாம்

1. விளையாட்டும் உடற்பயிற்சியும்
2. சமய சமூக விழாக்கள்
3. பொருட்காட்சி
4. சுற்றுலா
5. சாரணியம்

பாடசாலையில் உடற்பயிற்சியும்மூலம் சீரான குருதியோட்டம்,சீராக இயங்கும் சமிபாட்டுத்தொகுதி,சுவாசத்தொகுதி, நரம்புத் தொழிற்பாடு, மூளையின் இயக்கம், போன்ற பல்வேறு சாதகமான அழகான உடற்கட்டை பெறுவதற்கும், மேலும் உடற்பயிற்சி விளையாட்டுக்கள் மூலம் ஒத்திசைவு, நேர்மை, தலைமை தாங்கல், துணிவு போன்ற சீரிய மனித பண்புகளைப் பெற்று சமூகப் பொருத்தப்பாட்டை அடையவும் வழிவகுக்கலாம்.

மனிதனின் மன உணர்வை வெளிப்படுத்தும் சாதனம் கலை எனலாம்.கலை கலைக்கானது அன்று.அது சமயத்துக்கானது.சமயத்திற்கான சடங்காசாரத்தை பறைசாற்றி நிற்பது.ஆகவே பாடசாலைகளில் சமய சமூக விழாக்கள் நடத்துவதன் மூலம் மாணவர்கள் மன உணர்வுகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொணர முடியும்.அத்துடன் பல சமய மாணவர்கள் சமய விழாக்களில் பங்கேற்பதன் மூலம் மற்றைய சமயங்களை மதிக்கும் மனப்பாங்கையும் வளர்க்க முடியும்.

பொருட்காட்சிகள் வைப்பதன் மூலம் தான் கற்ற பாடங்களை மனப்பாடம் செய்து பரீட்சையில் சித்தியடைந்தால் போதும்.என்ற நிலை மாறி கற்கின்ற பாடங்களை ஆராய்ந்து அந்த பாடவிதானம் மூலம் செய்து முடிக்கக் கூடிய செயற்பாட்டினை செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.சுற்றுலா

அனுபவங்களினூடாக சில விடயங்களை மாணவர்கள் மறக்க முடியாது பெற்றுக் கொள்கின்றனர்.பல்வேறு சமூகச் சூழலில் நேரடி அனுபவங்களைப் பெறுகின்றனர்.

மாணவப் பருவத்திலேயே சமுதாயப் பொருத்தப்பாடுள்ள சிறந்த வாழ்க்கை முறையை சாரணீயம் பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.இதனால் சாரணீயம் கல்வித்துறை சார்ந்த உலகளாவிய இயக்கமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சேவைமனப்பான்மை, ஒற்றுமை, குழுவுணர்வு, தலைமைத்துவப்பண்பு, கீழ்ப்பணிவு, சகிப்புத்தன்மை, முதலுதவி, நுண்ணறிவு, கலைத்திறன்கள், போன்ற சமுதாயவாழ்விற்கு அவசியமான பண்புகளை எல்லாம் சாரணியம் வழங்குகின்றது.

அத்தோடு இணைப்பாடவிதானம் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கின்றது என்ற தவறான அபிப்பிராயம் பெற்றோர்கள் மத்தியில் நிலவுகின்றது.இது முற்றிலும் தவறானது.இச்செயற்பாடுகள் தொடர்பாக சில போட்டிகள் பாடசாலை,கோட்டம், வலயம்,மாவட்டம், மாகாணம்,தேசியம் என்ற அடிப்படையில் நடத்தப்படுகின்றன.இதில் பங்குபற்றும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களுக்கு பின் பெரிதும் உதவுகின்றது. தேசிய ரீதியில் பங்குபற்றி சான்றிதழ் பெற்ற சிலர் வெட்டுப்புள்ளி சற்று குறைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாத போது அச்சான்றிதழின் புள்ளி அவர்களுக்கு உதவுகின்றது. இத்தவறான அபிப்பிராயம் பெற்றோர் மத்தியில் இருந்து அகலவேண்டும்.

எனவே பாடச்செயற்பாடுகளில் மட்டுமன்றி பாட இணைச்செயற்பாடுகளிலும் இணைந்து செயற்பட்டு எல்லா அனுபவங்களையும் அறிந்து சமுதாய இசைவாக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

*அறிந்துகொள்ளுங்கள் :*

| All the Prime Numbers between 1 and 1,000<br>1க்கும் 1000க்கும் இடைப்பட்ட முதன்மையெண்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 5 | 7 | 11 | 13 | 17 | 19 | 23 | 29 |
| 31 | 37 | 41 | 43 | 47 | 53 | 59 | 61 | 67 | 71 |
| 73 | 79 | 83 | 89 | 97 | 101 | 103 | 107 | 109 | 113 |
| 127 | 131 | 137 | 139 | 149 | 151 | 157 | 163 | 167 | 173 |
| 179 | 181 | 191 | 193 | 197 | 199 | 211 | 223 | 227 | 229 |
| 233 | 239 | 241 | 251 | 257 | 263 | 269 | 271 | 277 | 281 |
| 283 | 293 | 307 | 311 | 313 | 317 | 331 | 337 | 347 | 349 |
| 353 | 359 | 367 | 373 | 379 | 383 | 389 | 397 | 401 | 409 |
| 419 | 421 | 431 | 433 | 439 | 443 | 449 | 457 | 461 | 463 |
| 467 | 479 | 487 | 491 | 499 | 503 | 509 | 521 | 523 | 541 |
| 547 | 557 | 563 | 569 | 571 | 577 | 587 | 593 | 599 | 601 |
| 607 | 613 | 617 | 619 | 631 | 641 | 643 | 647 | 653 | 659 |
| 661 | 673 | 677 | 683 | 691 | 701 | 709 | 719 | 727 | 733 |
| 739 | 743 | 751 | 757 | 761 | 769 | 773 | 787 | 797 | 809 |
| 811 | 821 | 823 | 827 | 829 | 839 | 853 | 857 | 859 | 863 |
| 877 | 881 | 883 | 887 | 907 | 911 | 919 | 929 | 937 | 941 |
| 947 | 953 | 967 | 971 | 977 | 983 | 991 | 997 | | |

# இன்றைய கல்விப் போக்கும் பாடசாலையும்.



திரு.மகேசு.பங்கயன்
ஆசிரியர்
யா/தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை.
பருத்தித்துறை.

பல குடும்பங்கள் சந்திக்கும் களம் சமூகம் என்கின்றோம்.சமூகம் ஆனது பல கலவைகளின் சேர்க்கை. அது அரசியல், கலை, கல்வி,விஞ்ஞான, சமய,கலாச்சார,பரினாமங்களை கொண்ட ஓர் வட்டம் எனலாம்.காலம் என்பது "கறங்கு போல் சுழன்று மேலது கீழதாய், கீழது மேலதாய் மாறிடும் தோற்றம்" என சுந்தரம்பிள்ளை விளக்கம் கொடுக்கின்றார்.எனவே கால மாற்றத்திற்கு சமூகம் உட்படும் போது பல மாறுதல்களை சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்னே தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என மார்தட்டுகிறோம்.பார் போற்றுகிறோம். "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" எனும் பாரதியின் பாடலை சிந்தையில் இருத்துகிறோம்.இத்தகைய சமூகத்தின் அடிதாரமாக விளங்குவது கல்வி, கல்வியை கற்காதவன் புவியிலே வாழ தகுதியில்லாதவன் ஆக மாறிவிடுகிறான்.இதனையே வள்ளுவரும்

"கண் உடையார் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண் உடையார் கல்லாதவர்"

என்ற குறட்பாவினால் விளக்கியிருக்கின்றார்.

எனவே இன்றைய கல்விப் போக்கும் பாடசாலையும் புதிய மாணவ தலைமுறையை எவ்வாறு விளக்கப்போகிறது என்பதை சற்று மேல் எழுந்தவாரியாக ஆராய்கிறது இக்கட்டுரை.

இலங்கை பல வரலாற்று மாறுதல்களை கண்டு அபிவிருத்தி அடைந்து வரும் நிலையிலுள்ளது.அவ்வாறான மாறுதல்களை கல்விப்புலமும் எதிர்கொண்டது என்பதில் வியப்பில்லை. இலங்கைக்கு வந்த அந்நிய ஆட்சியாளரால் நாடு காவு கொள்ளப்பட்டு இருந்த போது அவர்களின் ஆட்சியிலே கல்வி முறை மாற்றம் கண்டது.குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பின் ஆங்கிலேயர், கல்வி மரபு,அதற்கு முன் குருகுலக்கல்வி மரபு அல்லது திண்ணைக்கல்வி முறை என வளர்ந்த கல்விச் சமுதாயம் இன்று பாடசாலை எனும் நிறுவன அமைப்பை உயிர்நாடியாகக் கொண்டு பரிணமிக்கிறது. "கல்விச்சாலைகள் ஆயிரம் வைப்போம்,ஆங்கோர் ஏழைக்கு" எழுத்தறிவித்தல் என்ற பாரதியின் சிந்தனை. இங்கு வலுப்பெறுகின்றது.நாம் வாழும் சூழலுக்கு ஏற்ப பாடசாலையும் வகைப்படுத்தப்படுகிறது.அது

1. கிராமியப் பாடசாலை
2. நகர்ப்புற பாடசாலை.
3. பின் தங்கிய நிலையிலுள்ள பாடசாலை.

எமது நாட்டின் பாடசாலைகள் சிறுவர்களையும் இளைஞர்களையும் சமூகமயப்படுத்தும் முறை சார்ந்த நிறுவனங்களாக முக்கியத்துவம் பெற்று வளர்கின்றன.மனிதன் தான் வாழும் பௌதீக சூழலுக்கு ஏற்ப சமூக சமநிலை வளர்ச்சி மதிப்பிடப்படுகின்றது.மனித சூழலியல் இது பற்றி ஆராய்கின்றது.

ஆங்கில மொழிக்கற்பித்தல் கற்றல் முறைகளிலே வளர்ந்த கல்விச் சமுதாயம் பின் தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தது.இத் தாய்மொழிக் கல்வியிலே கற்று பட்டம் பெற்றவர்கள் ஏராளம்.இப்போது பாடசாலைகளில் இருமொழிக்கற்றல் செயற்பாடு துரிதமாக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.தமிழ் மாணவர்கள் சிங்கள

மொழியையும், சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியையும் கற்கும் நிலை உருவாகியிருக்கின்றது. இதற்கு சவாலாக முகம் கொடுப்பவர்களாக பள்ளி ஆசிரியர்களே தம்மை தயார் நிலைக்கு உட்படுத்த வேண்டும்.

இந்நிலையில் நான்கு பெரும் புரட்சிகரமான மாற்றங்களை கல்விமுறையானது கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளது.

முதற் புரட்சி கல்விக்கென பாடசாலை எனும் சமூக அமைப்பு ஏற்படுத்தப்பட்டு பெற்றோர்களிடமிருந்து ஆசிரியர்களுக்கு மாற்றப்பட்டது.

இரண்டாம் புரட்சி வாய்மொழி மூலமாக வழங்கப்பட்டு வந்த கல்வி வாய்மொழியுடன் எழுத்தும் வகுப்பறைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

மூன்றாம் புரட்சி அச்சியந்திரத்தின் மூலம் அச்சுக்கலைத் தோற்றத்தோடு அச்சடிக்கப்பட்ட பாடநூல் முறைமை கல்வியில் புகுத்தப்பட்டது.

நான்காம் புரட்சி மின் இலத்திரனியல் சாதனங்கள் வியத்தகு வளர்ச்சியால் பாடசாலைகளில் பல்வேறு நுண்முறைகளும் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன.இது கல்வியில் தொழில்நுட்பம் என அழைக்கப்படும். கல்வி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் சகல தொழில்நுட்ப உபகரணங்களையும் ஊடகங்களையும் இது குறித்து நிற்கின்றது.

இத்தகைய முறைமைகளால் நகர்ப்பற பாடசாலைகள் பெரிதும் வளர்ச்சி கண்டும் ஏனைய கிராமப்புற பாடசாலைகள் மந்தநிலையில் காணப்படுவதும் கண்கூடு.நகர்ப்புற பிரதேச மக்கள் செல்வந்தர்களாகவும், கிராமப்புற பிரதேச மக்கள் தங்கள் தொழில்நிலைகளிலே கவனஞ் செலுத்துவதும் பாரம்பரிய தமது பிள்ளைகளிடம் அதனை கையளிக்க தயாராக இருப்பதும் கல்விப்புல பெறுபேறு வீழ்ச்சிக்கும் அடிக்கல்லாகிறது. மேலும் கிராமியப் பாடசாலைகளில் கற்ற வர்க்கத்தினர் இன்று உயர் அதிகாரிகளாக விளங்குவதும் நாம் காண்கின்ற ஒன்று.கிராமப்பிரதேச மாணவர் நகர்ப்புறத்திற்கு இடம்பெயர்வதும், அப்பாடசாலையில் கல்வி கற்று பெறுபேற்றை உயர்த்தவும் முயற்சிசெய்வதையும், இன்றைய கல்விச்சூழலில் நாம் காண முடிகின்றது.

கல்வி அமைச்சு, மாகாணக்கல்விச் சபை, வலயக்கல்வி அலுவலகம், கோட்டக்கல்வி அலுவலகம், அதிபர் அலுவலகம், என்பன ஆசிரியர்களுக்கு போகும் கட்டளைகள் அழுத்தங்கள் என்பன சில வேளைகளில் ஆசிரியரை துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச் செல்கின்றது எனலாம்.

இன்றைய கற்பித்தல் உத்திகள்,5E முறை, 5S முறை, கணிப்பீட்டு முறை, என்பன எல்லாப்பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர்களால் முழுமையாக செம்மைப்படுத்தப்பட்டாலும் மாணவரின் கல்விப் பரீட்சைப் பெறுபேறு சிலவேளைகளில் தோல்வியைத் தந்துவிடுவதும் உண்டு.அத்தகைய தோல்விகளை வகுப்பறை ஆசிரியர்களே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவும் அமைந்து விடுகின்றனர்.

எனவே இன்றைய கல்விப் போக்கும் பாடசாலைக் கல்வியும் மாணவனை அத்தோடு வகுப்பறை ஆசிரியரையும் புடம் போடுகின்றன என்பதில் வியப்பில்லை.இவ்வெற்றி பெற்றால் நம்நாடு வெற்றிநடை போடும் என்பதும் கல்வியியலாளர்கள் வெற்றிபெறுவர் என்பதும் திண்ணமாகின்றது.

எண்ணுவது உயர்வு


உசாத்துணை நூல்கள்

1. தேசிய கல்வியியற் கல்லூரி – கபுலத்தை வென்ற கமலம்
2. பாடசாலையும் சமூகமும் - மா.சின்னத்தம்பி.

# கல்விநிலை



திருமதி.சந்திரகுமாரி-ஸ்ரீசந்திரராஜா
பழைய மாணவி
ஆசிரியர்
யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.

மனித மேம்பாட்டிற்கு கல்வி மிக அவசியமானது.இக்கல்வியானது தான் செயற்படும் பிரதேசம் அதன் பின்னணி தேவைகள் அங்கு நோக்கப்படும் அறை கூவல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் வளர்ச்சி அடைகின்றது. கல்வியில் பெற்றோர் ஆசிரியர் தொடர்பு முக்கியமானது.

பாடசாலைகள் இன்று பண்புசார் விருத்தியையும் வளர்க்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டுப் பொறுப்பினை ஏற்கும் திறன் பிறரை மதித்தல், பிறருடன் கருத்துப் பரிமாற்றம், குழுவாக இயங்குவதில் உள்ள ஆர்வம், வேலைகளை சுயமாகவே ஆரம்பித்தல், போன்றன.கல்வியின் பணி ஆளுமையின் பல்வேறு கூறுகளாக உடல்,அறிவு திறன்கள், அழகுணர்ச்சி,நல்லொழுக்கம்,சமூக இயல்பு ஆகிய யாவும் இணைந்து வளர்ச்சி பெற வாய்பளிப்பதாகும்.

முன் ஆரம்பக்கல்வி பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது.இங்கு வாசிப்பு எழுத்து, பேச்சு,எண்கோள்கள்,அழகியற்கலை,உடற்பயிற்சி, போன்றன பிள்ளைகளுக்கு அளிக்கப்படுவதால் அவர்கள் அறிவு வளர்ச்சியும் உடற்றிறன் வளர்ச்சியும் பெறுகின்றனர்.ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞானப் பண்பாட்டுக்கழகம் 1980 இல் கல்வி உத்திகளில் பிரதான குறிக்கோள்கள் பற்றிக் குறிப்பிடுகையில் பள்ளி முன் வயதுக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியானது முக்கிய இடத்தை பெறவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

கல்வி மூலம் அறிவுள்ள ஒற்றுமையான கூட்டுறவுச் சமுதாயம் அமைக்க முடியும்.கல்வியியல் ஆய்வாளர் றொபேட் ஓவன் வறுமை மனிதன் செய்த பாவங்களால் தான் அனுபவிக்கின்றான் என்று சமயம் தரும் விளக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.சிறுவயதில் குழந்தைகளுக்கு கல்வி முறைப்படி புகுத்தப்பட வேண்டும் என்றார்.

கற்கும் சமூகமும் ஆயட்கால கல்வியும் வளர்ச்சி அடைந்து வருவதால் சுய கற்றல் என்பது முக்கியமாகின்றது.சுயகற்றலை வளர்ப்பதன் மூலம் சுயமாக சிந்திக்க எழுத செயற்பட மாணவனால் முடிகிறது.சுயகற்றல் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகிறது.

பாடசாலைக் கல்வியுடன் முறைசாராக் கல்வியையும் மாணவன் பெறுகின்ற போது கூடிய பயனை அடைகின்றான்.உதாரணமாக தொழில் அமைச்சு வழங்கும் மேசன் பயிற்சி , தச்சுவேலைப்பயிற்சி, மற்றும் போக்குவரத்து அமைச்சு வழங்கும் சாரதிகள் பயிற்சி என வகைப்படுத்தலாம்.

கல்வியில் ஆசிரியர் மாணவர் தொடர்பு தற்காலத்தில் மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது.பாடசாலைகளில் குழு உணர்வை பிள்ளைப்பருவத்திலேயே வளர்த்து பயன்பெற வேண்டும் என்ற கல்வியியலாளர் பிஜஜேயின் கருத்து முக்கியமாகின்றது.விளையாட்டுக் குழுக்கள் மாணவரிடையே கூட்டார்வத்தை உண்டு பண்ணுகின்றன.உதாரணமாக இல்ல விளையாட்டுக்களை குறிப்பிடலாம்.

தற்போது கல்வி வளர்ச்சிக்கு தூண்டு கோலாக அரச வங்கிகளின் செயற்பாடு போற்றத்தக்கதொன்றாகும்.புலமைப்பரிசில் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு பரிசுகள் மட்டுமன்றி கல்வியைத் தொடர அந்த மாணவனுக்கு கட்னுதவியும் வழங்கப்படுகின்றது. இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மத்திய வங்கி, செலிங்கோ, □ற்றன் நசினல் வங்கி போன்ற இன்னும் பல வகைகளாகும்.

# வாசிப்பின் மகத்துவம்.



திருமதி.எ.அ.சாள்ஸ்
ஆசிரியை
யா/புனித சாள்ஸ் ம.வி.
யாழ்ப்பாணம்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற கூற்றின் மூலம் வாசிப்பின் அவசியமும் அதன் மகத்துவமும் உணரப்படுகின்றது. மனிதன் தனது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு வாசிப்பு மிகவும் வேண்டப்படுகின்றது. அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு பல வழிகள் இருந்த போதிலும் அவற்றுள்ளே மிகவும் சிறந்தது நூல்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவாகும்.நூல்களைத் தேடி வாசிப்பதன் மூலம் இது சாத்தியமாகும்.

மனித வாழ்வில் மிகவும் இனிமையான பருவம் மாணவப்பருவமாகும்.இனிமையான இந்த இளம் பருவத்தில் மாணவர் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மாணவரது மொழியறிவு விருத்தியடையும். கற்கும் பாடங்களிலும் சிறந்த பெறுபேற்றை பெற முடியும்.


இன்று பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், பெரிய நகரங்கள், போன்றவற்றில் நூலகங்கள் பல உண்டு. அத்துடன் இன்று மாணவர் பரீட்சைக்குத் தயார் செய்வதற்காக மேலதிக குறிப்புகள் பெற நூலகங்களை நாடிச்செல்ல வேண்டிய தேவை உண்டு.எனவே மாணவர் நூலகங்களை நாடிச் சென்று நூல்களை வாசிப்பதன் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

நூல்களை வாசிக்கும் பழக்கம் இருப்பதால் எமக்குப் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. எமது நாட்டுச் செய்திகள் உலகின் பல்வேறு இடங்களிலும் நிகழும் பல்வேறு விடயங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடியும்.அது மட்டுமன்றி அதற்கேற்ப எமது வாழ்வையும் அமைத்துக் கொள்ளலாம்.வாசிக்கும் நல்ல விடயங்களை மனதில் பதித்துக் கொள்ளலாம்.எமது வாழ்வையும் மகிழ்ச்சிகரமாக்கலாம். இவ்வாறு நல்ல நூல்களை தேடி வாசிப்பதன் மூலம் வாசிப்பின் மகத்துவத்தை உணரலாம்.மாணவர் மாத்திரமல்ல பெரியவர்களும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் பல நன்மைகளை பெற முடியும்.

ஆனால் இன்று மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது.வீடுகளில் தொலைக்காட்சி பார்ப்பதில் அதிகளவு நேரத்தை செலவிடுவதால் வாசிப்பு பழக்கம் அருகி வருகின்றது. பெற்றோர் ஆசிரியர் பெருந்துணையாக இருந்து மாணவரது வாசிப்புப் பழக்கத்தை அதன் முக்கியத்துவத்தை மகத்துவத்தை உணர்த்துவதன் மூலம் இதனைச் சீர்பெறச் செய்யலாம்.

எனவே மாணவருக்கு வாசிப்பு மிகவும் அவசியமானதும் வேண்டியதாகவும் காணப்படுகின்றது. நூலகங்களை நாடிச்சென்று நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் அறிவை விருத்தி செய்யலாம்.அதன் மகத்துவத்தையும் உணர்ந்து கொள்ளலாம்.

# கலாச்சார விழுமியங்களில் பெண்கள்.



ஜெ.டயானா
மாணவி,
3ம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்று பெண்கள் பிறப்பையே பெரும் பேறாக கருதிப்பாடினார் தேசிக விநாயகம்பிள்ளை.ஆனால் நடைமுறையில் கூண்டுக்கிளியாகவே பெண் மீதான சமுதாயப் பார்வை காணப்படுகிறது. நீண்ட கால அடிமை வாழ்வில் சிக்குண்டு போயிருந்த சமூகத்திடம் வாழ்வியல் யதார்த்த நெறிமுறைகள் சிதைந்து போனது. இது தான் வழமை என்று சொல்லப்படுகின்ற வழக்காறுகளும் சம்பிரதாயங்களும் சடங்குகளும் மூட நம்பிக்கைகளும் போலித்தன்மைகளும் மலிந்து போய் உண்மைக்கான தேடல் அற்றுப் போனது. இதனால் கலாச்சார விழுமியங்கள் என்ற போர்வையில் அதன் கொடூரப்பிடியில் அகப்பட்டுத்திணற வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

இலங்கையில் தந்தை வழி சமூகம் எனக்கொள்ளப்படும் ஆண் முதன்மைச் சமூகமே பெண்களின் உரிமைகளை பாதிப்பதாக உள்ளது.இந்த தமிழ் கலாச்சார சமூக அமைப்பில் மதிப்பீட்டு வகையிலும் சரி சட்டரீதியாகவும் சரி ஆண்களை முதன்மைப்படுத்தும் தன்மையே காணப்பட்டது.இதில் நீதி, சமுதாயம், சட்டம், கல்வி, கலாசாரம், சமய நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், யாவும் ஆண் அதிகாரத்தை வலுப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.

இலக்கியங்களும், மதங்களும், பெண்ணைப் பெருமைப்படுத்துவது போல சிறுமைப்படுத்தின.பெண் விடுதலை பாடிய பாரதி கூட பெண் உணர்வு நிலைகளை புரிந்து கொள்ளவில்லை. "காதலன்" ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து" என்பதில் பெண் ஆணின் உதவியாளராய் வர்ணிக்கப்படுகின்றாள். "பாட்டுக்கலந்திடவே அங்கோர் பத்தினிப்பெண் வேண்டும்" என்பதும் பெண் ஆணின் அனுபோகப் பொருளாக பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களோடும், காணி நிலத்தோடும், கத்தும் குயிலோசையோடும் அனுபோகப்பொருட்களின் வரிசையில் சேர்க்கப்படுகிறாள். பெண்ணின் புற அழகைப்பாடிப்பாடி புலவன் சலிக்கவேயில்லை. இந்தப்பாடல் கலாச்சாரம் பெண்களின் தன்மானத்தை பறிப்பதாக உள்ளது.

ஒரு பெண் வாழ்நாள் முழுவதும் கணவனுக்கு அடிபணிந்து நடந்து அவன் தேவைகளை நிறைவு செய்து குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்குவது என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்கலாச்சார விழுமியம் பெண்களை பல்வேறு முனைகளிலிருந்தும் தாக்குகிறது.பெண்கள் தாயாவதற்கென்றே படைக்கப்பட்டவர்களென மனுநீதி சாஸ்திரம் கூறுவதும் பெண் உணர்வுகள் மழுங்கடிக்கப்படுவதையே கூறுகிறது.

வாழ்வியல் யதார்த்தங்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு பல்வேறுபட்ட முகங்களில் கலாச்சார விழுமியங்கள் பெண்ணினையும் அவர்களின் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்தி அறியாமை சமூகத்தை உருவாக்கியுள்ளது.ஒரு சமுதாயத்தின் கலாச்சாரம் அதன் முன்னேற்றம் என்பவற்றின் அளவுகோல் அச்சமுதாயம் பெண்களுக்கு அளிக்கும் மதிப்பை பொறுத்தே அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு கலாச்சார விழுமியங்களின் பிடியில் இருந்து பெண் சமுதாயம் விடுதலை நோக்கி தொடர்ந்து நகர்வது அவசியமாகும்.

# இயற்கை விவசாயம்.



செல்வி.இந்துஜா-தவகுலரட்னம்.
பழைய மாணவி.

இன்றிலிருந்து கிட்டத்தட்ட 10 000 ஆண்டுகளுக்கு முன் மனிதன் விவசாயத்தைக் கற்றுக் கொண்டான். ஆனால் இந்தக் காலப்பகுதியின் இறுதி 400 ஆண்டுகளுக்குள் மனிதனின் விவசாய முறைமை சடுதியாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. நவீன விவாயத்தில் விளைச்சலை அதிகரிக்க அள்ளிவீசப்பட்ட அசேதன இரசாயன உப்புக்களும்,பயிர்களைப் பாதிக்கும் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட சேதன, அசேதன பீடை கொல்லிகளும் தற்காலிகமாக நிலத்தில் விளைச்சலை அதிகரித்தன. ஆனால் விளைவாக இன்று அசேதன உப்புக்களால் செறிவூட்டப்பட்ட காய்கறிகளால் தொண்டைப் புற்றுநோய் போன்ற உயிர்கொல்லி நோய்கள் உருவாகின்றன. பூச்சி கொல்லிகள் பீடைகளை மட்டும் அழிக்காமல் மனிதன், ஆடு மாடுகளையும் சேர்த்து அழிக்கின்றன. விளைச்சல் நிலங்களில் சேரும் அசேதன உப்புக்களால் நிலம் பாழடைந்து பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்றதாக மாறுகிறது.

இவ்வாறு தற்காலிகமாய் பயன்தந்து இலாபத்தை அதிகரிக்கும் போதும் விவசாய நிலங்கள் பாழடைவதும், உணவு இரசாயன நச்சாக்கம் அடைவதும் மனிதனின் தற்போதைய சந்ததியை மட்டுமன்றி எதிர்கால சந்ததிகளை பாதிக்கக் கூடிய பிரச்சினை என்பதால் இதற்குத் தீர்வாக விஞ்ஞானிகள் முன்வைத்த புதிய விவசாய முறைமையே இயற்கை விவசாயமாகும்.

இயற்கை விவசாயமானது பாவனையாளர்களுக்கு பாதுகாப்பான உணவு வழங்கலை உறுதி செய்வதோடு, விவசாயிகளுக்கு போதிய இலாபமீட்டலையும் உறுதி செய்வதால் இது அனைவராலும் விரும்பப்படுகிறது.

இயற்கை விவசாயத்தில் அசேதன வளமாக்கிகள் செயற்கைப் பீடைகொல்லிகள் பயன்படுத்தப்படுவதில்லை. பயிர்ச்செய்கையின் ஆரம்பத்தில் இயற்கையான முறையில் பெறப்படும் உக்கல்கள் இலைதழைகள் போன்ற சேதன வளமாக்கிகள் மூலம் நிலமானது ஓரளவிற்கு மூடப்படும். இதன் போது சூரிய ஒளி நிலத்தின் மீது படுவது குறைவதுடன்,நிலத்துக்கான வளியூட்டலும் குறைகிறது. இதனால் நிலத்தில் காணப்படக்கூடிய பீடைகள் அழிவதுடன் பூச்சிகளின் குடம்பிகளும் அழிவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. சேதன வளமாக்கியின் பயன்பாட்டால் மண்ணில் உக்கலின் அளவு அதிகரிக்கிறது. நீர்முறையரிப்பு குறைவதால் கனியுப்புக்கள் கழுவிச்செல்லப்படுதல் குறைக்கப்பட்டு மண்ணில் கனியுப்புக்கள் தேக்கப்படுகின்றன.

இயற்கை விவசாயத்தில் மண்வளம் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்காக சுழற்சி முறைப்பயிர்செய்கை உதவுகின்றது. அதாவது ஒவ்வொரு காலத்துக்கும் வெவ்வேற இனப்பயிர்கள் ஒரே நிலத்தில் மாறிமாறிப் பயிரிடப்படும். ஒவ்வொரு இனத்தாவரமும் மண்ணிலிருந்து பெறும் போசனையின் அளவு, போசனைப் பொருள், வேர்கள், ஊடுருவும் விதம், ஆழம், என்பன வேறுபட்டவை என்பதால் மண்ணின் ஒரே பகுதியில் ஏற்படக்கூடிய செறிவான வள இழப்பு கட்டுப்படுத்தப்படுகிறது.

இங்கு பீடைகளின் கட்டுப்பாட்டுக்காக அக்குறித்த பீடைக்கு தற்சிறப்பான உயிரியல் எதிரி பயன்படுத்தப்படும். உதாரணமாக பெரும்பாலான வண்டினங்களுக்கான உயிரியற்பீடை கொல்லியாக அவற்றின் குடம்பிகளை உண்ணக்கூடிய ஒட்டுண்ணிப் பூச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. உயிரியல் முறைமையானது குறித்த பீடைக்கு தற்சிறப்பானது என்பதால் வேறு பயன்தரும் பூச்சியினங்களோ, உயிரினங்களோ பாதிக்கப்படுவது இல்லை. மேலும் அங்கு பயன்படுத்தப்படும் இனம் தொடர்ந்து அச்சூழலில் நிலை நிறுத்தப்படுவதால் தொடர்ச்சியாகவும் நிரந்தரமாகவும் பீடை கட்டுப்படுத்தப்படுகிறது.

இயற்கை விவசாயத்தில் தென்னை, இறப்பர் போன்ற பெருமரங்களின் செய்கைக்காக ஊடுபயிர்ச்செய்கை அறிவுறுத்தப்படுகிறது. ஊடுபயிர்ச்செய்கையில் ஒரே நேரத்தில் பலதரப்பட்ட பயிர் இனங்கள் பயிரிடப்படும். இலங்கையில் தென்னையுடன் அதிக வருமானத்தை தரக்கூடிய குறுங்கால வாசனைத்திரவியப் பயிர்கள் இம்முறையில் செய்கை பண்ணப்பட்டு அதிக வெற்றியளித்துள்ளன. ஊடு பயிர்ச்செய்கை முறையில் இன்னொரு இன்னொரு வகையாக பன்றி போன்ற பண்ணை விலங்குகள் விவசாய நிலத்தில் வளர்க்கப்படும் இதன்மூலம் தாவரம் கனிப்பொருள் வளத்தையும் விலங்கு உணவையும் பெறக்கூடியதாக இருக்கும். இம்முறை சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது. இயற்கை விவசாயத்தில் பயறின் விளைச்சலை அதிகரிப்பதற்காக பயிரினமானது பிறப்புரிமைத் தொழில்நுட்பத்தின் மூலம் மாற்றப்பட்டு அதன் தரம் கூட்டப்படுகிறது.

மேலும் மண்ணரிப்பைத் தடுப்பதற்காக விசேட தடுப்புப் பொறி முறைகளும் நீர் இழப்பைக் குறைப்பதற்காக தூவல்முறைத் தொழில்நுட்பங்களும் பயன்படுகின்றன.

இயற்கை விவசாயமானது சிறிய அளவில் சில ஐரோப்பிய விவசாய நாடுகளிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் சில நாடுகளிலும் ஆசியாவிலும் மேற்கொள்ளப்படுகிறது.

அனேகமான விவசாயிகள் அசேதன விவசாயத்தில் இருந்து இயற்கை விவசாயத்துக்கு மாற மறுப்பதற்கான ஒரே காரணம் இலாபம் மட்டுமே. எனவே பொறுப்புள்ள பாவனையாளர்கள் இயற்கை விவசாயம் மூலமான விளைபொருட்களை அதிகளவில் முன்னிலைப்படுத்தி கொள்வனவு செய்வதன் மூலமும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கமுடியும்.

# Virus



ஜெ.ஜனுசன்
பழைய மாணவன்

வைரசுக்கள் கல அமைப்புக்கள் அற்றவை.பருமனில் மிகவும் சிறியவையாக காணப்படுவதால் இவை அதிநுணுக்குக் காட்டியினூடாகவே பார்க்க முடியும். விதிவிலக்காக அம்மை வைரஸ் ஒளி நுணுக்குக் காட்டிக்குரியதாக உள்ளது. இதன் இரசாயனக் கட்டமைப்பு எளிமையானதாகவே காணப்படும்.

வைரஸ் ஆனது 1892 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலாக விஞ்ஞான ரீதியில் கண்டுபிடிக்கப்பட்ட வைரஸ் புகையிலைச் சித்திர வடிவ வைரஸ் ஆகும். பெரும்பாலான வைரசுகளை பளிங்காக்க முடியும்.அவ்வாறு வைரசுகளை முதன்முதலில் பளிங்காக்கியவர் Stanley ஆவார்.

ஒரு தனியான வைரசில் DNA உம் RNA உம் சேர்ந்து காணப்படுவதில்லை. DNA ஐ மட்டும் கொண்ட வைரசுக்கள்

Pox Virus
Hepatitise –B Virus
Herpessimplex Virus

RNA இனை மட்டும் கொண்ட வைரசுக்கள்

Influenza Virus
Tobacco mosaic Virus
Rabies Virus
Polio Virus
Rubella Virus
HIV (Human immunodeficiency Virus)

விதிவிலக்காக DNA,RNA இரண்டையும் கொண்ட வைரஸ் ஒன்காேனா வைரஸ்(Oncarno) எனப்படும்.

வைரசின் தொழிற்பாட்டினை Penicillin, Tetracycline போன்ற நுண்ணுயிர்க் கொல்லிகளைப் (Antibiotics) பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியாது.Bacteria உட்பட எல்லா உயிர்வாழ் அங்கிகளிலும் வாழக்கூடியவை. ஏனைய அங்கிகளைப் போன்று இனப்பெருக்கம் செய்யக் கூடியவை.ஆனால் தமக்கு சொந்தமான எந்த நொதியத்தையும் சுரப்பதில்லை.வளர்ச்சி, சுவாசம், அசைவு என்பன நடைபெறுவதில்லை.போசனையை உள்ளெடுக்கும் தூண்டலுக்குத் துலங்கல்களைக் காட்டும் தன்மை அற்றவை.

எனவே வைரசினை நாம் உயிருள்ள அங்கி என்றோ உயிரற்ற அங்கி என்றோ கண்டுபிடிப்பதில் இன்னும் தேர்ச்சி பெறவில்லை.

# சிறுவர் அரங்கு பற்றிய ஓர் சிறிய கண்ணோட்டம்.



ர.நிகாஷ்
பழைய மாணவன்
யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை.
1ம் வருட மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்.

இத்தலைப்பிலே நோக்குகின்ற போது சிறுவர்கள் என்பவர்கள் யார்? அரங்கு என்றால் யாது? என்ற வினாக்களுக்க பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது.அவ்வகையில் சிறுவர் என்பதற்கு பல்வேறு வயது ரீதியான வரைவிலக்கணங்கள் உண்டு.அவ்வகையில் நோக்கும் போது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுசார் விதியின்படி 18 வயதிற்கு உட்பட்டவர்களை சிறுவர் என வரையறுக்கின்றது.ஆயினும் உலகின் சில நாடுகள் தமது நோக்கிற்கு அமைவான சட்டங்களை கருத்திற் கொண்டு 18 எனவும், 15 எனவும், 12 எனவும், பல்வேறு வயதுப்பிரிவில் பார்க்கின்றனர். அரங்கு என்றால் என்ன? என்பதில் தெளிவு கண்டு அதன்பின் அரங்கியல் ரீதியாக யாரை சிறுவராக நாம் நோக்கலாம்.என்பது பற்றி பார்த்தல் நன்று.அரங்கு எனும் போது பல்வேறு அறிஞர்களும் பல்வேறு வரைவிலக்கணங்களை முன்வைக்கின்றனர். நாம் பொதுவான ஓர் எண்ணக்கருவினூடாக சிந்திக்கும் போது ஆற்றுவோர் பார்ப்போர் ஒன்று கூடும் களம் எனவும் கூறலாம் .இவ்வரங்கானது ஆற்றுகைத் தன்மையை பொறுத்து எவ்வகையான அரங்கு எனப் பெயர்பெறும். ஓர் அரங்கானது சிறுவர்களுக்குரியதாக அமைதல் வேண்டும் என நோக்கும் போது நாம் ஆரம்பப்பள்ளி பருவத்தில் உள்ளடக்கப்படுகின்ற 12 வயதிற்கு உட்பட்டவர்களை சிறுவர் அரங்கிற்கு உரியவர்களாக நோக்குகின்றோம்.

இச்சிறுவர் அரங்கின் பிரதான நோக்கம் சிறுவர்களை பார்வையாளர்களாக கொண்டமைந்த வெளிப்பாடாகும். இது சிறுவர்களின் உளப்பக்குவத்திற்கும், உடல் பக்குவத்திற்கும், ஏற்ற கருக்களைக் கொண்டு அமைதல் வேண்டும்.அதுவும் சிறுவர்களின் அனுபவத்திற்கு உட்பட்ட சிந்தனையின் கற்பனையையும் ஆழப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்பர். சிறுவர் அரங்கு பற்றி ஈழத்து சிறவர் நாடக வரலாற்றில் அழியாத்தடம் பதித்த குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். சிறுவர் நாடகம் என்பது சிறுவர்களின் உடல் உள ரீதியான வளர்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் ஏற்றதாக அமைதல் வேண்டும் இக்கூற்றானது எந்தவொரு சிறுவர் அரங்க நிகழ்விலும் கவனத்திற் கொண்டு செயற்படுத்த வேண்டியதே. பொதுவாக சிறுவர்கள் சுதந்திரமாகவும், தளர்வாகவும் மகிழ்வாகவும் இருக்க விரும்புவர். எனவே இவ்வரங்கில் ஆடல்,பாடல்,விளையாட்டு, வினோதங்கள் என்பன முக்கியம் பெறுகின்றன.சிறுவர்களது உலகம் என்பது மிகவும் புனிதமான உண்மைத் தன்மை வாய்ந்த உலகமாகும்.எனவே அவ்வுலகில் பதியப்படும் முதற்பதிவுகள் அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்பதாக அமைதல் வேண்டும். எந்தவொரு ஆற்றுகையும் அவர்களை எவ்வகையிலும் துன்புறுத்தவோ அதிக பழுவைச் சுமப்பதாகவோ அமையக்கூடாது.

சிறுவர் அரங்கிற்கான எழுத்துரு பற்றி நோக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற மொழி நடைகள் இலகுவானதாகவும், அறிவியல் ரீதியானதாகவும், அவர்களுடைய அனுபவத்திற்குட்பட்டவையாகவும்

அமைதல் அவசியம். குறியீட்டுப் பிரயோகங்களோ கடின மொழி கையாள்கையோ பயன்படுத்துவதை தவிர்த்தல் ஆரோக்கியமானதொன்று. பாடல்களைப் பொறுத்த வரையில் ஆடல் தன்மைக்கேற்ற துள்ளிசை சார்ந்த வெளிப்பாடாக இருத்தல் சிறுவர்களை அரங்கிற்குள் கட்டுண்டு வைப்பதற்கு ஏதுவானதாக அமையும். ஆடல் அவர்களது உடல் ரீதியான வளர்ச்சிக்கேற்ற அசைவுகளை கொண்டிருத்தல் வேண்டும்.ஒழுங்கற்ற அசைவுகள் ஏற்படின் உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படலாம். இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். சிறுவர் அரங்கில் வேடப்புனைவு என்பது மிகவும் முக்கியமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.சிறுவர்களை முழுமையாக மூடியோ அங்கங்களை அசைப்பதற்கு கடினமான வகையிலோ வேடப்புனைவு செய்தல் கூடாது.அவர்களுக்கு அறிவியல்சார் மகிழ்வை வழங்குகின்ற அரங்கானது எளிமையான வேடப்புனைவினை பயன்படுத்த வேண்டும்.மிகவும் இறுகிய நிலையிலோ அங்கங்களை அசைக்க முடியாத நிலையிலோ வேடப்புனைவு மேற்கொள்ளப்படுமாயின் அவ்ஆற்றுகையின் பின் வேறு எந்த ஆற்றுகையிலும் பங்கு கொள்ள முடியாத அளவிற்கு வெறுப்புத் தன்மை ஏற்பட்டுவிடும். அரங்கச் செயற்பாட்டில் விளையாட்டு என்பதற்கு அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். விளையாட்டுக்கள் போட்டி நிலைகளிலே இருந்தாலும் அவற்றிலிருந்து பொறாமையை விலக்களிக்கக் கூடிய சிறுவர் அரங்கானது 3 வகையில் நிகழ்த்தப்படுகின்றது.

1. சிறுவர்கள் மட்டும் நடித்தல்
2. பெரியவர்கள் மட்டும் அறிக்கை செய்தல்
3. சிறவர்களும் பெரியவர்களம் இணைந்து அறிக்கை செய்தல்

சிறுவர்கள் நடிக்கும் நாடகம் எல்லாம் சிறுவர் அரங்கு ஆகாது. பதிலாக சிறவர்களின் மனவளர்ச்சிக்கும் அனுபவத்திற்கும் நாட்டங்களிற்கும் உட்பட்டதாக ஆக்கப்பட்டதும் அவர்களின் உலகத்திற்கு உரியதுமான அரங்கே சிறுவர் அரங்காகும் என்கிறார் அலெக்சாண்டர் பிறேயன் சேல். இக் கருத்தானது ஏற்றுக்கொள்ளக்கூடிய யதார்த்த நிலையான வெளிப்பாடாகும். இவ்வரங்கில் சிறுவர்கள் மாத்திரமன்றி பெரியவர்களும் பங்கேற்கலாம். இருவரும் இணைந்தும் பங்கேற்கலாம்.

சிறுவர் அரங்கின் கரு பற்றி நோக்கும் போது பொதுவாக அன்பு செய்தல், ஒற்றுமையை வளர்த்தல், கூட்டு உறவு, நம்பிக்கை வளர்த்தல், நட்பை வளர்த்தல், பிறருக்கு உதவுதல், தந்திரக்கதைகள், ஆகிய விடயங்களை தளமாக வைத்து கட்டப்பட்டு வருகின்றது. இவ்வரங்கிலே மிகவும் முக்கியமாக ஆடல்,பாடல்,விளையாட்டு, கூட்டுச்செயற்பாடு, நகைச்சுவை, விடுகதை, கதைகேட்டல், பிராணிகள் போல் வெளிப்படுதல், போன்றன உள்ளடக்கப்படும் தன்மை வாய்ந்ததாக அமைதல் சிறப்பானதொன்று. கூறவருகின்ற போதனையை நேரடியாக கூறாது விளையாட்டு வினோதங்களினூடாக விதைக்கப்படும் போதே அவை சிறுவர்களின் மனங்களிலே செம்மையான பயிராக வளரும். நடிப்பு என்பது சித்திரவதைக்கூடமாக சிறுவர்கள் எண்ணாது ஆர்வத்தோடு பங்குகொள்ளக் கூடிய தன்மையிலே அமைதல் வேண்டும். வர்ணப்பயன்பாட்டின் போது கண்ணுக்கு குளிர்ச்சியான கவர்ச்சியான வர்ணங்களை பயன்படுத்துதல் வேண்டும். வர்ண ஒளிகளும் உள்ளத்தில் மகிழ்வை உண்டாக்கும். காட்சிப்பொருட்கள் பற்றி நோக்கும் போது அவர்களுடைய அனுபவ எல்லைக்குட்பட்ட விடயங்களையே அவதானித்து செயற்படுத்தல் வேண்டும்.

தற்கால சூழ்நிலையில் நவீனயுகம் வலுப்பெற்று வருகின்ற வேளையில் கணணியியல் வலையமைப்பு என உலகம் உள்ளங்கைக்குள் அடக்கப்படுகின்றது. இத்தகைய நாகரீக

வளர்ச்சிக்கு ஏற்ப சிறுவர்களின் உடல் உள வளர்ச்சியும் சிந்தனையும் வளரவேண்டிய சூழ்நிலை உருவாகின்றது.தற்கால சிறுவர் அரங்கு நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் அவசியத்தையும் அது சிறுவர் மீது கொண்டு செல்லப்படுகின்ற முறைமையையும் மிகவும் அவதானத்துடன் கண்டு கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இவை காலத்தின் தேவை கருதி சிறுவர்களின் மனதில் பதியப்பட வேண்டியவை. அதை பிரயோகிக்கின்ற முறைமை ஆரோக்கியமானதாக சிறுவர்கள் விரும்பி அவாவி நிற்கவேண்டிய சூழ்நிலைக்கேற்ப விளையாட்டு வினோதங்கள் ஊடாக பிரயோகிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மேலைத்தேசங்களிலே சிறுவயது முதல் கணணி தொழில்நுட்ப அறிவுகள் அவசியம் கருதி புகுத்தப்பட்டுள்ளது. இதற்காக எம்மை சார்ந்த சூழலில் இவற்றை இறுக்கமான முறையில் சிறுவர்களுக்கு புகுத்துதல் கூடாது.அவற்றின் அவசியத்தையும் இலகுத்தன்மைகளையும் இயைபாக அறிந்து நெருடல்கள் இல்லாமல் பசுமரத்தாணி போன்று சிறுவர் உள்ளங்களில் பதிய வைப்பதற்கு சிறுவர் அரங்கு முக்கியமானது. சிறுவர்கள் என்பவர்கள் துயரம் என்கின்ற உலகிற்குள் மாண்டு உளத்தளவில் பாதிப்புக்குள்ளாகாமல் அவற்றிலிருந்து விடுபட்டு சிறப்படைவதற்கு இவ்வரங்கப் போக்கு முக்கியமாகிறது. இன்றைய சிறுவர்களே நாளைய உலகின் வழிகாட்டிகள்.ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எனவே சிறுவயதில் விதைக்கப்படுகின்ற ஒவ்வொரு விதைகளும் கறைகள் அற்று நல்ல அறுவடையை தரவேண்டும் ஆயின் உடல் உள ரீதியான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்ற சிறுவர் அரங்கானது மிகவும் அவசியமான முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இச்சிறுதகவலானது சிறுவர் அரங்கின் சமூக கோணத்தில் எழுதப்பட்டதே அன்றி வரலாற்று ரீதியான சிறுவர் அரங்க வரலாறுகள் பற்றி கூற முன்வரவில்லை.இது சிறுவர் அரங்கின் சமையலுக்குரிய ஒழுங்கு முறைமை என நான் கருதுபவற்றை பகிர்ந்துள்ளேன்.



## மலரும் மொட்டுக்கள்

பள்ளி செல்லும் பருவமது பாதங்கள்
ஏனோ பாறாங்கல்லில் நடக்கின்றது
புத்தகமே சுமையாகும் வயதில்
புதிதாய்ப் பூத்த மொட்டு ஒன்று
புழுவாய்த் துடிக்கிறது வீதியிலே

காலங்கள் ஓடினாலும்
காயங்கள் மட்டும் ஏன் ஓடவில்லை
சிறகடித்துப் பறந்த போதும்
சிறகுகள் வலிக்கவில்லை, ஒடிக்கப்பட்டது
தத்தளித்தது தரையில் மீன்கள்
சாகும் வரை போராடிக்கொண்டே
இருக்கின்றது வாழ்விற்காய்.......

சிறுவர்கள் அவர்கள் சிறுத்தைகள்
சிறுவர்கள் அவர்கள் மொட்டுக்கள்
எத்தனை வாசகங்கள் அவர்களை வதைக்காதீர்
முடிந்ததா?.......... மீண்டும் முளைக்கத்தான்
செய்கிறது.எப்படித் தடுக்க முடியும்?
இனிவரும் காலம் பதில் சொல்லுமா?
மலரப்போகும் மொட்டுக்காவது........

செல்வி.சுபைதா.ஆனந்தராசா
பழைய மாணவி.

# மனித வளர்ச்சியில் மதத்தின் ஆதிக்கம்.



துு.சுவர்ணராஜ்
பழைய மாணவன்

சமயமும் கல்வியும் பின்னிப்பிணைந்த ஒன்றாக பண்டைக்காலம் தொடக்கம் இன்று வரை நிலவி வருவதை கண்கூடாக காணக்கூடியதாக இருக்கிறது.முதற்கண் கல்வியை எடுத்து ஆராய்ந்தால் முற்கால கல்வி செயற்பாடுகள் இந்துக் கோயில்களிலும், புத்த விகாரைகளிலும், கிறிஸ்தவ கோயில்களிலுமே ஆரம்பமாகி இருப்பதாக வரலாறு எடுத்துக் கூறுகிறது.மற்றும் பிராமணர், பிக்குமார், கிறிஸ்தவகுருமார், போன்றோரே ஆதியில் கல்வியை கற்கக் கூடியதாகவும் அவர்கள் மூலமாகவே அரசர்கள் சூத்திரர்கள், போன்றோர் கல்வியைக் கற்று வந்துள்ளார்கள் என்பதையும் அறியக் கூடியதாக இருக்கிறது. இவற்றை நாம் சற்று நோக்குவோமானால் கல்வியின் வளர்ச்சிக்கு சமயம் அடித்தளமாக அமைந்துள்ளது என்பது தெட்டத் தெளிவாக விளங்குகிறது.சமயக் கல்வியின் பிறப்பிடம் என்ற கேள்வியை ஆராய்ந்தால் அக்கால மக்கள் சமய நம்பிக்கை கொண்டவர்களாகவும் ஒரு பரம்பொருளுக்கு பயபக்தி கொண்ட மக்களாகவும், கீழ்ப்படிந்த மக்களாகவும், காணப்பட்டார்கள்.

நாகரீகம் வளர்ச்சி அடைந்த பிற்பாடு மக்கள் சமயத்தின் ஊடாகக் கல்வியைப் புகட்டுவது இலகுவான முறை என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள். உதாரணமாக "உனக்கு சக்தி இல்லாவிட்டால் சிவனே என்று இருந்து விடு" என்பது மக்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் ஓர் வாக்கியமாகும். சிவன் என்பது ஒரு சடப்பொருள் அதில் இருந்து தான் சக்தி தோன்றியது.அச்சக்தியை இயக்குகின்றவரே சிவனாகும். இவற்றில் இருந்து நாம் கருதுவது என்ன? சமயத்திற்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பை காட்டுவதாக கருத முடிகிறது.

சமுதாயத்தை நாம் எடுத்து நோக்குவோமானால் சிலுவை யுத்தம் நடப்பதற்கு காரணம் சமயம்.சமயத்திற்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பை காணக்கூடியதாக இருக்கிறது.

இன்றைய நாகரீகம் அடைந்து வரும் சமுதாயத்தில் கல்வியில் சமயத்தை புறக்கணித்து வருவதால் தான் உலகத்திலே கொலை, களவு, போட்டி, பொறாமை, பயங்கரவாதம், நாட்டுக்குநாடு யுத்தம், போன்றவை இடம்பெறுவதற்கு காரணமாக அமைகின்றன.சமயத்தில் பற்றும்,உயிர்களில் இரக்கமும் கொண்ட மக்கள் சமுதாயம் உருவாகினால் தான் இந்நிலை மாறுபடும்.மக்களிடையே ஒற்றுமையும் சமாதானமும் நிலை பெறமுடியும்.

பாடசாலைகளிலே நவராத்திரி விழா, சிவராத்திரி விழா, குருபூசை போன்றன ஏன் கொண்டாடப்படுகிறது என்று உற்று நோக்குவோமானால் சமயத்திற்கே முதலிடம் கொடுத்து மாணவர்களுக்கு கடவுள் மேல் பயபக்தியை ஏற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்துவதன் மூலம் தான் பிற்காலத்தில் தலைசிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.இல்லாவிடில் நற்பிரஜை உள்ள சமுதாயத்தை உருவாக்க முடியாது.ஆகவே பாடசாலைகளில் சமயத்துடன் இணைந்த கல்வியை புகட்ட வேண்டும்.சமயத்தை வேறாக்கி கல்வியை கற்பிக்க முயலுவோமானால் எமது வருங்கால சந்ததியினருக்கு ஆசிரியர்குழாம் தீங்குகிளைத்தவர்களாவார் என்பதே எனது கருத்தாகும்.

## அம்மா என்பது யார்?

நாம் கண்கண்ட தெய்வம்
நம் கருணையின் திருவுருவம்
எம் பாசத்தின் பிறப்பிடம்
என் அன்பின் உறைவிடம்

வாழ்வின் உதயம்
வாழ்வின் ஒளிவிளக்கு
வளர்ச்சியில் ஏணிப்படி
வாழ்வின் வசந்தம்

எம் பசி போக்குவதும்
எம் பாதுகாப்பாய் நிற்பதும்
எமக்கு அறிவூட்டி வைப்பதும்
எம்மை பார்புகழ வைப்பதுவும்

சீர்தூக்கி நிற்பவரும்
சிறார் காக நிற்பவரும்
ஆணிவேராக நிற்பவரும்
அணையா விளக்காக என்றும்
துணையாய் நிற்பவரே அம்மா

து.அபிசாந்
தரம்-03

# ஏன்? எப்படி?

☛ சுகவீனம் உற்றவர்களுக்கு மருந்தூசிகள் ஏற்றும் போது கொதிக்கும் சுடுநீரில் வைக்கப்பட்ட பின்னரே அந்த ஊசி ஏற்றப்படுகின்றது.ஏன் இவ்வாறு சுடுநீரில் ஊசி வைக்கப்படுகின்றது.?

ஊசியானது வெளியே வைக்கப்படும் போது அவற்றில் பக்ரீரியாக்கிருமிகள் படிவதுண்டு.பொதுவாக ஊசியை ஏற்றும் போது உடம்பில் ஒரு பகுதி சிறிதளவு காயப்படுவதுண்டு.இத்தகைய சந்தர்ப்பத்தில் ஊசியிலுள்ள கிருமிகள் உடம்பிலுள்ள இரத்தத்துடன் கலந்து உடல் முழுவதும் பரவிவிடக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.இதனால் பலவிதமான நோய்களுக்கு அந்நபர் ஆளாகலாம்.எனவே தான் கொதிக்கும் சுடுநீரில் ஊசி வைக்கப்படுகின்றது.கொதிநீரில் வைத்தால் கிருமிகள் இறந்துவிடும்.அப்போது எவ்வித பாதிப்பிற்கும் வாய்ப்பிருக்காது.

☛ இரத்தப் பரிசோதனைக்கென இரத்தம் எடுக்கையில், முழங்கையின் சற்றே மேற்புறமாகப் பட்டியொன்றினால் இறுக்கமாகக் கட்டப்படுவதுண்டு.ஏன் அவ்வாறு கட்டப்படுகிறது?

பொதுவாக உடம்பில் இரத்தமானது குருதிச்சுற்றோட்டத்தின்படி இதயத்தை நோக்கியே கடத்தப்படுகிறது.எனவே இவ்வாறு இதயத்தை நோக்கிச் செல்லும் இரத்தமானது முழங்கையின் உட்புறமாக இதயத்தை நோக்கிச் செல்லும் போது அதற்கு சற்று உயரமான பகுதியில் பட்டியொன்றினால் கட்டப்பட்டுக் கையில் இரத்தமானது அவ்விடத்தை விட்டு நகரமுடியாமல் அங்கேயே தேங்கிவிடும். இச்சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் ஊசியை செலுத்தி இரத்தத்தை தேவையான அளவிற்கு எடுக்கக் கூடியதாக இருக்கும்.இதற்காகத் தான் பட்டியை கட்டி கூடிய இரத்தம் எடுக்கப்படுகின்றது.

☛ காட்டுத்தீ பரவுவதை தடுப்பதற்காக காடுகளிலுள்ள மரங்களின் கிளைகள் வெட்டப்படுவது ஏன்?

குறிப்பாக காடுகளிலுள்ள மரங்களில் காய்ந்துள்ள மரக்கிளைகள் ஒன்றோடொன்று உரசும் போதே காட்டுத் தீ பரவுகின்றது. எனவே காய்ந்து போன மரங்களிலுள்ள கிளைகள் ஒன்றோடொன்று உரசும் போது ஏற்படுகின்ற தீயானது பக்கத்து மரத்திற்கும் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதனால் பக்கத்து மரங்களிலுள்ள காய்ந்த கிளைகளை வெட்டுவதன் மூலம் தீயானது தொடர்ந்தும் மரத்திற்கு மரம் பரவுவதை தடுக்க முடிகின்றது.இதனாலேயே இவ்வாறு மரக்கிளைகள் வெட்டப்படுகின்றன.

☛ ஆகாயவிமானங்களின் வெளிப்புறபகுதிகள் அலுமினியத் தகடுகளாலேயே செய்யப்படுகின்றன.எனினும் கப்பல்களோ அவ்வாறு அலுமினியத்தால் தயாரிக்கப்படுவதில்லை.இதற்கான காரணம் என்ன?

விமானமானது அதன் சுமையை தாங்குவதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லாத நிலையிலேயே வானில் பறக்கின்றது.எனவே அதன் எடை குறையும் அளவிற்கு அதன் பயணத்திற்கு அது வசதியாக அமையும்.ஆனால் கப்பல்களோ அவ்வாறில்லை.கடலில் பயணிக்கும் போது ஆழ்கடலில் பாரிய கற்பாறைகள்,பாரிய மீன்களில் மோதி கப்பலுக்கு சேதங்கள் நேரலாம்.எனவே கப்பலின் வெளிப்புறக் கட்டுமானம் அலுமினியத்தினால் செய்யப்பட்டிருந்தால் அது பாரிய சேதத்திற்கு உள்ளாகலாம்.இக்காரணத்தினாலேயே கப்பல்களின் வெளிப்பகுதிகள் அலுமினியத்தினால் தயாரிக்கப்படுவதில்லை.

ம.பிரவீனா
தரம்-04
யா/புலோலி கிழக்கு அ.த.க பாடசாலை.

# பொது அறிவு

1) .நுணுக்குக் காட்டியை கண்டு பிடித்தவர் யார்?
z.யோன்சன்

2) .மின்னுயர்த்தியை கண்டுபிடித்தவர் யார்?
E.G. ஒறுறிங்

3) .புகையிரதத்தை கண்டுபிடித்தவர் யார்?
ஜோர்ஜ். ஸ்ரீவன்சன்

4) .மின்கலத்தை கண்டு பிடித்தவர் யார்?
வோல்ற்றர்

5) .உலகில் மிக உயரத்தில் உள்ள ஏரி எது?
டிட்டிக்காக

6) .சர்வதேச நாடக தினம் எப்போது?
மார்ச் 27

7) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
அலெக்சாண்டர் கிரகம்பெல்

8) உலகப் படத்தை முதன்முதலில் வரைந்தவர் யார்?
தொலமி

9) மின்னேற்றத்தை கண்டுபிடித்தவர் யார்?
வில்லியம் கில்பேட்

10) மோட்டார் வாகனத்தை கண்டுபிடித்தவர் யார்?
டெம்லர்

11) நீராவிக்கப்பலைக் கண்டுபிடித்தவர் யார்?
ஜேம்ஸ்வாட்

12) சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை எப்போது எங்கே இடம்பெற்றது?
1954 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் திகதி- பொஸ்ட்ரனிஸ்

13) மனித நடவடிக்கையை இலகுபடுத்திய நுட்பம் எது?
நெருப்பு

14) போக்குவரத்தை இலகுபடுத்திய முதல் நடவடிக்கைகளை தருக?
சில்லு, தோணி

15) கருத்துக்கள் பரிமாற உதவிய முதல் நடவடிக்கை எது?
அச்சுக்கலை

16) செய்திப்பரிவர்த்தனையை வேகம் அடையச் செய்த முதல் நடவடிக்கை எது?
தொலைபேசி

17) சர்வதேச தொடர்பை ஏற்படுத்தியது எது?
விமானம்

18) சந்திரனில் சஞ்சரிக்கும் விண்கலம் எப்போது ஏவப்பட்டது?
1969 ல்

19) தொலைக்காட்டியை கண்டுபிடித்தவர் யார்?
ஜோன் எலாகிபெயார்ட்

20) தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர் யார்?
கலிலியோ கலிலி

21) அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தவர் யார்?
ஜோன் கட்டன்பேக்

22) நீராவிக்கப்பல் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
1746 ல்

23) விகிதாசாரத் தேர்தல் முறை எப்போது அறிமுகமானது?
1978 ஆம் ஆண்டு

24) போக்குவரத்துச் சாதனங்களில் முதல்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது எது?
சில்லு

25) ஸ்புட்னிக் செய்மதியை முதன்முதல் அனுப்பிய நாடு எது?
ரஷ்யா

26) குளோனிங் முறையில் முதல் முதல் உருவாக்கப்பட்டது எது?
ஒட்டகம்.

ஜோ.பிரியதர்சன்
மாணவன்
தரம்-05

# பொது அறிவு

☛ மனிதன் என்பதன் பொருள் என்ன?
சிந்திப்பவன்

☛ மனித குலத்தின் மூதாதையர் எனக்கண்டறியப்பட்டது யாது?
சிம்பன்சி என்ற குரங்கின் பரம்பரை

☛ மனிதன் சமூகவிலங்கு எனக் கூறியவர் யார்?
அறிஞர்.சோக்கிரட்டீஸ்

☛ உலகின் முதல் மனிதன் எந்தப் பரம்பரையை சேர்ந்தவன்?
திராவிடர்

☛ தமிழ் மொழியின் மறுபெயர் என்ன?
திராவிடம், எலு

☛ புராதன காலத்தில் தமிழர்கள் எவற்றை வணங்கினார்கள்?
சூரியன், சந்திரன், அக்கினி

☛ விஞ்ஞானம் என்றால் என்ன?
மேலான அறிவு

### உலகின் சில உச்சங்கள்

| | |
|---|---|
| மிகப்பெரிய உப்பு நீர் ஏரி - | கஸ்பியன் கடல் |
| மிகப்பெரிய நன்னீரேரி - | சுப்பேரியன் ஏரி |
| மிகப்பெரிய டெல்டா - | சுந்தரவனம், இந்தியா |
| மிகப்பெரிய தீவுக்கூட்டம் - | இந்தோனேசியா |
| மிகப்பெரிய வனம் - | கோனிஃபெரஸ் |
| மிகப்பெரிய சமவெளி - | கங்கை சமவெளி |
| மிகத் தாழ்ந்த பகுதி - | சாக்கடல் ஜோர்தான் |
| மிகப்பெரிய கடல் - | தென்சீனக்கடல் |
| மிக உலர்ந்த பகுதி - | அட்டகாமா பாலைவனம்,சிலி |
| மிகப்பெரிய பாலைவனம் - | சகாரா வடஆபிரிக்கா |
| மிக உயர்ந்த பகுதி | எவரெஸ்ட் சிகரம், நேபாளம். |

மூலம் - யாழ்ப்பாண புவியியலாளன் 2005-2006

உ.சௌமியா
தரம் -04

## சிறுவர் உரிமையைப் பேணுவோம்.

- சிறுவர்களுக்க கல்வி வழுங்கதல் அவசியம்.
- சிறுவர்களை அன்படனும் பாசத்துடனும் அரவணைத்து வளர்த்தல் வேண்டும்.
- சிறுவர்களை பலவித துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தக் கூடாது.
- சிறுவர்களிடையே பாகுபாடு காட்டாது ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.
- சிறுவர்களை விளையாடவும், கலைநிகழ்வுகளில் பங்குகொள்ளவும் ஊக்கமளித்தல் வேண்டும்.
- சிறுவர்களுக்கு ஏனையோர் முழு ஆதரவுகளையும் வழங்க வேண்டும்.
- சிறுவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை அளிக்க வேண்டும்.
- சிறுவர்களின் கருத்துணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.
- பெற்றோரின் சகல செயற்பாடுகளும் முடிவுகளும் சிறுவர்களின் நலனைக் கருத்திற் கொண்டே மேற்கொள்ள வேண்டும்.
- சிறுவர்களின் உரிமைகளைப் பறித்தல் கூடாது.

## OUR SCHOOLING

**If the child doesn't go to school.**

**By him self**

**He is taken there by force**

**O! my friend**

**Did you think you were an exception.**

**S.Srikeerthihan**
**Grade -01**

## கல்வியின் மகிமை

என்றும் அழியாச் செல்வமான கல்விச் செல்வம் சின்னஞ் சிறுவர்களான எங்களின் மனதில் பதிய வேண்டும் என்ற ஆவலுடன் எம்மைப் பெற்று பெற்றோர்கள் ஆவல் கொண்டு நிற்கின்றனர். பெற்றோர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வது பிள்ளைகளின் கடமை மாதா பிதா குரு தெய்வம் என்று படிக்கின்றோம்.இந்த பொன்னான வார்த்தைகளை எங்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் எங்களை மேன்மை பெற வைக்கின்றார்கள்.அவர்கள் தான் இந்த உலகத்திற்கே ஓா வழிகாட்டிகள். நூம் எல்லோரும் அடையும் உயர்விற்கு அவர்களே காரணிகள். "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக" என்பவை வள்ளுவர் வாக்கு. என்றும் பொய்யாகாது ஏழைகளாக வாழ்பவர்கள் கோழைகளாக இல்லாமல் இருப்பதுவும் கல்வியின் மகிமை தான். நாட்டின் அளவில்லா முன்னேற்றத்தின் காரணம் கல்வியே. எங்களின் அறிவை மேம்படுத்துவதற்கு அரசாங்கமே முன்நின்று உதவிகள் புரிகின்றது. உணவு, உடை, படிப்பு சாதனங்கள், அத்தனையும் கிடைக்கிறது. முாணவச் செல்வங்கள் கல்வியில் மேம்பாடடைய எண்ணியே இவைகளைச் செய்கின்றனர். கல்விக்கு நிகர்எதுவுமே இல்லை. கல்வியை கற்பிப்பவர்களுக்கு நிகரானவர்களும் எவருமே இல்லை. கல்வியின் சிறப்பு என்றும் அழியாதது என்பது எனது கருத்தாகும்.

யோ.சுயானா
தரம்-04

## மரங்களை பாதுகாப்போம்.

மரங்கள் இருப்பதனால் தான் மனிதர்களாகிய நாமும் ஏனைய உயிரினங்களும் உலகில் உயிர் வாழ முடிகின்றது.எல்லா உயிரினங்களுக்கும் தேவையான உணவு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மரங்களில் இருந்து தான் கிடைக்கன்றது.

மரங்கள் சூழலை குளிர்ச்சியாகவும் காற்றோட்டமாகவும் வைத்திருக்க உதவுகின்றன.மரங்களில் இருந்து பகலில் ஆவியாகும் பெருமளவு நீர் மழை மேகமாக மாற்றமடைந்து உலகிற்கு மழையை வழங்குகின்றன. மரத்தின் பகுதிகள் விறகாக எமது எரிபொருள் தேவையை பூர்த்தி செய்ய உதவுகின்றன.மரத்தில் இருந்து பெறப்படும் பகுதிகள் வீடுகட்டவும், தளபாடங்கள் செய்யவும்,கப்பல் கட்டவும் என எமது பல தேவைகளையும் பூர்த்தி செய்ய உதவுகின்றன.மருந்தாகவும் வாசனைத் திரவியங்களாகவும் மரத்தின் பகுதிகள் பயன்படுகின்றன.

மரங்கள் கட்டுப்பாடின்றி பெருமளவு அழிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.இதன் மூலம் சூழல் மாசடைதலையும் தவிர்க்கலாம்.நாம் ஒவ்வொருவரும் மரங்களை வளர்த்து வளம் பெறுவோம்.

சு.சுலக்சனா
தரம்-05

## சிட்டுக் குருவி

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
சேதி சொல்லு பொட்டுக்குருவி
சின்ன வாயால் நெல் பொறுக்கி
தின்று வாழும் குட்டிக் குருவி

வீட்டு முற்றத்தில் விளையாடும்
மாடி முகட்டில் கூடு கட்டும்
பாடி ஆடிப் பறந்து சுற்றும்
பஞ்சு மேனிச் சிட்டுக் குருவி

பவளக் கண்கள், பட்டுச் சொண்டு
பார்க்கப் பார்க்கப் பசுமையழகு
பச்சைப் புல்லைக் கொத்திக் குதறி
பதுங்கியோடிப் பண்ணிசைக்கும்

எங்கள் வீட்டுத் தோட்டம் முழுவதும்
எத்தனையோ சிட்டுக்குருவி
இனிய குரலில் பேசிப்பாடி
இயற்கை அழகாய் மகிழ்வூட்டும்

ஜெ.கிருஜன்
தரம்-03

# மாணவர் அமைதியின்மை

நா.சின்னையா

"நாம் கட்டடங்களை இடிக்கின்றோம், தண்டவாளங்களைப் பெயர்க்கின்றோம், கல்லூரிகளில் கலகம் விளைவிக்கின்றோம்"

"நாம் இவைகளை ஏன் செய்கின்றோம்?" நாம் சமூகப் பிரஞ்ஞை அற்றவர்கள்?

"சுட்டிவிரல் காட்டி எம்மைக் குற்றக் கூண்டில் நிறுத்தும் பெரியவர்களே, மூன்று விரல்கள் உங்களை நோக்கிச் சிரிக்கின்றனவே தெரியுமா? எமது வயதை எட்டாது முதுமையடைந்தவர்களா நீங்கள்?"

"எமது உள, உடல் தேவைகள் பற்றி எப்பொழுதாவது எண்ணியுள்ளீர்களா? எமக்கும் மனம் உண்டு என்பதை என்றாவது நீங்கள் எண்ணியதுண்டா?."

மேற்கூறிய குற்றச்சாட்டுக்களை மையமாகக்கொண்டு இன்றைய மாணவர்களது மன அமைதியின்மையை ஆராய்வது பொருத்தமுடையதாகும். ஏனெனில் விரும்பியோ விரும்பாமலோ நாம் எல்லோரும் மாணவர்களைத் திட்டிக்கொண்டு அவர்கள் விட்டுச் செல்லும் பாதச்சுவடுகளில் கால் பதித்துப் பின் செல்கின்றோம்.

"பகிடிவதை " எனும் கேடு இன்று பல்கலைக்கழக மட்டத்திலிருந்து பிரபல்யமான பாடசாலைகளுக்கும் பரவிட்டது. இவற்றை அமைதியின்மையின் வெளிப்பாடு எனப் பலர் எண்ணிவிடுகின்றனர். நல்ல நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்ட இது இன்று மண்ணில் வரைந்த கேலிச்சித்திரமாகி விட்டது. இது உண்மையில் கண்டிக்கத்தக்கதேயல்லாமல் மாணவர்களது அமைதியின்மையின் வெளிப்பாடாக எண்ணிவிடக்கூடாது. காரணம் இதே மாணவர்கள் "பொங்கு தமிழ்" நிகழ்ச்சிகளை மிகவும் அற்புதமாக நடத்தும் போது அவர்களை மெச்சி எமது இயலாமையை எண்ணி வெட்கப்பட்டவர்களல்லவா நாங்கள்.

சேர் ஐவர் பெனிங்ஸ் அதிசயித்துக் கூறுவார். 'கண்டி வீதியில் போய் வருகையில் நானும் எனது மனைவியும் பாடசாலை விட்டுச் செல்லும் மாணவர்களது நல்ல நடத்தைகளை கண்டு மெச்சியுள்ளோம். வீதியின் இரு மருங்காலும் வளர்ந்தவர்கள் போன்று ஒழுங்காகச் சென்று கொண்டிருப்பார்கள். பாடசாலை விட்டுச் செல்லும் போது கூட அவர்களது உடுப்புக்கள் துப்புரவாக இருக்கும். சிறுபிள்ளைகளெல்லாம். சிறிய பேய்களாக இருப்பதைக் கண்டுவந்த வெளிநாட்டவர்களாகிய நாங்கள் இலங்கைப் பிள்ளைகளைப் பிரமிப்போடு பார்த்து நிற்போம்".

இன்று கதை மாறிவிட்டது. முப்பது வருடங்களுக்கு மேலாக அரசியல் அவலங்கயைக் கண்ட நாடு இது. அரசியல் வாதிகள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக மாணவர்களைப் பயன்படுத்தினார்கள், பயன்படுத்துகின்றார்கள். "நாட்டுப்பற்று" "மொழிப்பற்று", "இனப்பற்று" எனும் சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டன. மாணவர்களை வீதிக்கு இழுத்தோம். மறியல்போராட்டங்கள், எதிர்ப்புக்கோசங்கள், கல்வீச்சு என்பவை கற்றுத்தந்தோம். மகாத்மா காந்தியும் இதற்கு விதிவிலக்கல்ல.

இன்று நாங்கள் கற்றுத் தந்த பாடங்களை தமது பிரச்சினைகளுக்குப் பயன்படுத்துகின்றார்கள். இராஜாஜி கூறுவார். "முதிர்ச்சியின்மை காரணமாக மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது, அறியாமை காரணமாக அரசியல்வாதிகள் கல்வியில் தலையிடக்கூடாது". இக்கருத்தை யார் செவிமடுத்தார்கள்? வன்முறைகள் எம்மால் மாணவர்களிடையே விதைக்கப்பட்டன. மரமாக மாறும் போது மாணவர் அமைதியின்மை என நாமம் சூட்டினோம். இதற்கான பரிகாரங்களை யாராவது தேடினார்களா? "சுட்டுவிரல்" தத்துவம்தானே பேசுகின்றோம்.

மாணவர்களது அமைதியின்மை இன்று பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள்

போன்றவைகளில் தலை தூக்கத் தொடங்கிவிட்டன. ஆனால் மாணவர்களது போராட்டங்களைக் கரிசனையுடனும் புரிந்துணர்வுடனும் நீடித்த தீர்வொன்றை நோக்கிய பாதையில் இட்டுச்செல்கின்றோமா? அடக்குமுறை, அதிகாரபலம் போன்ற வற்றால் ஒழித்து விடலாமென எண்ணுகின்றோம்.

இன்றைய மாணவர்களது போராட்டங்கள் ஒருவகையில் நியாயமானவையே. வேலையின்மை, பொருளாதாரச் சிக்கல் மாணவர்களை எவ்வளவு பாதிக்கும் என்பதை நாம் ஊகிக்க முடியும். படித்த பட்டதாரிகள் எத்தனை வருடங்கள் வேலைக்காகக் காத்திருக்க வேண்டும். எத்தனை பேருக்குப் பல்லைக் காட்டவேண்டும், எத்தனை பேருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும். கோபம், வெறுப்பு, ஆற்றாமை அவர்களை வன்முறையில் ஈடுபடச் செய்கின்றன. சமூக அநீதிக்கெதிராகக் குரல் கொடுப்பது மன அமைதியின்மையா என அவர்கள் கேட்கின்றார்கள்.

இவ்வாறான மாணவர்களது செயற்பாடுகள் விஞ்ஞான ஆய்வுக்குட்படுத்தாது அதிகார அடக்கு முறையைக் கொண்டு தீர்க்கப்படுகின்றது. மாணவர்கள் இயல்பாகவே அன்பு, அரவணைப்பு, அங்கீகாரம் என்பவைகளுக்காக நிற்பவர்கள். மாறாக அவர்களை குறைகாணல், குற்றம்கூறல், அதிகாரம் செலுத்துதல், தண்டனை வழங்கல் என்பவைகளைக் கொண்டு அடக்க முயலும் போது அவர்கள் குமுறுவர், வன்முறைகளில் ஈடுபடுவர்.

மாணவனும் ஆசிரியரும் சக பாடிகளாகக் கல்விச் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய இடத்தில் கேள்வி கேட்பதையே விரும்பாத ஒரு கல்வி நிர்வாகத்தில் எவ்வாறு அமைதி தோன்ற முடியும். மேலிடத்திலிருந்து கீழ்மட்ட வரையும் அதிகாரமட்டம் மாணவர்களை அடக்கி வைக்கவே விரும்புகின்றது. அவர்கள் அவற்றை சில வேளைகளில் வேண்டுமென்றே எதிர்க்கின்றனர்.

இன்றைய கல்வி மாணவர் மையக்கல்வி என்கின்றோம். அமெரிக்கச் சஞ்சிகை ஒன்றில் வேடிக்கையாக எழுதப்பட்ட ஒரு பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. அதன் ஆசிரியர் கூறுவார். இதுகாலும் ஆசிரியர் மேசைக்குப் பின்பாக நின்று (தற்காப்புக்காக) கத்திக் கொண்டே இருப்பார். மாணவன் வாய்மூடி மௌனமாகக் கேட்டுக்கொண்டே இருப்பான். ஆனால் இன்றோ மேசை அகற்றப்பட்டு விட்டது. மாணவன் மேசை மேல் நின்று கத்திக் கொண்டே இருக்கின்றான். ஆசிரியர் மௌனமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறார். இது மாணவனின் அமைதியின்மையின் வெளிப்பாடு என்று எண்ணிவிடக் கூடாது. அவன் துணிவுடன் எமது சந்தேகங்களைக் கேட்கின்றான். ஆசிரியர் பொறுமையுடன் அவனுக்கு விடை அளிக்கின்றார். இங்கு இருபக்கமும் கல்வி நிகழ்கின்றது. இருவரும் கற்றுக்கொண்டே இருக்கின்றனர். துர்அதிர்ஷ்டவசமாக இன்றும் ஆசிரியர் மாணவனை பலூன் என நினைத்து அறிவை அதனுள் ஊதிக் கொண்டே இருக்கின்றார். பாலூன் ஒரு மட்டத்தில் வெடிக்கும் என்பதை அவர் ஏனோ எண்ணுவதில்லை.

இன்று அதிகமான மாணவர்கள் பாடசாலையில் சேர்க்கப்படுகின்றனர். மாணவர்கள் தங்களை வேலையாட்களாக எண்ணத் தலைப்படுகின்றனர். வேலையாட்கள் தங்களது உரிமைக்காக கையாளும் வன்முறை, கிளர்ச்சி, வேலைநிறுத்தம், என்பவைகளில் இவர்களும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் எம்மால் ஏற்படுத்தப்பட்டவை. மாணவர்களையும் நிர்வாகத்தில், திட்டமிடல், போன்ற கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடவைத்தல் அவசியமானது. இவைகள் இன்றில்லை என நாம் கூறவில்லை. கடதாசியில் இருக்கும் இவைகள் நடைமுறையில் செயல்வடிவம் பெற வேண்டும்.

மாணவர்களின் பிரச்சினைகள் சாதாரண நடத்தைப் பிறழ்தல்கள் என எண்ணி அடக்கு முறைகளை அறிமுகம் செய்வதை விட்டு ஆழமான விஞ்ஞான ரீதியில் அவை ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படல் வேண்டும். அவர்கள் தமது பாரம்பரியம், பண்பாடு, விழுமியங்கள் என்பவைகளைப் பேணும் வகையில் கல்வி ஊட்டப்படல் வேண்டும். அவர்களது பிரச்சினைகள் பொறுமையுடன் அணுகப்பட்டால் எதிர்கால இளைஞர்கள் இந்நாட்டின் சொத்தாக மாறுவர்.

# Projecting women's right in Sri Lanka



*Miss. Elangainathan -Mary Jesmina*
*Old Student*
*1st Year. ATI Student.*

*According to the united Nations Definition women's rights refers to the freedoms inherently possessed by women and girls of all ages, which may be institutionalized, ignored or suppressed by law, customs and behavior in a particular society.*

*These liberties are grouped together and differentiated from broader nations of human rights because they of ten differ from the freedoms inherently possessed by or recognized for men and boys and because activities for this issue claim an traditional bias against the exercise of rights and autonomy.*

- *To bodily integrity and autonomy*
- *To vote*
- *To hold public office*
- *To work*
- *To fair wages or equal pay*
- *To own property*
- *To education*
- *To enter in to legal contracts*

*In 1985 the world conference of UN was held in Nairobi which got the global attention on women's rights. UN has shown the importance about building strategies for the advance of women. The governments accepted this and worked for it. National alliance of Taiwan women's Association is the world's best example.*

*Associations like caritas Sri Lanka , women and media collective and people got together to protect women's rights in Sri Lanka. Do you know there are some young people who work to protect women's right?*


*There are a lot of young people aged 15-30 years working to protect women's rights by spending their , time, money and labour , participating for training programmes and projects. To encourage these young people there is a national award ceremony which is BCIS young community leader (YCL) awards.*

*This awards ceremony is being organized annually by the youth empowerment division of the Bandaranaike centre for international studies (BCIS). The objective of this Awards ceremony is to recognize and reward the youth community leaders of the country who have rendered commendable services in the community development sphere. Through this awards ceremony BCIS expecting a few outcomes which are:-*

- *To promote and encourage the youth*
- *To find soluations to the issues affecting the youth*
- *To create a platform for recognition of the youth at the national , policy planning level, providing a catalyst for further promotion of the youth activities in Sri Lanka.*
- *To have complied anislandwide statistical database of community development projects under taken by youth, their success, failures and obstacles.*

*The arrangements for the ceremony are done and there is very short time period to know the young community leader of the year. So you are invited to be with us to encourage the young community leaders.*

# என்றும் வாழ்க என் கிராமத்துப் பாடசாலை



திரு.மா.லோகசிங்கம்
B.B.A (Hons) Dip.in.Edu
Dip.in.Pub.Adm, Dip.in.Economics
பொருளியல் ஆசிரியர்

சாதி வெறி சூடு பிடிக்கத் தொடங்கியது மாத்திரமல்லாமல் அதன் கொடுமை உச்சநிலையினை எட்டிப்பிடித்தகாலத்தில் உத்திராவத்தையில் பாடசாலையொன்று நிறுவப்பட்டது. நம்மவர்கள் சமூகம் என்பது உத்திராவத்தை, ஊரியவத்தை, சந்தாதோட்டம், மற்றும் வராத்துப்பளை என்பனவாகும். ஆகவே நமது மத்திய பகுதி உத்திராவத்தை என்று இனங் காணப்பட்டது. மத்தியபகுதி கோடிட்டுக்காட்டுவது புவியியல் மையத்தையல்ல. இப்பகுதி மக்கள் அத்தனை பேரும் ஒற்றுமைப்பட்டாலே வெற்றி முழக்கம் செய்திட முடியும் என்பதாகும். ஆகவே எமக்கென்றொரு பாடசாலை வேண்டுமென்றெண்ணி எமது அன்னைக்கு அடித்தளமிட்ட முதலாவது பரம்பரையினர் தலைசிறந்த முன்னோடிகளே. இவ்வாறானதொரு சிந்தனையோட்டம் தொடர்ந்தும் ஆக்கிரமித்த வண்ணமே காணப்பட்டது. இந்த வகையில் தான் எதுவித திட்டமிடலுமின்றி மன உணர்வுகளின் போக்கிற்கேற்ப அடுத்த பரம்பரையினர் நூல் நிலையமொன்றை உருவாக்கியதன் மூலம் மத்திய பகுதியை மிளிர வைத்தனர். ஆனாலும் நூலக உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த திரு.சந்திரராஜாவும் குழுவினரும், உலகில் ஓரத்திற்கே சென்றுவிட்டாலும் அவர்களது மத்திய பகுதி எங்கள் பாடசாலை வளவினை மையமாகக் கொண்டதாகவே இருக்கவேண்டும்.

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அரசாங்கப்பாடசாலை ஆக்கப்பட்டிருந்தமையினால் அதன் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எதுவும் இருந்துவிட முடியாது. ஏவ்வாறாயினும் கல்வி அதிகாரிகள் அதன்பக்கம் குவிந்திருக்கவில்லை என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் அதனையும் விட மோசமானதென்று கூறக்கூடிய இன்னொரு நிதர்சனத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். வசதி படைத்தவர்கள் என்று கருதிய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சில உறவினர்கள் நம் பாடசாலையின் செயற்பாட்டினை ஒரு நேர்க்கணிய முயற்சியாக அங்கீகரித்து அதனைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதற்கும் பதிலாக அத்தகைய ஒரு முயற்சியை ஒரு முழுநிலையில் தரம் குறைப்பதும் அதனைச் சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதும் தான் ஒரு வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்வாறாக அகநிலையிலும் புறநிலையிலும் ஊற்றெடுத்த பல்வேறு காரணிகளால் மிகுந்த நெருக்கடிக்குட்பட்டிருந்தாலும் அதன் சாதனைகளும் ஆற்றல் மிகுந்த தன்மையும் இன்றைய பொன்விழாவை தலைநிமிர்ந்து தளர்ந்து விடாமல் கொண்டாடுவதற்கு வழிவகுத்துள்ளது.

எமது சமூகத்தில் வாழ்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாகவேயிருப்பது மற்றுமோர் சங்கடமாகும். இந்தவகையில் பாடசாலையில் வகுப்புக்களின் எண்ணிக்கை ஐந்துவரை மாத்திரமே காணப்படுவது பலருக்கு வேதனையளிக்குமோர் விடயமாகும். எதுவாயினும் ஐந்தாம் தரமே அதிஉயர்வான வகுப்பாக காணப்படுவதால் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய கவனம் செலுத்தப்படுவதற்கும் சிறார்களிற்கு நல்ல அடித்தளமிடுவதுமே இலக்காகவிருப்பது மற்றுமொரு வகையில் ஆரோக்கியம் நிறைந்ததொன்றாகவே அமைந்துவிடலாம். விழாவினைச் சிறப்பிக்கும் மலரதினிலே எனக்கும் ஓரிரு பக்கங்களை ஒதுக்கித்தரவேண்டும் என்றெண்ணிய எனது நண்பரும் ஆசிரியருமான திரு.சி.துரைராஜா அவர்களுக்கும் எனது பல்கலைக்கழக நண்பரும் அதிபருமான திரு.க.நித்தியானந்தன் அவர்களுக்கும், மற்றும் விழாக்குழுவினருக்கும், எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலை தொடர்பான எதுவித புள்ளி விபரங்களும் என்னிடத்தில் இல்லை என்றாலும் என் மனதிலே பதிந்துள்ள ஆழ

அகலமான சில அனுபவங்களும், இங்கு பதிக்கப்பட வேண்டிய ஒன்றென நான் கருதுகின்றேன். 1969 ம் ஆண்டு பிறக்கையிலே என் கால் பாதத்தினை தாளொன்றில் வைத்து பென்சில் கொண்டு அளவெடுத்த என் தந்தை செருப்பொன்று வாங்கித் தந்து பள்ளியிலே சேர்த்துவிட்ட அனுபவம் இன்றும் நிழலாடுகின்றது. வகுப்பு ஐந்தில் இருக்கையில் என்பெயரைப் பல தடவை கூறி அழைக்கும் எனது அன்புக்குரிய அதிபர் திருவாளர் ச.திருப்பதி அவர்களை என்றுமே மறந்தவிடமுடியாது. புகுமுகவாயில் திறப்பினை என்னிடம் தந்து வைத்த அதிபர் சற்றுத்தாமதமாக பள்ளி வந்து சேருவார். கால்ப்பக்கமாக வெள்ளை வேட்டியின் கரையை ஒரு கையில் தூக்கியபடி பாடசாலைக்கு பின்புறமாகவுள்ள மாங்காணியினூடாக நடந்துவரும் அவரது நெடிய தோற்றம் என்றும் மறக்க முடியாது. மறக்க முடியாதது மாத்திரமில்லாது உணர்வு பூர்வமாக எனது பாடசாலையினை நேசிக்கின்றேன். என் பாடசாலை கல்வியின் மூலம் பெரியதொரு பதவியை எட்டிப்பிடிக்காவிட்டாலும் காத்திரமாக இருப்பதற்கு என் ஆரம்பப்பள்ளி அனுபவங்களும் மத்திய பகுதி மீதுள்ள உறவுகளும் தொடர்புகளும் உயிரோட்டமாகவுள்ளன.

ஆங்கிலக் கல்விக்கென்று ஆசிரியராக பணிபுரிந்த திருவாளர் பரராசசிங்கம் அவர்களும் என்றும் மனதிலிருக்கத்தக்க வகையில் பதிந்து விட்டார் என்பது மகிழ்வுக்குரியதாகவுள்ளது. எங்கள் அன்புக்குரிய உறவினரும் ஆசிரியருமான திருவாளர் வ. சின்னத்தம்பி அவர்கள் எங்கள் பள்ளியில் எனக்கு ஏட்டுக் கல்வியை தந்த ஞாபகம் இல்லை என்றாலும் அவரது நடத்தையில் நான் ஈர்க்கப்பட்டு பயபக்தியுடன் அவருக்கு கட்டுப்பாட்டுடன் நடந்து வந்துள்ளேன். அவர் என்றும் நல்ல உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் ஏன்பது எனது விருப்பமாகும். ஏங்கள் சமூகத்தில் எல்லோரும் நல்ல சிந்தனைகளையும் குடும்பப்பொறுப்பும் உள்ள கடினமான உழைப்பாளிகளே. அதற்கு வழிகாட்டியது எங்கள் பள்ளியின் வழிநடத்தல்களே. அது பண்பை வளர்க்கத் தவறியதில்லை. நான் கல்வி கற்ற காலத்தை அண்டிய ஆண்டுகளில் சேர்ந்து கொண்டவர்கள் புகழ் பூத்தவர்களாகவும் மாறியிருப்பது பாடசாலையின் சாதனையைக் கோடிட்டுக் காட்டுகிறது. குறிப்பாக வைத்தியகலாநிதி அசோகன், விரிவுரையாளர் குணநேசன், பொறியியலாளர்கள் அருள்நேசன், ராஜகோபால், மற்றும் ஆசிரியர்களான சந்திரகுமாரி, உதயமோகன், போன்றோர் இப்பாடசாலையின் வெற்றிக்குரிய சாட்சிகளாவார். இன்னும் சிலரைக் கூற பெயர்கள் ஞாபகத்துக்கு வரவில்லை மன்னிக்கவும்.

சில காலங்கள் அதிபர் பதவியை அலங்கரித்த எங்கள் அன்புக்குரிய உறவினர் திருவாளர் செல்வராஜா அவர்கள் அரும்பாடுபட்டதையும் அவருடன் சேர்ந்து வாழ்கின்ற நேர்மையும், என்றும் போற்றுதற்குரியது. இது ஒரு சிறிய பாடசாலையாக இருப்பினும் தனது உயர்பட்டங்களை ஒருபுறம் தள்ளிவிட்டு எங்களோடு அதிபராக ஒத்துழைத்துக் கொண்டிருக்கும் பொன்விழா நாயகன் திரு. நித்தியானந்தன் அவர்கள் என்றும் உயர்வாளர். அவரது நேர்மையும் முகாமைத்திறனும் ஊறறிந்த உண்மையே. ஆகவே அவரைப் பயன்படுத்தி பாடசாலையை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும். இது விடயத்தில் நண்பன் துரைராஜா ஆசிரியரின் பங்கு மகத்தானதாக இருக்க வேண்டும். அவர் மேலும் பட்டங்கள் பெற்று பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்கும் கிராமத்தின் ஒற்றுமைக்கும் தலைமைத்துவத்திற்கும் பங்கெடுக்க வேண்டும் என்று இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

என்றும் எங்கள் பள்ளி சிறியதாக இருப்பினும் அதன் தரத்தைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் எல்லோரினதும் கடமையாகும். ஒரு கிராமத்தின் வளர்ச்சி என்பது அதன் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. வாழ்வில் சவால்கள் என்பது மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள போதிலும் அதற்கேற்றாற் போல் கல்வியும் பரிமாணங்களைக் கொண்டு விருத்தி அடைந்துள்ளது. இத்தகையதொரு கல்விக்கு எமது பாடசாலையில் நம் சிறார்களுக்கு நல்லதொரு அடித்தளத்தை வழங்க எத்தனிக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் இவ்விழாவிற்கு நாயகர்களாக விளங்கும் அன்புக்குரிய அதிபர் நித்தியானந்தன், ஆசிரியர் துரைராஜா, மற்றும் ஆசிரியர்கள், பங்கெடுக்கும் பழைய மாணவர்கள், நம் கிராமத்தவர் எல்லோருக்கும், நன்றியும் பாராட்டுக்களும் தெரிவிப்பது மாத்திரமல்லாமல் என் வகுப்பறை நண்பர்களான விஜயசேகரன், பார்த்தீபன், கமலதாஸன், தனபாலசிங்கம், சுவீஸ்கரன், கமலேந்திரன், லதாகாந்தி, ஜெயந்தி, புஸ்பவதனா, கலைவாணி, மற்றும் எல்லோரையும் நன்றியுடன் நினைவிருத்தி வாழ்த்துகின்றேன்.

## பள்ளிக்கு வித்திட்ட கவிஞர் பசுபதி

தீண்டாமை யெனும் கொடூர ஆதிக்கம்
ஈழத்தை வாட்டிய பல்லின வதைகள்
கீழின மக்களென தரங்கெட்ட இனவாதம்,
பள்ளிகள் தோறும் நாவலனின் வேட்டுக்கள்
வந்தனன் மகா சபை மாற்றங்கள்.
செய்தனன் பல பள்ளிகள்
உதவினன் பண்டா மாற்றங்கள்
நமெக்கென நன் நிலம் வாங்கி
நயம்பட செய்திட்டான்.
பள்ளி நிலம் வாங்கினன்
பல கதைத்து மண்டியிட்டு நவசியிடம்
ஆயிரம் இரண்டு கொடுத்து
பலர் பல கதைத்து இருந்திடினும்
வாய்ச் சொற்கள் என்னவாயினும்
கருவூலத்தின் தோற்றம் இவனே.
நாம் போற்றும் கவிஞர் பசுபதி
மூத்தஇறுக் வேதத்தின் கருவூலமாயம்
கடவுளின் தோற்றங்கள்- *(Creation of Gods)*
மறுமலர்ச்சி மக்களின் கையில் அவனிடம்
படித்தனன் வசமாகினான்.
அவனென்பது வேறு யாருமல்ல
அவன்தான் கந்த முருகேசனார்.
தெய்வத்தின் தோற்றம்
ஆன மகனின் வடிவங்கள்

- கந்தையன்

# குண்டு போடுதல் நிகழ்வும் விடயங்களும்.



திருமதி. அன்பரசி கருணாகரன்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
கோப்பாய்.

போடும் குண்டின் அளவுகள்.


பாடசாலை மாணவர்க்கானது

| வயது | ஆண் | பெண் |
|---|---|---|
| **UN 15** | **4Kg** | **4 Kg** |
| **UN 17** | **5Kg** | **4 Kg** |
| **UN 19** | **6 Kg** | **4 Kg** |
| **Over 19** | **7.26 Kg** | **4Kg** |

ஏனையோருக்கானது

இளையோர் ஆண் 5 Kg
கனிஸ்ட ஆண் 6 Kg
சிரேஸ்ட ஆண் 7.26 Kg
இளையோர் /கனிஸ்ட/ சிரேஸ்ட பெண்கள்

**குண்டு போடும் மைதானத்தின் அளவுகள்**





LAYOUT OF SHOT CIRCLE

குண்டு போடும் முறைகள்

1. நின்று போடுதல்
2. சுழன்று போடுதல்
3. பரி ஒ பிறயன் முறை/ வழுக்கிப் போடுதல்

குண்டு போடும் மைதானம்.




DETAILS OF STOP BOARD

திறன்கள்

1. முன் ஆயத்தம்
   - குண்டைப் பிடித்தல்
   - குண்டுடன் நிற்றல்
2. வழுக்குதல்/ சுழலுதல்
3. குண்டைத் தளளுதல்
4. நிலை பெறலும் வெளியேறலும்

விதிகள்

1. விருப்பமாயின் மணிக்கட்டுப் பட்டி அணியலாம்
2. வட்டத்திற்குள்ளேயே நின்று குண்டைப் போடுதல் வேண்டும்
3. வட்டத்தினுள் நிலையாக நின்றதன் பின்னரே குண்டைப் போட வேண்டும்

4. குண்டை தாடைக்குக் கீழாக கழுத்தின் கீழ்ப்பகுதியில் காறை என்புக்கு மேலாக வைத்திருத்தல் வேண்டும்
5. போடுதல் தோள் மட்டத்திலிருந்து ஒரு கையால் மட்டும் நடைபெற வேண்டும்.
6. குண்டை போடும் போது அதன் அமைவில் இருந்து கீழ் நோக்கியோ பின்புறமாகவோ கொண்ட செல்லல் கூடாது.
7. வீரர் நிறுத்தற் கட்டையின் உள் விளிம்பிலும் வட்டத்தைச் சுற்றியுள்ள உலோக உள்விளிம்பிலும் மாத்திரம் தொடங்கலாம்.
8. கிட்டிய முழுத்தானத்தில் அளத்தல் வேண்டும்.
9. வட்டத்தின் பின் அரைப்பகுதியால் மட்டுமே வெளியேறுதல் வேண்டும்.
10. போட்ட குண்டு நிலம்பட்ட பின்னரே வெளியேற முடியும்.
11. குண்டு கோணச்சிறைக்குள் மாத்திரமே போடப்பட வேண்டும்.
12. இடுப்புப்பட்டி அணியலாம் முள்ளந்தண்டு பாதுகாப்பிற்காக

குண்டு போடுதலில் காணப்படும் தவறுகள்


1. உள்ளங்கையில் குண்டு பிடித்தல் தவறாகும்.
2. தோள் பட்டையின் பின்னே குண்டை கொண்டு செல்லல் தவறாகும்.
3. குண்டு கோணச் சிறைக்குள் விழாது விடல் தவறாகும்.
4. குண்டை போடுதலின் போது உடலின் எப்பகுதியானது வட்டத்திற்கு வெளியே எவ்விடத்திலும் படுதல் தவறு ஆகும் (வெளியில் சென்று வரலாம்)
5. குண்டு நிலம்படமுன்னர் வெளியேறல் தவறு.
6. வட்டத்தின் பின் அரைப்பகுதி ஏனைய பகுதியால் வெளியேறுவது தவறு.

வீரர்களும் சந்தர்ப்பங்களும்.

1. 8 வீரர்களும் அல்லது அதற்கு உட்பட்ட வீரர்களாயின் ஒவ்வொருவருக்கும் 6 சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். இவர்களுக்கான போடும் ஒழுங்கு முறை திருவுளச்சீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும்.
2. 8 வீரர்களுக்கு மேற்பட்ட வீரர்களாயின் ஒவ்வொருவருக்கும் 3 சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு அதில் திறமையின் அடிப்படையில் 8 வீரர்களை தெரிவு செய்து பின்வளமாக 8ம் இடம், 7ம் இடம், என்ற (குறைந்த திறமையில் இருந்து கூடிய திறமை வரை) ஒழுங்கு முறையில் மேலும் 3 சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்

முதல் மூன்று சந்தர்ப்பங்களுக்கான போடுதல் ஒழுங்கு முறை திருவுளச் சீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும்.

குண்டு போடுதல் நிகழ்வில் அளத்தல்



குண்டு வீழ்ந்து ஏற்படுத்திய கிட்டிய அடையாளத்தில் அளவு நாடாவின் சைபர் புள்ளியை பிடித்து அதிலிருந்து மையப்புள்ளி வரை அளவு நாடாவை பிடித்து வட்டத்தின் உள்விளிம்பு வரை அளத்தல் வேண்டும்.

**முதலாம் இடத்தை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை.**

1. குண்டு போட்ட திறமையின் அடிப்படையில் கூடிய தூரத்தை உடைய வீரன் முதலாம் இடத்தைப் பெறுவான்.
2. முதலாம் இடத்திற்கு இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டோர் சமனாக இருந்தால் அதற்கு அடுத்ததாக உள்ள திறமையான தூரத்தைப் பார்த்து அதில் கூடிய திறமையுடையவர் முதலாம் இடத்தைப் பெறுவார். அதுவும் சமனாக காணப்பட்டால் அதற்கடுத்ததாகவுள்ள திறமையான தூரத்தைப் பார்த்தல். இப்படியே சமன் சீர் செய்யும் வரை ஆறு சந்தர்ப்பங்களையும் பார்த்தல் வேண்டும். சமன் சீர் செய்யப்படாவிட்டால் இருவருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பம் கொடுத்து வெற்றியை தீர்மானித்தல் வேண்டும்.

பயிற்சி முறை

1. குண்டைப் பரிச்சயமாக்குதல்
   - குண்டை இரு கைகளாலும் நன்றாக அளைய விடவும்.
   - கைக்குக் கை குண்டை மாற்றுதல்
   - குண்டை உடம்பைச் சுற்றி எடுத்தல்
   - தலைக்கு மேலே கைகளை முழுமையாக உயர்த்தி கைக்குக் கை குண்டை மாற்றுதல்.
   - ஒற்றைக் கையில் குண்டை நிலத்தில் விழவிட்டு நிலம்படும் முன் பிடித்தல் .

2. குண்டை முறையாகப் பிடித்தல்
   - விரல்களின் அடிப்பகுதியில் குண்டை தாங்கிப் பிடித்தல்
   - பெருவிரல், சின்னவிரல், என்பன முன்னேயம் பின்னேயும் மற்ற மூன்று விரல்களம் குண்டைத் தாங்கும் வண்ணமும் பிடித்தல்.
   - நிலத்திலிருந்து குண்டை விரல்களால் மட்டுமே எடுத்து குண்டை நிமிர்த்தும் போது அது விரல்களின் அடிப்பகுதியில் தாங்கும்.
   - விரல்களைக் கோப்பை (Cup) வடிவில் வைத்திருக்கவும்.

3. குண்டை முன்னோக்கித் தள்ளுதல்
   - முழங்கைகள் வெளிநோக்கி இருக்கும் வண்ணம் கைகளால் குண்டை நெஞ்சுக்கு நேரே பிடித்தல்.
   - சமநிலையைப் பேணிய வண்ணம் கால்களை தோள்மூட்டு அகலத்திற்கு வைத்த வண்ணம் நிற்றல்.
   - முழங்காலை நிமிர்த்தி உயரும் வேளை கைகளால் குண்டை முன்னோக்கித் தள்ளவும் குண்டை விடும் போது நுனிக்கால்களுக்கு வரவும்.
   - மணிக்கட்டு, விரல்களின் உச்சப்பயனைப் பெறவும்.
   - குண்டை உயர்த்தி அனுப்ப வேண்டிய உயரத்தில் கயிற்றைக் கட்டி விடவும்.

4. குண்டை முறையாகத் தாங்கி முன்னே **தள்ளுதல்.**
   - உடற் சமநிலையைப் பேணிய வண்ணம் போடும் திசையைப் பார்த்து நிற்றல்.
   - குண்டை முறையாகத் தாங்குதல்.



KEMA Beauty
Make up Centre
Reg No: VN/N/B.R/547
கேக் ஐசிங்
(திருமணம், பிறந்த நாள் மற்றும் வைபவங்களுக்கு ஏற்ற வகையில்)
மணமகள் அலங்காரம்
(கெயார் ஸ்ரைல், பேசியல் உடைகளுக்கு ஏற்ற வகையில்)
வர்ணம் பூசுதல்
(சாரி பெயின்ரிங், கிளாஸ் பெயின்ரிங், துணி பெயின்ரிங்)
ஓடர்கள் உடனுக்குடன் செய்துகொள்வதற்கு
நாடவேண்டிய ஒரே இடம்
கேமா அழகுக்கலை நிலையமே
பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றன
கேமா
அழகுக்கலை நிலையம்

## தூரநோக்கு- Vision

மாறிவரும் உலகிற்கேற்ப தம்மை தயார்படுத்திக் கொள்ளக் கூடிய மாணவர் சமூகம்.

## பணிக்கூற்று- Mission

எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய வினைத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்க, பொருத்தமான ஆசிரியர் வாண்மையை விருத்தி செய்வதுடன், கலை, கலாச்சாரத்தின் மூலம் சமூகத்தையும் உள்வாங்குதல்.

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்கவே
நீடுழி வாழ்கவே
வளரும் கலைகள் அருளும்
கலைமகள் அரசி வாழ்கவே

வாழ்க.............

புலோலி கிழக்கில் அரசினர் தீந் தமிழ்
கலவன் பாடசாலை பூஞ்சோலை
புனித மெய்ஞ்ஞான கீதப்
பேரிசை முழங்கிட

வாழ்க............

வெந்தணல் வீழ்ந்த பொன்னது போலவே
செந்தமிழோடு ஆங்கிலம் கணிதம்
உவந்திட நா கிடும்
உயர் மிகு சாலை

வாழ்க..............

பண்ணும் நீயே பரதமும் நீயே
பாடவைத்தனன் பயன் தருபவள் நீயே
எண்ணிடவே சிறார்
துள்ளிடும் சாலையாம்

வாழ்க..............

நற்றமிழ் வாசம் புவியெங்கும் ஓங்கும்
நானில மெங்கும் புகழ்மணம் வீசும்
நற்றவ வானிலும்
நனி சிறந்த சாலையாம்

வாழ்க...................

தானங்கள் யாவினும் மேன்மையாம் கல்வி
தானத்துக்கோர் நிகர் ஏதடி பாரில்
சான்று நிறைந்த கலைப்
பொக்கிசம் எம் சாலை

வாழ்க....................

## நன்றியுரை

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்பது பொய்யா மொழி இதற்கமைவாக எமது பொன் விழா மலர் முழுமை பெற்று வெளிவர அருள்பாலித்த இறைவனுக்கு வணக்கம்

பொன் விழா மலரின் ஊடாக எமது பாடசாலையும் அதிபர், ஆசிரியர், மாணவர்களையும் வாழ்த்தி ஆசியுரைகளையும் வாழத்துரைகளையும் வழங்கி உதவிய மாண்புமிகு பெரியவர்களுக்கும் பார்ப்பதற்கு மட்டுமல்ல படிப்பதற்கும் தூண்டவல்ல கட்டுரை ஆக்கங்களையும் ஆக்கித் தந்த ஆற்றல்மிக்க ஆசான்கள் மற்றும் அறிவுசால் சான்றோர்க்கும், பாடசாலைக் காவலனாய் பரிவோடு காத்துவரும் பாசமிகு அதிபர் திரு. க. நித்தியானந்தன் அவர்கட்கும், இவ் விழாவை நடத்துவதற்கு முனைப்போடு முந்நின்று பெருநிதியம் உருவாக நிதி அன்பளிப்புச் செய்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அன்பர்கள் அனைவருக்கும் நிழற்படங்கள் ஆக்கித்தந்த ஆசிரியர் திரு. க. ஸ்ரீஸ்குமார் அவர்கட்கும் குறுகிய காலத்தில் மிகவும் நேர்த்தியான முறையில் இந்நூலை அச்சிட்டுத் தந்த லக்ஷ்மி ஓவ்செற் பிறின்ரேஸ், நவிண்டில், கரவெட்டி அச்சகத்தினருக்கும் மேலும் இந்நூல் சிறப்புற அமைய உதவிய ஆசிரியர்கள் V.சுதர்சன், S.சிவதாசன், T.துஷ்யந்தினி, V.கௌசல்யா,ஆகியோருக்கும். மற்றும் சகல விதங்களிலும் எங்களோடு ஒத்துழைத்து இம் மலர் வெளிவர உதவிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி

மலர் குழுவினர்.

